E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2022 ஒக்டோபர் 22 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 90 இல. 250 | Saturday 22, October, 2022 | 14 பக்கங்கள் | 40/-

## பூரண அரச மரியாதையுடன் வண. ஸ்ரீநிவாச நாயக்க தேரரின் தகனக்கிரியைகள் இன்று

**திறப்பனை தினகரன் நிருபர்**



அமரத்துவமடைந்த அநுராதபுரம் மகா நிக்காயாவின் எட்டாவது தலைவரும், மகா நிக்காய மல்வத்து மகா விஹாரதிபதி வடமத்திய மாகாண 06

## பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றங்கள் செய்வது அவசியம்

### விரைவாக முன்னெடுக்க பிரதமர் வலியுறுத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பாராளுமன்ற தேர்தல் முறையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை தாமதிக்காமல் முன்னெடுக்க வேண்டுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (21) நடைபெற்ற அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், 06

### ஜனாதிபதியின் பட்ஜட் உரை நவ. 9ஆம் திகதி

## நவ.10 முதல் டிசம்பர் 08 வரை வரவு - செலவு திட்ட விவாதம்

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று ஆராய்வு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரை, நிதி அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் எதிர்வரும் நவம்பர் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படவுள்ளது.

நேற்றைய தினம் பாராளுமன்றக் கட்டடத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், இது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. 06

### பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப:

## பூரண ஒத்துழைப்பை வழங்குவதாக IMF, உலக வங்கி பிரதிநிதிகள் உறுதி

### சபையில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீளக் கட்டியெழுப்ப, முழுமையான ஒத்துழைப்பு வழங்கவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனரென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிதி, மறுசீரமைப்பு தொடர்பில் எதிர்வரும் நவம்பர் முதல் வாரத்திற்குள் தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச நாணய நிதியம் 06

# 22 ஆவது திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றம்

## ஆதரவாக 179, எதிராக ஒரு வாக்கு

### சரத் வீரசேக்கர எம்.பி எதிராக வாக்களித்தார்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் பிரதான எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் 178 மேலதிக வாக்குகளினால் நேற்று சபையில் நிறைவேற்றப்பட்டது.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகள் அளிக்கப்பட்ட நிலையில் எதிராக 1 வாக்கு மட்டுமே பதிவானது.

அதேவேளை ஆளும் கட்சியில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, மற்றும் பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தலைமையிலான பசில் ராஜபக்ச ஆதரவு அணியினர் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. இவ்வாறு 44 பேர் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் கடந்த பாராளுமன்ற அமர்வின் பொது விவாதத்திற்கு எடுக்கப்பட்டு நிறைவேற்றப்படவிருந்த போதும் அரச தரப்பான பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் சாகர் காரியவசத்தின் எதிர்ப்பினால் விவாதத்திற்கு எடுக்கப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டது.

நேற்றும் நேற்று முன் தினமும் இரண்டு நாட்கள்

**மஹிந்த ராஜபக்ச உட்பட 44 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை**

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூல இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில் நேற்று மாலை 6.15 மணிக்கு வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அதனையடுத்து இடம்பெற்ற இலத்திரனியல் முறையிலான வாக்கெடுப்பில் 22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக 179 வாக்குகளும் எதிராக ஒரு வாக்கும் அளிக்கப்பட்டன.

சட்ட மூலத்துக்கு ஆதரவாக ஆளும் கட்சியுடன் இணைந்து எதிர்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக்கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ் மக்கள் தேசிய கூட்டணி, ஜீ.எல் பீரிஸ் , விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான சுயாதீன எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வாக்களித்த அதேவேளை ஆளும் தரப்பில் முன்னாள் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எம் பி மட்டுமே எதிராக வாக்களித்தார்.

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்தை நிரைவேற்ற அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையான 151 வாக்குகள் தேவையான நிலையில் 179 வாக்குகள் அளிக்கப்பட்டன. 06

## நிர்மாணத்துறையின் சவால்களை வெற்றிகொள்ள உடனடி நடவடிக்கை

### ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்



நிர்மாணத்துறையில் எழுந்துள்ள சவால்கள் மற்றும் உத்தேச எதிர்கால செயல்திட்டங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் (20) ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையில் நிர்மாணத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது. அத்துடன், நடுத்தர வருமானம் பெறுபவர்களுக்கான வீட்டுத்திட்டங்கள் மற்றும் வீதிகளை நிர்மாணிப்பதில் 06



## பத்து வருட கால இலக்குடன் தேசிய கல்விக் கொள்கை

### கல்வி அமைச்சர் சுசில் சபையில் தெரிவிப்பு

03

## பாடசாலைகளுக்கு விடுமுறை அறிவிப்பு



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தமிழ் பாடசாலைகளுக்கு விஷேட விடுமுறை வழங்கப்படுவதாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

விஷேட விடுமுறைக்கு பதிலீடாக தமிழ்ப் பாடசாலைகள் எதிர்வரும் (29) சனிக்கிழமை நடாத்தப்படுமென்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தீபாவளி பண்டிகைக்கு மறுநாள் தமிழ்ப் பாடசாலைகளில் மாணவர்களின் வருகை பெரும்பாலும் 06

## நிலையான மின்கட்டணத்தை பேணுவது தொடர்பில் ஆலோசனை



நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக உற்பத்தி தொழில் துறையை வீழ்ச்சியடையாமல் பாதுகாக்கவும், முதலீட்டாளர்களை ஊக்குவிக்கவும், நிலையான மின் கட்டணத்தை பேணுவது தொடர்பில் தேசிய சபையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கான குறுகிய மற்றும் நீண்டகால திட்டங்களை இனங்காண்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன், மின்சார தேவை தொடர்பில் அதிக கேள்வி நிலவும் நேரத்துக்கும் மற்றும் குறைந்த கேள்வி 06

## மகாவலி, களு, களனி கங்கைகளின் நீர்மட்டம் திடீரென அதிகரிப்பு

### மேல் கொத்மலையில் நான்கு வான்கதவுகள் திறப்பு!

**ஹற்றன் சுழற்சி நிருபர்**



மகாவலி, களு கங்கை மற்றும் களனி கங்கை ஆறுகளின் நீர்மட்டம், பல இடங்களில் விரைவாக அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

களனி ஆற்றின் கித்துல்கல 06

## கோழி இறைச்சி விலையில் திடீர் வீழ்ச்சி

### ஒரு கிலோ 1,080 ரூபாவாகிறது



கோழி இறைச்சியின் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவிக்கிறது.

இதன்படி, ஒரு கிலோ கோழி இறைச்சியின் விலையை 1,080 ரூபா வரை குறைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந்த சங்கத்தின் ஏற்பாட்டாளர் சுஜீவ தம்மிக்க தெரிவிக்கின்றார்.

எதிர்வரும், பண்டிகை 06

### மூத்த இலக்கியவாதி

## தெளிவத்தை ஜோசப் நேற்று காலமானார்



இலங்கையின் மூத்த எழுத்தாளர், நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர் சாஹித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப் தனது 88 ஆவது வயதில் காலமானார். அவரது குடும்பத்தினர் இதனை உறுதிப்படுத்தினர்.

சந்தனசாமி ஜோசப் என்ற இயற்பெயரைக் கொண்ட 06

## புதிய ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை

### இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல்



வரி செலுத்துதலின் அடிப்படையில், புதிய ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், சமூக பாதுகாப்பு சபையினூடாக தொழில்முனைவோர், வர்த்தகர்கள் மற்றும் 06

### 13 ஆவதை அன்று எதிர்த்தது போலல்லாது

## 22 க்கு அனைவரும் பூரண ஆதரவு வழங்க வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சபையில் தெரிவிப்பு


**லோரன்ஸ் செல்வநாயகம்**



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை எதிர்த்தவர்களே தற்போது அதனை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளனர். இது காலம் கடந்த ஞானமாக இல்லாது 22 ஆவதுக்கும் அனைவரும் பூரண ஆதரவு வழங்க வேண்டுமென, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா 06

## நிலக்கரி ஏற்றிய கப்பல் அடுத்த வாரம் நாட்டுக்கு

### லங்கா நிலக்கரி நிறுவனம் தெரிவிப்பு



நிலக்கரி கப்பலொன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (25) நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக நிலக்கரி நிறுவனத்தின் பொது முகாமையாளர் நாமல் ஹேவகே தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட நிலக்கரியை ஏற்றிய கப்பலே, இங்கு வருகிறது. 06

## அரசியலில் ஈடுபட இம்ரான்கானுக்கு ஐந்து வருடத் தடை

### நீதிமன்றம் தீர்ப்பு



அரசுக்குக் கிடைத்த பரிசுப் பொருட்களை சட்டவிரோதமாக விற்ற குற்றச்சாட்டில், பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் 06

## 100 சிறார்களை பலியெடுத்த திரவ மருந்து நாட்டில் இல்லை!

### தனியார் மருந்தக உரிமையாளர் சங்கம் தெரிவிப்பு

இந்தோனேஷியா மற்றும் கம்பியா ஆகிய நாடுகளில் நூற்றுக்கும் அதிகமான சிறார்களின் உயிரைக் காவு கொண்ட பாணி மற்றும் திரவ மருந்துகள் இலங்கையில் பயன்பாட்டில் இல்லையென தனியார் மருந்தக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஔடதங்களை பதிவு செய்யும்போது, மருந்து கட்டுப்பாடு அதிகார சபையினால் அமுல்படுத்தப்படும் கடும் சட்டங்களுக்கு மத்தியில் தரம் கூடிய மருந்துகள் மாத்திரமே நாட்டுக்குள் இறக்குமதி செய்ய அனுமதி கிடைக்குமென அந்த சங்கத்தின் பொருளாளர் மஞ்சுள ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். 06

## உயிரிழந்தோரின் காணிகளுக்கு போலி உறுதி தயாரித்தவர் கைது;

### சம்மந்தப்பட்ட அனைவருக்கும் நீதிமன்றம் அதிரடி!

யாழ்ப்பாணம் நகரில் போலியான உறுதிகள் தயாரிக்கப்பட்டு, உயிரிழந்தவர்களின் காணிகள் மோசடி செய்யப்பட்டுள்ளன. இம்மோசடியில், சம்பந்தப்பட்ட அனைவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து நடாத்தப்பட்ட விசாரணையில்,

யாழ்ப்பாணம் சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவினர், ஒருவரை கைது செய்துள்ளனர். கைதான சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆஜர்படுத்திய பொலிஸார் பி, அறிக்கையை தாக்கல் செய்தனர். யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் திருமதி நளினி சுபாஸ்கரன் முன்னிலையில், 06

## வாகன விபத்தில் தாய், மகன் பலி



முச்சக்கர வண்டியொன்று டிப்பர் வாகனத்துடன் மோதியதில், பெண்ணொருவரும் அவரது மகனும் உயிரிழந்தனர். இதில், காயமடைந்த பெண்ணின் கணவரும், மற்றொரு மகனும் பொல்கஹவெல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

கொழும்பு-குருநாகல் பிரதான வீதியின் அலவ்வ, வலகும்புர பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

42 வயதுடை தாய் மற்றும் அவரது 18 வயது மகனே இவ்வாறு உயிரிழந்தனர். இவர்கள் பொரலஸ்கமுவ பிரதேசத்தை சேர்ந்தவர்களென பொலிஸார் 06

# சர்வதேச செய்திகள்

# ஒரு வாரத்திற்குள் பிரிட்டனின் புதிய பிரதமரைத் தேர்வு செய்யப் போட்டி

## முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் போட்டியிட வாய்ப்பு




பிரிட்டனில் குறுகிய காலம் பிரதமர் பதவி வகித்தவராக 45 நாட்களுக்குள் லிஸ் டிரஸ் பதவி விலகிய நிலையில் ஒரு வாரத்திற்குள் அடுத்த தலைவரை தேர்வு செய்யும் தேர்தல் பூர்த்தி செய்யப்பட்டு புதிய பிரதமர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சிக்குள் பெரும் பிளவு வெடித்திருக்கும் சூழலில் புதிய தலைமைக்கான தெளிவான வேட்பாளர்கள் இல்லாமல் உள்ளது.

நாடு பெரும் பொருளாதார பின்னடைவை நோக்கிச் செல்லும் நிலையில் தேர்வாகும் புதிய தலைவர் அந்த சவாலை எதிர்கொள்ள வேண்டி உள்ளார்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சுவெல்லா பிரவர்மன் பதவி விலகி ஆளும் கட்சிக்குள் எதிர்ப்பு வலுத்ததை அடுத்தே டிரஸ் கடந்த வியாழக்கிழமை (20) திடீரென இராஜினாமா அறிவிப்பை வெளியிட்டார்.

இந்நிலையில் பிரிட்டனில் அடுத்த பிரதமர் யார் என்பது பற்றி குழப்ப சூழல் ஏற்பட்டுள்ளது.

ஆளும் கன்சர்வேட்டி கட்சி தலைவராக தேர்வு செய்யப்படுபவரே அடுத்த பிரதமராக வர முடியும் என்ற நிலையில் அதற்கான வேட்புமனுக்கள் ஏற்பது வரும் திங்கட்கிழமை நண்பகலுடன் முடிவுக்கு வரவுள்ளது.

பாராளுமன்றத்தில் தற்போது 357 உறுப்பினர்களை பெற்றிருக்கும் கன்சர்வேட்டிவ் கட்சியின் அடுத்த தலைவராக வருபவர் குறைந்தது 100 எம்.பிக்களின் ஆதரவை பெற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த ஜெரேமி ஹண்ட் தலைமைக்கு போட்டியிடுவதில்லை என்று கூறியிருக்கும் நிலையில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கிற்கு ஆதரவு அதிகம் உள்ளது. கடந்த முறை தலைமை போட்டியில் அவர் இறுதி வாக்கெடுப்பு வரை முன்னேற்றம் கண்டே டிரஸிடம் தோல்வி அடைந்தார்.

இதேநேரம் முன்னாள் பிரதமர் பொரிஸ் ஜோன்சனும் தேர்தலில் போட்டியிடலாம் என்று கூறப்படுகிறது. இவர்கள் தவிர கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த பென்னி மார்டண்ட், பாதுகாப்புத்துறை செயலாளர் பென் வாலஸ் ஆகியோரும் பிரதமர் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளது.

எனவே வேட்பாளர்கள் தொடர்பான அறிவிப்பு வெளியான பின்னரே, வெற்றி வாய்ப்புகளை கணிக்கும் சாத்தியங்கள் ஏற்படும்.

கட்சியின் தேர்தலில் வெல்லும் போட்டியாளர் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவராக ஆவார். அவரிடம் ஆட்சியமைக்க பிரிட்டிஷ் அரசர் அழைப்பு விடுப்பார்.

எனினும் டிரஸின் இராஜினாமா உரையை அடுத்து உடன் பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டும் என்று லேபர் கட்சித் தலைவர் சேர் கீர் ஸ்டாமர் மற்றும் ஏனைய எதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்துள்ளன. 12 ஆண்டு கால கன்சர்வேட்டிவ் கட்சியின் தோல்விக்குப் பின்னர், இந்த சுழல் கதவு போன்ற குழப்ப நிலைக்குப் பதிலாக நல்ல ஆட்சியைப் பெறும் தகுதி பிரிட்டன் மக்களுக்கு உண்டு என்று ஸ்டாமர் கூறினார்.

ஜனவரி 2025இல் தான் அடுத்த பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது. ஒருவேளை புதிய பிரதமர் விரும்பினால், பொதுத்தேர்தல் நடைபெறலாம்.

லிஸ் டிரஸ்ஸின் நிதியமைச்சரான க்வாசி க்வார்ட்டெங் கடந்த செப்டம்பர் 23ஆம் திகதி ஒரு மினி பட்ஜெட்டை அறிவித்தார். இந்த பட்ஜெட்டில் 45 பில்லியன் பவுண்ட் அளவுக்கு வரிக் குறைப்பு அறிவிக்கப்பட்டது.

இதனால், பங்குச் சந்தை தடுமாறியது. இந்த மினி பட்ஜெட் பிரிட்டனில் நம்பிக்கையை குலைத்த காரணத்தால், டொலருக்கு எதிராக பிரிட்டிஷ் பவுண்ட் நாணயத்தின் மதிப்பு வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்தது. இதையடுத்து, வருமான வரியை குறைப்பதற்கு மேற்கொண்ட தமது முடிவை கைவிடுவது என பிரதமர் லிஸ் டிரஸ்ஸும், நிதியமைச்சர் க்வாசி க்வார்ட்டெங்கும் முடிவு செய்தனர். இந்தக் குழப்பமே டிரஸ் மீது தமது சொந்தக் கட்சிக்குள் எதிர்ப்பு வலுக்கக் காரணமானது. டிரஸின் பதவி விலகலுடன் கன்சர்வேட்டிவ் கட்சி கடந்த நான்கு ஆண்டுகளில் நான்காவது ஒரு தலைவரை தேர்ந்தெடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

# கசக் மாநாட்டில் முன்னேற்றம்



கசகஸ்தானில் நடைபெற்ற ஆசியாவில் தொடர்பு மற்றும் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்கான மாநாட்டின் ஆறாவது உச்சிமாநாடு, பிராந்திய மற்றும் துணை பிராந்திய நிதி ஒத்துழைப்பு மற்றும் நாடுகளை உள்ளடக்கிய வளர்ச்சிக்கான சிறந்த நிலைமைகளை உருவாக்குவதில் முன்னேற்றம் கண்டதாக கசகஸ்தான் ஜனாதிபதி காசிம் ஜோமார்ட் டோகாயேவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அமைப்பின் அடுத்த இரண்டு ஆண்டு தலைமைத்துவத்தை மேற்கொள்ளும் திசைகளை டோகாயேவ் தனது ஆரம்ப உரையில் கோடிட்டுக் காட்டினார். ஐ.நா உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்பு மூலோபாயங்களை செயற்படுத்துவதற்கான அமைப்பின் திட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி இந்த உச்சிமாநாட்டில் பேசப்பட்டது.

# வெளிநாட்டு முதலீட்டை கவர இந்தியா முயற்சி




பெரும்பாலான பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியாவை கவர்ச்சிகரமான முதலீட்டு தளமாக காணும் நிலையில் அடுத்த ஐந்து ஆண்டுகளில் 475 பில்லியன் டொலரின் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் மூலம் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சியில் இந்தியா கவனம் செலுத்தியுள்ளது.

கடந்த தசாப்தத்தில் இந்தியாவில் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதோடு பெருந்தொற்று மற்றும் பூகோள அரசியல் நிலைமைக்கு மத்தியிலும் 2022 நிதியாண்டில் இந்தியாவுக்கு 84.8 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லாவோஸில் பணவீக்கம் உச்சம்



லாவோஸ் நாட்டின் பணவீக்கம் கடந்த 22 ஆண்டுகளில் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு 23.6 வீதமாக அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் புள்ளிவிபரவியல் பணியகம் தெரிவித்துள்ளது.

அந்நியச் செலாவணி கையிருப்பு குறைவடைந்து பணவீக்கம் அதிகரித்து வருவதையிட்டு அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்டவை விரைவாகக் குறைவடைந்து வருவதோடு மக்களின் கொள்வனவு சக்தியும் பெரிதும் வீழ்ச்சியடைந்து வருவதாக அந்நாட்டு பொருளாதார நிபுணர்கள் கவலையை வெளிப்படுத்தியுள்ளனர். லாவோஸ் தன் வெளிநாட்டு கடனில் அரைவாசியை சீனாவிடமிருந்து பெற்றுள்ளதுமை குறிப்பிடத்தக்கது.

# சூடான் இன மோதல்களில் 2 நாட்களில் 150 பேர் பலி



சூடானின் தெற்கு புளூ நைல் மாநிலத்தில் நிலப் பிரச்சினை காரணமாக வெடித்துள்ள புதிய இன மோதல்களில் இரண்டு நாட்களில் குறைந்தது 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மைய மாதங்களில் வன்முறை அதிகரித்திருக்கும் நிலையில் புளூ நைல் மாநிலத் தலைநகர் டமாசினில் கடந்த வியாழக்கிழமை கூடிய ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள், நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டது மற்றும் வன்முறைகளை கண்டிக்கும் கோசங்களை எழுப்பினர்.

“கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைக்கு இடையே பெண்கள், சிறுவர்கள் மற்றும் வயதானவர்கள் உட்பட மொத்தம் 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர்” என்று வாட் அல் மாஹி மருத்துவமனை தலைவர் அப்பாஸ் மூசா தெரிவித்துள்ளார். வன்முறைகளில் சுமார் 86 பேர் காயமடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஹவுசா மற்றும் போட்டிக் குழுக்களுக்கு இடையே நிலப் பிரச்சினை குறித்து சச்சரவு ஏற்பட்டதை அடுத்தே கடந்த வாரம் மோதல் வெடித்தது. இதன்போது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டிருப்பதோடு வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டுள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான குடியிருப்பாளர்கள் வெளியேறியுள்ளனர்.

இந்த வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பேரணி நடத்திய நூற்றுக்கணக்கான மக்கள் மாநில ஆளுநரை பதவி நீக்குமாறு அழைப்பு விடுத்தனர்.

# சாட் நாட்டில் இராணுவம் சரமாரி சூடு: ஆர்ப்பாட்டக்காரர்கள் பலி



சாட் நாட்டின் இரு மிகப் பெரிய நகரங்களில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பாதுகாப்புப் படையினர் சூடு நடத்தியதில் பல டஜன் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

தலைநகர் ஐமேனாவில் 30 பேர் கொல்லப்பட்டதாக சாட் அரச பேச்சாளர் அசீஸ் மஹமட் சலேஹ் தெரிவித்துள்ளார். எனினும் கடந்த வியாழக்கிழமை இந்தப் பேரணியை ஏற்பாடு செய்தவர்கள் 40 பேர் உயிரிழந்ததாக குறிப்பிட்டுள்ளனர்.

சாட்டின் இரண்டாவது மிகப்பெரிய நகரான மவுன்டோவில் மேலும் 32 பேர் கொல்லப்பட்டுள்ளனர். எனினும் உயிரிழப்பு 60க்கு மேல் இருப்பதாக பெயர் குறிப்பிடாத அந்த நகரின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கண்ணீர்ப் புகைப் பிரயோகத்தையும் மீறி முன்னேறியதை அடுத்தே பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர்.

அதிகாரத்தை கையளிப்பதாக இராணுவம் உறுதி அளித்த திகதியை ஒட்டியே ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியில் இறங்கி இருந்தனர். எனினும் அந்தத் திகதி மேலும் இரு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இராணுவ முன்னரங்கு பகுதிக்கு விஜயம் செய்த நாட்டின் நீண்டகால ஜனாதிபதி இத்ரிஸ் டெபி கடந்த 2021 ஏப்ரலில் போர்முனையில் கொல்லப்பட்டதை தொடர்ந்தே நாட்டில் அரசியல் பிரச்சினை உச்சம் பெற்றுள்ளது.

கொல்லப்பட்ட ஜனாதிபதியின் 38 வயது மகனை இராணுவம் இடைக்கால ஜனாதிபதியாக நியமித்தமை குறிப்பிடத்தக்கது.

# ட்விட்டரில் ஆட்குறைப்புக்கு இலொன் மஸ்க் நடவடிக்கை



உலகின் பெரும் செல்வந்தர் இலோன் மஸ்க் வரும் வெள்ளிக்கிழமை (28) ட்விட்டர் நிறுவனத்தின் பொறுப்பை ஏற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திட்டமிட்டபடி நிறுவனத்தைக் கையகப்படுத்துவதற்கான ஆவணங்கள் தயார் செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது.


இருப்பினும் ட்விட்டர் நிறுவனத்தில் தற்போது வேலை செய்வோரில் பலர் பதவி நீக்கம் செய்யப்படலாம் என்று பரவலாகப் பேசப்படுகிறது. ஆனால் தலைமைத்துவப் பொறுப்பில் இருப்போர் அதை மறுக்கின்றனர்.

இலோன் மஸ்க்குடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி, எந்த ஆட்குறைப்புக்கும் திட்டமிடப்படவில்லை என்று நிறுவனம் கூறியது.

ஆனால் ஊழியர்களுக்கு வழங்கப்படும் மொத்தச் சம்பளத்தொகையில் 800 மில்லியன் டொலரைக் குறைக்கத் தற்போதைய நிர்வாகம் திட்டமிடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ட்விட்டர் நிறுவனத்தில் வேலை செய்வோரில் கிட்டத்தட்ட கால்வாசிப் பேர் அதனால் பாதிக்கப்படக்கூடும்.

# மெக்சிகோவில் தண்டவாளம் நெடுக தீ பரவி பெரும் சேதம்



மத்திய மெக்சிகோவின் அக்குவாஸ்கிளியன் நகரில் எரிபொருள் டிரக் ஒன்று விபத்துக்கு உள்ளானதை அடுத்து ரயில் தண்டவாளம் நெடுகவும் வீடுகளிலும் பாரிய தீ ஏற்பட்டுள்ளது.

இந்த சம்பவம் குறித்த வீடியோ சமூக ஊடகத்தில் பிரபலம் அடைந்துள்ளது. இந்தத் தீயினால் நகரின் பெரும்பகுதி கரும்புகையால் மூடப்பட்டிருக்கும் வானில் இருந்து எடுக்கப்பட்ட வீடியோ ஒன்றும் வைரலாகியுள்ளது. சரக்கு ரயில் ஒன்று தீயை கிழித்துக்கொண்டு செல்வதும் வீடியோ ஒன்றில் தெரிகிறது.

இந்த சம்பவத்தால் 1,500க்கும் அதிகமானவர்கள் வெளியேற்றப்பட்டதோடு சில வீடுகள் மற்றும் கார்கள் தீயில் கருகியதாக மெக்சிகோவின் எல் பல்கலைக்கழக இணையதளம் தெரிவித்துள்ளது. உயிரிழப்புகள் பதிவாகாதபோதும் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்கு உள்ளான டிரக் வண்டி ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்து எவ்வாறு நிகழ்ந்தது என்று உறுதியாகத் தெரியாதபோதும் எரிபொருள் டிரக் வண்டி ரயில் ஒன்றுடன் மோதியதாக கூறப்படுகிறது.

# பறவைக் காய்ச்சலால் நெதர்லாந்தில் 300,000 கோழிகள் கொல்லப்பட்டன



நெதர்லாந்தில் பறவைக் காய்ச்சல் பரவுவதால் நாட்டின் தென்பகுதியில் உள்ள பண்ணையில் 300,000 கோழிகள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

நெதர்லாந்தில் செப்டம்பரிலிருந்து சுமார் 30 பறவைக் காய்ச்சல் சம்பவங்கள் பதிவாயின. அந்தவகைப் பறவைக் காய்ச்சல் மரணத்தை விளைவிக்கக்கூடியது என்று தெரிவிக்கப்பட்டது.

பறவைக் காய்ச்சலால் நெதர்லாந்தில் இதுவரை 6 மில்லியன் பறவைகள் கொல்லப்பட்டன.

கடந்த ஆண்டு ஒக்டோபர் இறுதியில் அந்த வகைப் பறவைக்காய்ச்சல் நெதர்லாந்தில் பரவத் தொடங்கியதாக டச்சு உணவுப் பாதுகாப்பு ஆணையம் தெரிவித்தது.

பிரான்ஸிலும் பறவைக் காய்ச்சல் பாதிப்பு அதிகரிப்பதாகக் கூறப்படுகிறது.

## ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

கல்வி ஆண்டுக்கான (2022) கல்வி பொது தராதரப்பத்திர உயர்த்தர பரீட்சையின் விடைத்தாள்களை, திருத்தும் ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காக திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இவ்விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான திகதி எதிர்வரும் (04,11) நான்காம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

விடைத்தாள்களை திருத்துவதற்கான விண்ணப்பங்களை www.doenets.lk என்ற இணையத்தளத்துக்குள் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 011 2785231, 011 2785216 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி, அல்லது 1911 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிந்துக்கொள்ள முடியுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# சுற்றுலாத்துறையின் பிரச்சினைகளை விரைவாக தீர்க்க ஜனாதிபதி பணிப்பு

சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலம் 2023 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் இலக்குகளை அடைவதற்கான வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மற்றும் அதனை மேம்படுத்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இந்த பணிப்புரைகளை வழங்கினார்.

2023ஆம் ஆண்டுக்குள் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவார்களென எதிர்பார்க்கப் படுவதாகவும், அந்த சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதன் மூலம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரிக்க முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளுக்கான நிதிப் பரிமாற்றல், இலங்கை பற்றிய எதிர்மறையான கருத்துக்களை அகற்ற எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சுற்றுலாத்துறைக்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு விமானங்களை தரையிறக்குவதற்கு அதிக கட்டணம் அறவிடப்படுவதால் சுற்றுலாத்துறையினருக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள்



சுட்டிக்காட்டினர். இது குறித்து ஆராய்ந்து பிரச்சினையைத் தீர்க்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறுஜனாதிபதியின்தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அவர்களின் முழுப் பயணத்தையும் உள்ளடக்கும் வகையில் கையடக்கத் தொலைபேசி செயலி (Mobile App) ஒன்றை. 06

## பெற்றோலிய உற்பத்தி பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்

பாராளுமன்றத்தில் கடந்த (18) செவ்வாய்க்கிழமை நிறைவேற்றப்பட்ட 2002 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை திருத்துவதற்கான பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்ட மூலத்தை சான்றுரைப்படுத்தியதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நேற்று (21) பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

புதிதாக அனுமதிபெறுபவர்களுக்கு அனுமதிப் பத்திரங்களை வழங்குதல், பெற்றோலிய உற்பத்திப் பொருட்களை இறக்குமதி செய்தல் மற்றும் விநியோகித்தல் தொடர்பில் பங்குதாரர்களை தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடுகளை செய்தல் என்பவையே இந்தத் திருத்தத்தின் நோக்கமாகும்.

இதற்கமைய, 2022 06

# பத்து வருட கால இலக்குடன் தேசிய கல்விக் கொள்கை

### சபையில், கல்வி அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பத்து வருடங்களை இலக்காகக் கொண்ட தேசிய கல்விக் கொள்கையை அமுல்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அது விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படும் என்றும் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கல்வித்துறையை முன்னேற்றி அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும் வகையில், பத்து வருட கல்விக்கொள்கையை தேசிய கல்வி ஆணைக்குழு தயாரித்து வருவதாக சபையில் சுட்டிக்காட்டிய அவர், அது விரைவில் ஜனாதிபதிக்கு கையளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் டீ. வீரசங்க எம் பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

கல்வி கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டியது அவசியம்.

தற்போதுள்ள கல்வி கட்டமைப்பு இக்காலத்துக்கு பொருத்தமானதல்ல. அதனால் 10வருட தேசிய கல்விக்கொள்கையை தேசிய கல்வி ஆணைக்குழு தயாரித்து வருகின்றது.

குறிப்பாக தற்போது பாடசாலைகள் வகைப்படுத்தப்பட்டிருப்பது கல்வித்துறை அதிகாரிகளுக்கு மாத்திரமே புரிகின்றது. 06

# வலு சக்தித் துறை மறுசீரமைப்பு குழு அறிக்கை: 02 வாரங்களில் சமர்ப்பிப்பு

### தேசியப் பேரவைக்கு அமைச்சர் கஞ்சன அறிவிப்பு



வலு சக்தித் துறை மறுசீரமைப்புடன் தொடர்புடைய குழுவின் அறிக்கையை இரண்டு வாரங்களில், தேசியப் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தேசிய சபைக்கு அறிவித்தார்.

இந்த வலுசக்தி முறையை, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை மற்றும் இலங்கை மின்சார சபை என்பவை செயற்படுத்தவுள்ளன.

தேசிய பேரவை, தலைவர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் எதிர்க்கட்சி முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரிஎல்ல ஆகியோரின் பங்குபற்றலுடன் (20) பாராளுமன்றத்தில் கூடியது.

இலங்கை மின்சார சபை, இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள், அன்றைய தினம் தேசிய பேரவை முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தன. இங்கு, இந்நிறுவனங்களின் அதிகாரிகள், வலு சக்தி துறையின் முன்னேற்றம் தொடர்பான கருத்துக்களை முன்வைத்தனர்.

இந்தக் கூட்டத்தில், தேசிய பேரவையின் உப குழுவின் தலைவர்களான பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகியோர் தமது உப குழுக்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில்

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் கஞ்சன விஜேசேகர, அமைச்சர் நசீர் அஹமட், இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க 06

## 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் தேர்தல் இடாப்பில் உள்ளடக்கம்

2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்தவர்களின் பெயர்கள் வாக்காளர் பதிவில் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று பொதுமக்களைக் கோரியுள்ளது.

உங்கள் பெயர் தேர்தல் இடாப்பில் உள்ளதா? என்பதை தேர்தல் இணையதளம் மூலமாக சரிபார்க்க முடியும். பெயர்களை சரிபார்க்க https://bit.ly/3SkySKi இணைய தளத்தை கிளிக் செய்யுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

உங்கள் பெயர் ஒருவேளை தேர்தல் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லையாயின், உடனடியாக எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னதாக கிராம அலுவலர் தொடர்பு கொண்டு பதிவு செய்துகொள்ளலாம்.

# டிஜிட்டல் தொழில்நுட்பத்தினூடாக முதலீட்டாளர்களுக்கு அனுமதி

### குறுகிய, நடுத்தர, நீண்டகால கொள்கை தயாரிப்புக்கு ‘தேசிய சபை’யில் ஆராய்வு



இலங்கையை முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான நாடாக மாற்றுவதற்கும், இந்நாட்டிலுள்ள தொழில்முனைவர்கள் மற்றும் முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்கும் இலங்கை முதலீட்டுச் சபை தயாரித்துள்ள எதிர்காலத் திட்டங்கள் குறித்து குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண, தேசிய சபையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைத் தயாரிப்புக்கான முன்னுரிமைகளை அடையாளம் காண்பதற்கான தேசிய பேரவையின் உப குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் (20) கூடியபோதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இவ்வாறாக, தொழில்முனைவு மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில், இலங்கை முதலீட்டுச் சபையின் குறுகிய கால, நடுத்தர மற்றும் நீண்ட கால திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், தொழிலாளர் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பாகவும் முதலீட்டுச் சபையின் முன்மொழிவுகள் மற்றும் யோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

அத்துடன், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் அதனுடன் தொடர்புடைய பங்குதாரர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டு, முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய நீண்டகாலக் கொள்கைகளைத் தேசிய பேரவைக்குப் பெற்றுக்கொடுக்க எதிர்பார்த்திருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இங்கு தெரிவித்தார்.

இந்த உபகுழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜோன்ஸ்டன் பெர்னாந்து, சாகர காரியவசம் மற்றும் இலங்கை முதலீட்டு சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# மக்கள் எதிர்பார்க்கும் பாராளுமன்றத்தை உருவாக்குவதற்கான மாற்றங்களே தேவை

### சபையில் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தூரதிருஷ்டியுடன் மக்கள் எதிர்பார்க்கும் பாராளுமன்றத்தை உருவாக்க வேண்டிய காலம் உருவாகியுள்ளதாக இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பு வலயங்களை உருவாக்கி, புனர்வாழ்வு பணியகத்தை உருவாக்குவது ஜனநாயகம் அல்ல. அது மக்கள் எதிர்பார்ப்பும் அல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 22 ஆவது திருத்தம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், 22 திருத்தத்துக்கு ஆதரவளிக்க எமது ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. அவ்வாறு நாம் அதனை ஆதரிப்பதால், இந்த திருத்தம் மக்கள் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்காக கொண்டுவரப்படுவதாக, நான் கூற மாட்டேன் .

தொடர்ச்சியான எமது அரசியலமைப்புகள் கேலிக்குரியவையாகியுள்ளன. அவைகள் வர்ணம் பூசப்பட்டதாகவே தொடர்ந்து திருத்தப்பட்டு வந்துள்ளன. அந்த வகையில் 18ஆவது திருத்தம் ஒருவர் இரண்டு முறை ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதற்காக தனிப்பட்ட அரசியல் நோக்கங்களுக்காக கொண்டுவரப்பட்டது.

அதேபோன்று பாராளுமன்றத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் 19 ஆவது திருத்தத்தில் கொண்டிருந்த நிலைப்பாட்டையே இருபதிலும் கொண்டிருந்தனர். இவை ஒன்றுக்கொன்று 06

## கட்டணம் செலுத்தாத பாடசாலைகளின் நீர் விநியோகம் துண்டிக்கப்பட மாட்டாது

நீர் கட்டணத்தை செலுத்தாத பாடசாலைகளின் நீர் விநியோகங்களை துண்டிப்பது உடனடியாக நிறுத்தப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த, நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபையின் தலைவருடன் நடத்திய கலந்துரையாடலின் பின்னர், இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பையடுத்து நீர் கட்டணத்தை செலுத்தாத பாடசாலைகளின் நீர் விநியோகத்தை துண்டிக்கும் தீர்மானத்தை கைவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாடசாலைகளின் நீர் கட்டணங்களை செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமென்றும் அமைச்சர் கூறினார்.

அதுவரை எந்த ஒரு பாடசாலையினதும் குடிநீர் இணைப்பையும் துண்டிப்பதில்லை என நீர் வழங்கல் சபை முடிவு செய்துள்ளது.

# இலங்கை பௌத்த நாடாக இருந்தால் மாத்திரமே ஏனைய இன, மத மக்கள் சுதந்திரமாக வாழ முடியும்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

இலங்கை பௌத்த நாடாக இருந்தால் மாத்திரமே ஒற்றையாட்சியின் கீழ் ஏனைய இன,மத மக்கள் தமது மத வழிபாடுகளை முன்னெடுத்து சுதந்திரமாக வாழ முடியும் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர எம் பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படப் போவதாக தெரிவித்த அவர்,பிரிவினைவாதத்தை பலப்படுத்தும் 13 வது திருத்தம் முழுமையாக ரத்துச் செய்யப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.



அரசாங்கத்தை பலவீனப்படுத்தும் நோக்கம் பிரிவினைவாதிகளிடம் காணப்படுவதால், 22ஆவது திருத்தத்தக்கு எதிராக வாக்களிக்கத் தீர்மானித்ததாகவும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். 06

### கூரிய ஆயுதத்தால் தாக்குதல்

## வத்தளை, ஹுணுப்பிட்டியில் ஒருவர் பலி

கம்பஹா மாவட்டத்தின், கிரிபத்கொடை பிரதேசத்தில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் கிரிபத்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதிலியாகுடுவ பிரதேசத்தில் (20) நடந்ததாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்வத்தில்,பலத்த காயமடைந்த நபர் கிரிபத்கொடை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் 51 வயதுடைய ஹுணுப்பிட்டிய, வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்தவரென அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரைக் கூரிய ஆயுதத்தால் தாக்கியதாக கூறப்படும் 33 வயதான நபர், ஆயுதத்துடன் கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

உயிரிழந்தவரின் மனைவியுடன் ஏற்பட்ட முரண்பாட்டினால் ஏற்பட்ட மோதலே, இச் சம்பவமத்துக்கு காரணமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் கிரிபத்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வங்கக் கடலில் புதிய 'சிட்ரங்' புயல்

தெற்கு அந்தமான் பகுதியில் உருவாகியுள்ள வளிமண்டல சுழற்சி காற்றழுத்தம், தாழ்வு பகுதியாக வலுபெற்றுள்ளது. இது கடல் மட்டத்தில் இருந்து 7.6 கி.மீ தூரம் வரை பரந்து விரிந்துள்ளது.

வங்கக்கடலில் தென் கிழக்கு மற்றும் கிழக்கு மத்திய பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு பகுதி, வடக்கு, வட மேற்கு 06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 238.54 | 249.41 |
| கனடியன் டொலர் | 256.80 | 267.07 |
| யூரோ | 340.83 | 352.42 |
| ஜப்பான் யென் | 2.5659 | 2.6696 |
| சிங்கப்பூர் டொலர் | 239.52 | 248.06 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 423.68 | 438.67 |
| சுவிஸ் பிராங்க் | 344.01 | 357.45 |
| அமெரிக்க டொலர் | 322.72 | 334.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 831.93 |
| குவைத் டினார் | 1,028.76 |
| ஓமான் ரியால் | 814.75 |
| கட்டார் ரியால் | 85.92 |
| சவூதி ரியால் | 83.64 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 85.39 |

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321
சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 05ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு
எய்த உணர்ந்து செயல்

*செயலாற்ற வல்லவனைத் தேர்ந்து, செய்யப்பட வேண்டிய செயலையும் ஆராய்ந்து, காலமுணர்ந்து அதனைச் செயல்படுத்தவேண்டும்.*

## மக்களின் துன்பத்தைப் புரிந்து கொள்ளாத நியாயமற்ற செயல்!

எரிபொருட்களின் விலைகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு வருகின்றன. பெற்றோல், டீசல் மற்றும் எரிவாயு போன்றவற்றின் விலைகள் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளன. எரிபொருள் விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் அவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. எரிபொருட்களின் விலைகள் எதிர்காலத்தில் மேலும் குறைக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாகவே தெரிகின்றது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அதன் காரணமாகவே எமது நாட்டிலும் பெற்றோல், டீசல் மற்றும் சமையல் எரிவாயு போன்றவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. உலக சந்தையில் எரிபொருளின் விலை மேலும் குறைவடையுமாக இருப்பின், இலங்கையிலும் எரிபொருட்களின் விலைக்குறைப்பை நாம் எதிர்பார்க்கலாம். எனவே உலக சந்தையின் எரிபொருள் விலை நிலைவரத்தைப் பார்த்தே அந்த வாய்ப்பை நாம் இங்கு எதிர்பார்க்கலாம்.

இலங்கையில் எரிபொருட்களின் விலைகள் உச்சத்துக்குச் சென்றிருப்பதற்குக் காரணம் நாட்டில் கடந்தகாலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி என்பதில் எதுவித சந்தேகமும் கிடையாது. இலங்கையில் தோன்றிய டொலர் பற்றாக்குறையையடுத்து உலக நாடுகளில் இருந்து எரிபொருட்களை அதிக டொலர் கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை உருவானது. டொலருக்கான எமது நாணயத்தின் பெறுமதி அதிகரித்ததனால் இலங்கைப் பணத்தை அதிகம் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

எனவே அனைத்து எரிபொருட்களுக்கான விலைகளும் அதிகரித்தன. பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்ததையடுத்து ஒரு கட்டத்தில் ஒரு லீற்றர் எரிபொருளை 480 ரூபாவுக்கும் வாங்க வேண்டிய நிலைமை இலங்கையில் இருந்தது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கிலோமீற்றர் தூரத்துக்கு வாகனங்கள் கியூவரிசையில் நாட்கணக்கில் காத்து நின்று எரிபொருளைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையும் காணப்பட்டது.

இன்று நிலைமை அவ்வாறில்லை. 'கியூஆர் கோர்ட்' முறைமை நடைமுறைக்கு வந்த பின்னர் எரிபொருளுக்கான வரிசைகள் குறைந்து விட்டன. எரிபொருளுக்கான போராட்டங்களும் ஓய்ந்து போய் விட்டன. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுக் கொள்கின்ற நிலைமையும் இப்போது கிடையாது. வாகன உரிமையாளர்கள் ஒவ்வொருவரும் தங்களது தேவைக்கான எரிபொருளில் குறிப்பிட்ட அளவை கிரமமாகப் பெற்றுக் கொள்ளக் கூடியதொரு நிலைமை தற்போது காணப்படுகின்றது.

நீண்ட தூர பேருந்து சேவைகள் சில காலமாக எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக தடைப்பட்டுக் கிடந்தன. நீண்ட தூர பஸ்சேவைக்கான கட்டணங்களும் மிகவும் அதிகமாக இருந்தன. மக்கள் நீண்ட தூரப் பயணங்களையே பெருமளவில் தவிர்த்தும் வந்தனர். அன்றைய காலப்பகுதியில் எமது நாட்டு மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களுக்கு அளவே இல்லை.

இன்றைய நிலைமை அவ்வாறில்லை. தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் தாராளமாக நடைபெறுகின்றன. முச்சக்கரவண்டிகளுக்கான எரிபொருட்கள் கிடைப்பதனால் அவற்றின் சேவைகளும் தாராளமாக நடைபெறுகின்றன. வாகனங்களுக்கு எரிபொருட்கள் கிடைப்பதில்லையென்ற குற்றச்சாட்டை அவதானிக்க முடியாதிருக்கின்றது. வாகனப் போக்குவரத்தைப் பொறுத்தவரை இதனை சுமுகமான நிலைமையென்று தாராளமாகக் கூற முடியும்.

ஆனாலும் பயணிகள் மத்தியில் பெரும்குறையொன்று உள்ளதை மறுப்பதற்கில்லை. எரிபொருட்களுக்கான விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், அதன் பலாபலன்களை தங்களால் அனுபவிக்க முடியவில்லையென்பதே மக்களின் மனக்குறையாகும். ஒரு லீற்றர் பெற்றோலுக்கான விலை கடந்த இருபது நாட்களுக்குள் 80 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது பெற்றோல் மற்றும் டீசலுக்கான விலை இருபது நாட்களில் இரு தடவை குறைக்கப்பட்டது.

சொந்த வாகனம் வைத்திருப்போருக்கும் வருமான நோக்கத்துக்காக முச்சக்கரவண்டி, பஸ், லொறி போன்ற வாகனங்களை வைத்திருப்போருக்கும் இந்த விலைக்குறைப்பானது உண்மையிலேயே நன்மையையும் நிம்மதியையும் தந்தது. எரிபொருள் விலைக் குறைப்பானது தங்களுக்கு நன்மையைத் தருமென்று அவர்கள் நிம்மதியடைந்தனர்.

ஆனால் அந்த நிம்மதி சாதாரண மக்களான பயணிகளுக்கு இன்னுமே கிடைக்கவில்லை. முச்சக்கரவண்டி கட்டணமும் குறையவில்லை, பஸ் கட்டணங்களும் குறையவில்லை. உயர்த்தப்பட்ட போக்குவரத்துக் கட்டணங்கள் இன்னுமே குறைக்கப்படவில்லை. போக்குவரத்துக் கட்டணத்தைக் குறைக்க மாட்டோமென்று முச்சக்கரவண்டிக்காரர்களும், தனியார் பேருந்து உரிமையாளர்களும் இப்போது கூறி வருகின்றனர். பெற்றோலுக்கும் டீசலுக்கும் கணிசமான அளவு விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், கட்டணத்தைக் குறைப்பதற்கு இப்போதைக்கு வாய்ப்பில்லையென்று அவர்கள் கூறுவதில் எந்தவித நியாயமும் இல்லை.

எரிபொருட்களுக்கான விலை குறைவடையும் போது ஆட்டோக்களினதும் பஸ்களினதும் கட்டணங்களைக் குறைப்பதுதான் நியாயமாகும். மக்கள் மீதான சுமையைக் குறைக்க வேண்டுமென்ற நோக்கத்திலேயே எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன. இந்நிலையில் அதன் பயன்களை மக்கள் அனுபவிக்காதிருப்பது எந்தவகையிலும் நியாயமில்லை!

editor.tkn@lakehouse.lk

# ஈழத்து இலக்கியத் துறையின் வரலாற்று அடையாளம் அமரர் தெளிவத்தை ஜோசப்



## படைப்பிலக்கியத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடத்தை ஏற்படுத்திய அன்னாரின் மறைவு

இலங்கையின் மூத்த எழுத்தாளரும் சாகித்தியரத்னா விருது பெற்றவருமான தெளிவத்தை ஜோசப் (சந்தனசாமி ஜோசப்) தனது 88 ஆவது வயதில் சுகவீனம் காரணமாக நேற்று காலமானார். அவர் கடந்த சில மாதங்களாக சுகவீனமுற்றிருந்தார்

மலையகப் படைப்பாளிகளில் முக்கியமானவர் தெளிவத்தை யோசப். ஈழத்தின் சிறுகதையாளர், நாவலாசிரியர், இலக்கிய ஆய்வாளர் என்றெல்லாம் பன்முக ஆளுமை கொண்டவர் அவர். அறுபதுகளில் எழுதத்தொடங்கி எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக விளங்கியதுடன், இலங்கையில் மாத்திரமன்றி சர்வதேச தமிழ் ஊடகங்களில் பல்வேறு ஆக்கங்கள், கட்டுரைகளை எழுதியுள்ளார்.

உலகத் தமிழர்களால் போற்றப்படுகின்ற எழுத்தாளர் அவர். ஆறு நாவல்கள், மூன்று சிறுகதைத் தொகுதிகள் உட்பட பல நூல்களை வெளியிட்டுள்ள தெளிவத்தை ஜோசப், இலங்கையில் தயாரிக்கப்பட்ட 'புதிய காற்று' திரைப்படத்திற்கும் தொலைக்காட்சி நாடகத்துக்கும் திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார்.

பதுளை மாவட்டம் ஊவாக்கட்டவளை என்ற இடத்தில் 1934 இல் அவர் பிறந்தார். கும்பகோணம் லிட்டில் பிளவர் உயர்நிலைப் பள்ளியில் 3 ஆண்டுகள் படித்தார். பின்னர் இலங்கை திரும்பி பதுளை சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

தெளிவத்தையில் ஆசிரியராகப் பணியாற்றியவர். தன் பெயருடன் தான் வாழ்ந்த ஊரின் பெயரையும் இணைத்துக் கொண்டார். 1960 களில் தமிழ் இலக்கியத் துறையில் தடம் பதித்து, பலராலும் அறியப்படும் படைப்பாளியாக மாறினார். ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதினார். பின்னர் குறுநாவல், நாவல், விமர்சனம், ஆய்வுக் கட்டுரைகள், தொலைக்காட்சி மற்றும் வானொலி நாடகம், திரைப்படக் கதை எனப் பல தளங்களில் தடம் பதித்தார்.

மலையகம் பற்றி அறியவேண்டும் என்றால், இவரது படைப்புகளைப் படித்தால் போதும் என்கிற அளவுக்கு அந்த மக்களின் சமூக, அரசியல், பொருளாதார நிலைவரங்களை இவரது படைப்புகள் எடுத்துக் கூறின.

'காலங்கள் சாவதில்லை' என்பது இவரது முக்கியமான நாவல். அவரது ஆய்வு நூல்களான '20 ஆம் நூற்றாண்டில் ஈழத்து இதழியல் வரலாறு', 'மலையக சிறுகதை வரலாறு'ஆகியவை இவரைச் சிறந்த ஆய்வாளராக அடையாளம் காட்டின. தனது படைப்புகள் மூலம் மலையக எல்லையைக் கடந்து இலங்கை அளவில் பேசப்படும் ஈழத்தின் முக்கியப் படைப்பாளியாக அவர் திகழ்ந்தார். பல்வேறு பத்திரிகைகளுக்காக பல புனைபெயர்களில் இலக்கியக் கட்டுரைகள், இலக்கியக் குறிப்புகள், சிறுகதைகள், கவிதைகள், இலக்கியத் தகவல்களை அளித்துள்ளார்.

பல பத்திரிகைகள், இலக்கிய அமைப்புகள் நடத்திய குறுநாவல், சிறுகதைப் போட்டிகளில் பரிசு வென்றுள்ளார். வாழ்நாள் சாதனையாளர் விருது உட்பட ஏராளமான விருதுகள், கௌரவங்களைப் பெற்றுள்ளார். 'நாமிருக்கும் நாடே' சிறுகதைத் தொகுப்புக்காக இலங்கை சாகித்ய விருதை வென்றுள்ளார். இவரது 'குடைநிழல்'புதினம் 2010 இற்கான யாழ் இலக்கிய வட்டம்–இலங்கை இலக்கியப் பேரவை விருதை வென்றது. 2013 இற்கான விஷ்ணுபுரம் இலக்கிய விருதையும் பெற்றுள்ளார்.

கனடா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் உட்பட பல நாடுகள் இவரை அழைத்து கௌரவித்துள்ளன. சிறந்த இலக்கிய விமர்சகர், வழிகாட்டியாகச் செயல்பட்டு வந்த பெருமைக்குரியவர் தெளிவத்தை யோசப் ஆவார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றியிருக்கிறார்.

அவர் ஓர் எழுத்தாளராக மாத்திரமன்றி, குரும்பசிட்டி கனக செந்திநாதனுக்குப் பின்னர், இலங்கை தமிழ் இலக்கிய தகவல் களஞ்சியமாக விளங்குகிறார் என்று அண்மையில் காலமான திறனாய்வாளர் கே.எஸ்.சிவகுமாரன் பாராட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஏனைய படைப்பாளர்களின் படைப்புகளையும் வெளிக்கொணர்வதில் தமது பங்களிப்பை அவர் வழங்கி வந்துள்ளார்.

எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் மத்திய, மாகாண அரசுகளின் பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். ஊவா மாகாண சாகித்திய விருது, இந்து கலாசார திணைக்களத்தின் இலக்கிய செம்மல் விருது, அரசின் கலாபூஷண விருது, தேசிய சாகித்திய விருது, பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ் ஒன்றியத்தின் விசேட விருது, கம்பன் கழக விருது, யாழ் இலக்கிய வட்டத்தின் விருது, மட்டக்களப்பு இலக்கிய மன்றத்தின் விருது, மத்திய மாகாண சாகித்திய விருது, மேல் மாகாண சாகித்திய விருது, கொடகே வாழ்நாள் சாதனையாளர் விருது, விஷ்ணுபுரம் இலக்கிய விருது உள்ளிட்ட பல விருதுகள் அவரைத் தேடி வந்துள்ளன.

சென்னை இலக்கிய மாநாடு, கனடா புத்தகக் கண்காட்சி, அவுஸ்திரேலியா, பிரித்தானியா நாடுகளில் நடந்த இலக்கிய நிகழ்வுகளில் பேச்சாளராகவும் கலந்து கொண்டிருக்கிறார்.

தினகரன், தினகரன் வாரமஞ்சரி முதலான இதழ்களில் மலையக சிறுகதை வரலாறு உள்ளிட்ட ஆய்வுக்கட்டுரைகளையும், ஜேயார், திரேசா, சியாமளா ஆகிய புனைபெயர்களில் இலக்கியக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

எழுத்தாளர் தெளிவத்தை யோசப் அவர்களின் மறைவு இலங்கையின் இலக்கியக் களத்தில் நிரப்ப முடியாத வெற்றிடமொன்றை ஏற்படுத்தியுள்ளது.

**எஸ். இளம்வழுதி...**

# வடக்கு, கிழக்கு மக்களுக்கு சிரஞ்சீவியாக வந்துள்ள கிரான்குளம் ஸ்ரீ சத்யசாயி சஞ்சீவனி வைத்தியசாலை



## சிறார்களுக்கு இலவசமாக இருதய சத்திரசிகிச்சை

அன்றைய கால போரினாலும் பல்வேறு அனர்த்தங்களாலும் வெகுவாக பாதிக்கப்பட்டிருந்த வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு சிரஞ்சீவியாக வந்துள்ளது ஸ்ரீ சத்ய சாயி சஞ்சீவினி வைத்தியசாலை.

இன்று பலராலும் பேசப்படுகின்ற இவ்வைத்தியசாலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் பின்தங்கியதும் வளமானதுமான பிரதேசமான கிரான்குளத்தில் பிரதான வீதியில் அமைந்திருக்கின்றது.

இலங்கை மருத்துவ வரலாற்றில் முதல் தடவையாக கொழும்பு லேடி றிஜ்வே ஆஸ்பத்திரிக்கு அடுத்ததாக ,முதன் முதல் சிறுவர்களுக்கு என்று இலவசமாக சத்திரசிகிச்சை இடம்பெற்று வருகின்ற இடமாக இந்த சஞ்சீவி வைத்தியசாலையை காண்கிறோம் .

அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருந்த இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இங்கும் விஜயம் செய்திருந்தார். கொழும்புக்கு அப்பால் முதன் முதலாக சிறுவர்களுக்கு இலவசமாக இதய சத்திரசிகிச்சை அளிக்கின்ற இவ்வைத்தியசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

களுவாஞ்சிக்குடியை சேர்ந்த தருமரெத்தினம் மற்றும் அவர்களது குடும்பத்தார் பெருந்தன்மையான கொடைத்தன்மையால் சுமார் 100 ஏக்கர் காணியை சத்யசாயி நிலையத்திற்கு உவந்தளித்தார்கள். அங்கு இலவசமாக பல்வேறு வகை நிபுணத்துவ சிகிச்சை வசதி கொண்ட வைத்தியசாலைக்காக இந்த தானம் வழங்கப்பட்டது.

கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இக்காணியை தானம் செய்த பரோபகாரிகள் நன்றியுடன் நினைவு கூரப்படுவார்கள். 7 ஆண்டுகளுக்கு முன்னர் இவ் வைத்தியசாலை 'ஸ்ரீ சத்யசாயி சஞ்சீவனி வைத்தியநிலையம்' எனும் பெயரில் அடிக்கல் நாட்டப்பட்டது.

ஆரம்பத்தில் வெளிநோயாளர் பிரிவு தொடங்கப்பட்டு தன்னார்வ வைத்தியர்கள் தாதியர்கள் மற்றும் ஏனைய சுகாதார உதவியாளர்களாலும் கிரான்குளம் மற்றும் ஏனைய கிராமப்புற நோயாளிகளுக்கு தன்னுடைய பெருஞ்சேவையை வழங்கி வந்தது.

படிப்படியாக பல்வேறு சிகிச்சைகளுக்காக மாடிக்கட்டடங்கள் அமைக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப்பிரிவு, சத்திரசிகிச்சைப்பிரிவு, நோயாளர் விடுதிகள், ஆய்வுகூடங்கள், தொற்றுநீக்கல்பிரிவு உள்ளடங்களாக பல்வேறு நிபுணத்துவ விசேட பிரிவுகளும் ஆரம்பிக்கப்பட்டு சத்திரசிகிச்சைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முதன் முதலாக அண்மையில் இதய நோயினால் பாதிக்கப்பட்ட ஆறு சிறுவர்களுக்கு முற்றிலும் இலவசமாகவும் வெற்றிகரமாகவும் இதயசத்திரசிகிச்சை நடத்தப்பட்டு அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. இச்செய்தி சமூக ஊடகங்களில் அதிகளவில் பரவியிருந்தது.

இந்த சிறுவர்களுக்கான இதயசத்திரசிகிச்சையை இந்தியாவின் மிகச்சிறந்த ராய்பூர் சிறுவர் இதயசத்திரசிகிச்சை மருத்துவரான சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் ராகிணி பாண்டே மற்றும் அவரது தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

இலங்கையில் கொழும்பு மாவட்டத்திற்கு வெளியே நடத்தப்பட்ட முதல் சிறுவர்களுக்கான இதயசத்திரசிகிச்சை இது என்பது குறிப்பிடப்படக்கூடிய வரலாற்று நிகழ்வாகும்.

அறுவைச்சிகிச்சைகளுக்குப் பிறகு ஒவ்வொரு குழந்தையின் பெற்றோரும் ஆழ்ந்த நன்றியுடனும் அன்புடனும் தங்களது மரியாதையை டொக்டர் ராகினி மற்றும் அவரது குழுவிற்கு வெளிப்படுத்தியுள்ளது அனைவரின் மனதையும் தொட்டுள்ளது.

இச்சத்திரசிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையானது வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி டொக்டர் இரா. முரளீஸ்வரனின் தலைமையில் குருதி வங்கி, தொற்றுநீக்கல் பிரிவு, கழிவு முகாமைத்துவப் பிரிவு, கதிரியக்கவியல் பிரிவு மற்றும் ஆய்வுகூடம் உள்ளடங்கலாக 6 இற்கு மேற்பட்ட பிரிவுகளிலிருந்து தங்களுடைய மேலதிக உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கியிருந்தது.

இதுமட்டுமல்லாது, கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ அலுவல்களின் விரிவுரையாளர்களான டொக்டர் ரஜிவன் (இருதயநோய் வைத்திய நிபுணர்) மற்றும் டொக்டர் வைதேகி (நுண்ணுயிரியல் வைத்திய நிபுணர்) தங்களுடைய பல்வேறு உதவிகளையும் வழங்கியுள்ளனர். இதேபோன்று, மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சும் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார பணிமனையும் இதற்காக தங்களுடைய அனுமதியையும் ஆதரவையும் வழங்கியிருந்தன. தன்னார்வமாக பல்வேறு ஆய்வுகூட உதவியாளர்கள் தாதியர்களும் பணியாற்றுவதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் மாதங்களில் நரம்பியல் சத்திர சிகிச்சை மற்றும் சிறுநீரக சத்திரசிகிச்சைகள் போன்ற இன்னும் பல சத்திரசிகிச்சைகளை இலவசமாக மேற்கொள்ள இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீ சத்ய சாயி சஞ்சீவனி வைத்தியசாலை உண்மையில் வடக்கு, கிழக்கு மக்களுக்கு கிடைத்த சிரஞ்சீவியான பொக்கிஷமாகும்.

பின்தங்கிய கிராமமான கிரான்குளத்தில் இவ்வைத்தியசாலை அமையப் பெற்றது மகிழ்ச்சியான விடயமாகும். முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படும் இச்சத்திரசிகிச்சைகளுக்காக தன்னார்வ வைத்தியர்கள், தாதியர்கள், சுகாதார ஊழியர்கள், கதிரியக்கவியளாளர்கள், மருந்தாளர்கள் மற்றும் ஆய்வுகூட தொழிநுட்பவியளாளர்கள் பங்களித்து வருகின்றனர். இவ்வைத்தியசாலையை நாடி வரும் மக்களுக்காக உதவிகளை வழங்குமாறு சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அண்மையில் இவ்வைத்தியசாலைக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன, பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் விஜேசேகர மற்றும் இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் அணி வீரரான அரவிந்த டீ சில்வா ஆகியோர் விஜயம் மேற்கொண்டு தங்களது ஆதரவையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.





**வி.ரி.சகாதேவராஜா...**
*(காரைதீவு குறூப் நிருபர்)*

# கதிர் திருச்செல்வம் எழுதிய 'உயிரோடு நானாக' நூல் அறிமுகம்

கதிர். திருச்செல்வம் எழுதிய 'உயிரோடு நானாக' நூல் அறிமுக விழா ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. ஏறாவூர் தமிழ் மகாவித்தியாலய அதிபர் திருமதி சுதாகரி மணிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளரும், மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளருமான எந்திரி நடராசா சிவலிங்கமும், சிறப்பு உரையாளராக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத்தும் கலந்து கொண்டனர். இந்நூலுக்கான அறிமுக உரையினை மகுடம் பதிப்பக நிறுவுனர் வி.மைக்கல் கொலினும், நூல் மதிப்பீட்டு உரையினை கலை, இலக்கியச் செயற்பாட்டாளரும், நூல் விமர்சகருமான திருஞானசம்பந்தன் லலிதகோபனும் நிகழ்த்தினர். இங்கு வெளியீடு செய்யப்பட்ட நூலின் முதல் பிரதியினை திருகோணமலை நீர் விநியோக வடிகாலமைப்புச் சபை பிரதம பொறியியலாளர் எந்திரி அமலதாஸ் வசந்தராஜ் பெற்றுக் கொண்டார்.





**வ.சக்திவேல்...**
*(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)*

# இந்தியாவின் வரலாற்றில் இதுவரை என்றுமே காணாத புரட்சிகர முன்னணித் திட்டங்கள்!

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் உலகப் புகழ் பெற்ற திட்டம் இந்தியாவில் தயாரிப்போம்' (மேக் இன் இந்தியா) என்ற திட்டமாகும். அத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கடந்த மாதத்துடன் எட்டு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இது இந்தியாவின் புரட்சிகரமான திட்டமாகும். அதாவது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசின் புரட்சிகரத் திட்டம் எனலாம்.

பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவின் வளர்ச்சிக்காக ஆரம்பித்துள்ள முன்னணித் திட்டங்களில் இதுவும் ஔள்றாகும். இந்தியாவை சுயஉற்பத்தியில் உலகின் முன்னணி நாடுகளுக்கு நிகராகக் கொண்டு வருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் நன்மையினால் 2021 2022 நிதியாண்டில் இந்திய மதிப்பில் ரூபா 6,27, 000 கோடி (83 பில்லியன் டொலர்) அந்நிய நேரடி முதலீடு கிடைத்துள்ளதாக இந்திய மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் தெரிவித்திருந்தது.

இந்தியாவைப் பொறுத்தவரை நாட்டின் கடந்த எட்டு ஆண்டு கால சீர்திருத்த நடவடிக்கைகளில் இது இரட்டிப்பபு வளர்ச்சி ஆகும். இத்திட்டமானது பிரதமர் நரேந்திர மோடியின் சுயமான சிந்தனையில் உதித்ததாகும். முதலீட்டை இலகுவாக்குவதற்கான வசதிகள், புத்தாக்க ஊக்குவிப்பு , திறன் மேம்பாடு, சிறந்த உற்பத்திக் கட்டமைப்பு போன்ற சிறப்பான நோக்கங்களுடன் 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் உருவானது. பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் ஆட்சிஉதயமானதும் 2014 ஆம் ஆண்டில் 'மேக் இன் இந்தியா' திட்டம் அறிவிக்கப்பட்டது.



## 'மேக் இன் இந்தியா, ஆயுஷ்மான் பாரத், ஜன் தன் யோஜ்னா போன்ற பெருமளவு திட்டங்களால் அனைத்து மாநில மக்களுக்கும் அதிக நன்மைகள்






புதிய இந்தியாவின் வளர்ச்சிப் பாதையில் நாட்டை உலகளாவிய அளவில் முன்னணி உற்பத்தி, முதலீட்டு இடமாக உருவாக்கும் நோக்கத்துடன் உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்கள் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கு முன்வர வேண்டுமென்று பிரதமர் நரேந்திர மோடி அழைப்பு விடுத்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

இதன் பயனாக சாதனைகள் நிகழ்ந்துள்ளன. மத்திய அரசின் முதன்மைத் திட்டமான 'மேக் இன் இந்தியா' திட்டமானது இந்தியாவை ஒரு முன்னணி உற்பத்தி முதலீட்டு இடமாக உருவாக்கி இருக்கின்றது. உற்பத்தி மற்றும் சேவைத்துறை உள்ளிட்ட 27 துறைகளில் இந்தத் திட்டம் குறிப்பிடத்தக்க அளவில் சாதனைகளைப் புரிந்துள்ளது.

வெளிநாட்டு முதலீடுகைளை ஈர்ப்பதற்காக இந்திய அரசு ஒரு தாராளமயமான, வெளிப்படையான கொள்கையை வகுத்துள்ளது. இதன் விளைவினால் இந்தத் துறைகளில் அந்நிய நேரடி முதலீட்டை அதிகரிக்க வழி ஏற்பட்டுள்ளது.

'அனைவரும் ஒன்றிணைந்து, ஒன்றாக உயர்ந்து, அனைவரின் நம்பிக்கையைப் பெறுவோம்' என்ற குறிக்கோளால் உத்வேகம் பெற்ற நரேந்திர மோடி, தனது ஆட்சியின் நிர்வாகத்தில் கருத்தியல் அடிப்படையில் மாற்றத்தை ஏற்படுத்திய தலைவராகத் திகழ்கின்றார். பங்கேற்புடன் கூடிய, வளர்ச்சி சார்ந்த மற்றும் ஊழலற்ற நிர்வாகத்தைத் தரும் வகையில் இந்த மாற்றங்கள் இருந்தன.

வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் சேவைகள் இந்தியாவின் கடைசிக் குடிமகன் வரை சென்று சேர்வதை உறுதி செய்வது என்ற இலக்கை எட்டுவதற்காக பெரிய அளவில் வேகமாக பிரதமர் நரேந்திர மோடி பணியாற்றி வருகின்றார்.

நரேந்திர மோடி தலைமையிலான இந்தியா அதிவேகமாக ஏழ்மையை ஒழித்து வருகிறது என்று முன்னணி சர்வதேச அமைப்புகள் குறிப்பிட்டுள்ளன. மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட, ஏழைகள் நலன் சார்ந்த பல திட்டங்களால் இது சாத்தியமாகியுள்ளது.



## பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க அரசின் சாதனைகள் ஏராளம்



இவையெல்லாம் ஒருபுறமிருக்க இப்போது உலகின் மிகப் பெரிய சுகாதாரத் திட்டமான, ஆயுஷ்மான் பாரத் திட்டத்தைக் கொண்ட நாடாக இந்தியா திகழ்கிறது. 50 கோடி இந்தியர்களுக்குப் பலன் தரும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் ஏழைகள் மற்றும் நடுத்தர வர்க்கத்தில் கீழ்த்தட்டு மக்களுக்கு கட்டுபடியாகும் வகையில் உயர்தரமான சிகிச்சை வசதிகள் கிடைக்கின்றன.

ஆரோக்கியம் குறித்த உலகின் மிகவும் பெருமைக்குரிய பத்திரிகையான Lancet, 'ஆயுஷ்மான் பாரத்' திட்டத்தைப் பாராட்டியுள்ளது. சுகாதார வசதிகள் கிடைக்கவில்லையே என்று ஏமாற்றத்தில் இருந்த பெருமளவு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இந்தத் திட்டம் இருக்கிறது என்று அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அனைவருக்கும் ஆரோக்கிய வசதிகள் கிடைக்கச் செய்ய வேண்டும் என்பதற்கு முன்னுரிமை அளிக்கும் பிரதமர் நரேந்திர மோடியின் முயற்சிகள் பற்றியும் அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.




ஏழைகளுக்கு நிதிச் சேவை கிடைக்காமல் போவதன் பரிதாபம் பற்றிப் புரிந்து கொண்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி, ஒவ்வொரு இந்தியருக்கும் வங்கிக் கணக்கு இருக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு 'ஜன் தன் யோஜ்னா' என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார். இப்போது 35 கோடிக்கும் அதிகமான ஜன் தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு வங்கிக் கணக்கு தொடங்கப்பட்டிருப்பதுடன், அதிகாரம் கிடைக்கச் செய்வதற்கான வாயில்கள் ஏழைகளுக்குத் திறக்கப்பட்டுள்ளன.

ஒரு நாட்டின் உயிர்நாடி விவசாயம்.. அந்த விவசாயத்திற்கும் விவசாயிக்கும் ரூபாய் 6000 வழங்கும் திட்டம் பா.ஜ. வின் சிறந்த திட்டமாகும். கழிப்பறை இல்லாத வீடுகளுக்கு கழிப்பறை கட்டிக்கொள்ள ரூபா 12000 வழங்கும் திட்டம், மலிவு விலையில் மக்களுக்கு மருந்துகள் வழங்கும் திட்டம், இளைஞர்களுக்கு தொழில் தொடங்க எளிதில் வங்கிக்கடன், பெண்களுக்கு பெரிதும் பயனளிக்கும் இலவச எரிவாயு இணைப்பு, செல்வ மகள் சேமிப்பு திட்டம், ஏழை எளியோருக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம், 50 கோடி பேருக்கு ரூபாய் 5 இலட்சம் வரையிலான இலவச மருத்துவ காப்பீடு, அனைவருக்கும் இலவச வங்கி கணக்கு, மிகக் குறைந்த கட்டுப்பணத்தில் காப்புறுதி, மாநிலங்களில் அதிகப்படியான மருத்துவ கல்லூரிகள், மருத்துவமனைகள் நிர்மாணிப்பதற்கென பல்லாயிரம் கோடி ரூபா நிதி உதவி, புதிய பல்கலைக்கழகங்கள் என்றெல்லாம் நரேந்திர மோடி தலைமையிலான அரசின் முன்னணித் திட்டங்கள் ஏராளம் ஆகும்.

இந்தியாவின் கடந்த காலத்தை உற்றுநோக்கும் போது நாட்டின் வரலாற்றுப் பக்கங்களில் பிரதானமாகப் பார்க்கப்பட வேண்டிய பெருமளவு நன்மைதரும் திட்டங்களை பிரதமர் நரேந்திர மோடி ஆரம்பித்திருக்கின்றார் என்பதே உண்மை.

**எஸ்.சாரங்கன்...**

# யூனியன் அஷ்யூரன்ஸ் லைஃ்வ்ஸ்டைல் போனஸ் 2022 ஊடாக வாடிக்கையாளர்களுக்கு வெகுமதிகள்

இலங்கையின் புரட்சிகரமான ஆயுள் காப்புறுதி தீர்வுகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாகவும் லைஃவ்ஸ்டைல் போனஸ் 2022 திட்டத்தை முன்னெடுத்து, வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான அன்பளிப்புகளை வழங்கியிருந்தது.

2022 ஜனவரி 1ஆம் திகதி முதல் மார்ச் 31ஆம் திகதிக்குட்பட்ட காலப்பகுதியில் ஆயுள் காப்புறுதியைக் கொள்வனவு செய்திருந்த தகைமை வாய்ந்த வாடிக்கையாளர்களிலிருந்து 2022 ஜுன் மாதம் இடம்பெற்ற அதிர்ஷ்டசாலி வெற்றியாளர் தெரிவினூடாக 50 வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

முதலாமிட வெற்றியாளராக, சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த டபிள்யு.ஐ.டி.வாஸ் தெரிவு செய்யப்பட்டு, iPhone 13 Pro Max – 512GB ஐ பரிசாக பெற்றுக் கொண்டார். இரண்டாமிடத்தை பெற்றுக் கொண்டு அவிசாவளையைச் சேர்ந்த எஸ்.பி.வீரசிங்கவுக்கு, iPad Air 2021 – 64GB (cellular & wifi), an Apple Pencil 2nd Gen and a Magic Keyboard வழங்கப்பட்டன. மூன்றாமிடத்துக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பி.புஷ்பலதா தெரிவு செய்யப்பட்டு, 55அங்குல Samsung ஸ்மார்ட் தொலைக்காட்சி ஒன்றைப் பெற்றுக் கொண்டார்.

ஏனைய வெகுமதிகளில் மடிக்கணனிகள், சினமன் ஹோட்டலிலிருந்து வவுச்சர்கள், 43 அங்குல ஸ்மார்ட் தொலைக்காட்சிகள், Samsung Aseries ஸ்மார்ட்ஃபோன்கள் மற்றும் வயர்லெஸ் சார்ஜிங் உடனான UV Sterilizers போன்றன அடங்கியிருந்தன. இவற்றை இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில், வெற்றியீட்டியவர்களின் அருகாமையிலுள்ள யூனியன் அஷ்யூரன்ஸ் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜுட் கோம்ஸ் கருத்துத் தெரிவிக்கையில், "எமது வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியாக சிறந்த பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பது யூனியன் அஷ்யூரன்ஸைச் சேர்ந்த எமக்கு முன்னுரிமையானதாக அமைந்திருப்பதுடன், இந்த ஆண்டின் லைஃவ்ஸ்டைல் போனஸ் திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதையிட்டு பெருமை கொள்கின்றோம். இந்தத் திட்டம் மூன்றாண்டு காலமாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றதுடன், வாடிக்கையாளர்களுக்கும், அவர்களின் குடும்பத்தாருக்கும் வாழ்க்கைமுறை வெகுமதிகளை வழங்குகின்றது" என்றார்.

பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி மஹேன் குணரட்ன தெரிவிக்கையில், "இந்த சந்தர்ப்பத்தில் வாடிக்கையாளர்களுக்கு லைஃவ்ஸ்டைல் போனஸ் உடன் வெகுமதிகளை வழங்க முடிந்துள்ளதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எமது வாடிக்கையாளர்களுக்கு மிகச் சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நிறுவனம் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், இவற்றில் லைஃவ்ஸ்டைல் போனஸ் ஒரு அங்கமாக காணப்படுகின்றது" என்றார்.

வாடிக்கையாளர்களுக்கு லைஃவ்ஸ்டைல் போனஸ் ஊடாக, பெறுமதி வாய்ந்த வாழ்க்கைமுறை வெகுமதிகளை வழங்கி, அதனூடாக அவர்களையும், அவர்களின் குடும்பத்தாரையும் வாழ்க்கையில் எதிர்பாராத அனர்த்தங்களிலிருந்து பாதுகாக்கும் வகையிலான நடவடிக்கைகளை யூனியன் அஷ்யூரன்ஸ் மேற்கொண்டுள்ளது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது. துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 15.7 பில்லியனைக் கொண்டுள்ளது. 2022 ஜுன் மாதமளவில் ஆயுள் நிதியமாக ரூ. 51.5 பில்லியனையும் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது. நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3000 க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.



முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்ற வெற்றியாளர்கள் தமது பரிசுகளை பெறுகின்றனர்.

# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழா மெய்நிகரில்

## இம்மாதம் 29 ஆம் திகதி

அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழா இம்மாதம் 29 ஆம் திகதி சனிக்கிழமை மெய்நிகரில் நடைபெறுகிறது.

சங்கத்தின் தலைவர் எழுத்தாளர் திருமதி சகுந்தலா கணநாதன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்நிகழ்வில், இலக்கியவாதியும் தமிழக முன்னாள் ஐ. பி. எஸ். அதிகாரியுமான திருமதி திலகவதி 'தமிழ்ச் சிறுகதைகள் இன்று' என்ற தலைப்பிலும், தமிழகத்தைச் சேர்ந்த, தேர்ந்த வாசகரும் வாசிப்பு அனுபவங்கள் சார்ந்து உரையாற்றி வருபவருமான பவா செல்லத்துரை 'வாசிப்பு – ஒரு மானுடத்திறப்பு' என்ற தலைப்பிலும் உரையாற்றுவர்.

நாட்டியக் கலாநிதி கார்த்திகா கணேசரின் இந்து மதத்தின் பரிணாமச்சிந்தனைகள் (கட்டுரைகள்) நூல் பற்றி எழுத்தாளர் லெ. முருகபூபதியும், எஸ். கிருஷ்ணமூர்த்தியின் 'நோபோல்' என்ற சிறுகதைத் தொகுதி பற்றி, இலங்கையிலிருந்து கலாநிதி சு. குணேஸ்வரனும் உரையாற்றுவர். நிகழ்வில் இணைந்திருப்பவர்களின் கலந்துரையாடலும் இடம்பெறும்.

மெய்நிகர் இணைப்பு : https://us02web.zoom.us/j/89529543173?pwd=bUUrQVBrZlZiMjNxcEVNdllXUVVnZz09

Meeting ID: 895 2954 3173

Passcode: 202886

அவுஸ்திரேலியா: இரவு : 8.00 மணி




இலங்கை – இந்தியா: பிற்பகல் 230 மணி

இங்கிலாந்து : முற்பகல் 10.00 மணி

பிரான்ஸ், ஜெர்மனி, நோர்வே : முற்பகல் 11.00 மணி

கனடா: காலை 500 மணி

# பெண் தொழில்முயற்சியாளருக்கு DFCC ஆலோக, WCIC விருதுகள்

இலங்கை மற்றும் உலகுக்கு உள்ளடக்கிய பொருளாதார சுபீட்சத்தை ஊக்குவிக்கும் போது பெண் தொழில்முயற்சி என்பது ஒரு முக்கிய அங்கமாகும். இதைப் புரிந்துகொண்ட DFCC வங்கி, பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு வலுவூட்டும் முயற்சிகளைக் கட்டியெழுப்புவதில் ஈடுபட்டு வருகிறது.

இந்த முயற்சியில், பெண்களுக்கான ஒட்டுமொத்த வங்கிச் சேவை, நிதி மற்றும் நிதி அல்லாத தீர்வான DFCC வங்கியின் ஆலோக தயாரிப்பு மற்றும் சேவைகள் முன்மொழிவு, சமீபத்தில் DFCC ஆலோக வின் வலுவூட்டலுடன், WCIC Prathibhabisheka பெண் தொழில்முயற்சியாளர் விருதுகள் நிகழ்வின் பிளாட்டினம் அனுசரணையாளராக, மகளிர் கைத்தொழில் மற்றும் வர்த்தக சம்மேளனத்துடன் (Women's Chamber of Industry and Commerce WCIC) கூட்டுச் சேர்ந்துள்ளது.

பரந்த பொருளாதாரத்தை மேம்படுத்தல், பங்களிப்பு செய்தல், நிலைநிறுத்துதல் மற்றும் நல்விளைவை ஏற்படுத்துதல் ஆகியவற்றில் அர்ப்பணிப்புடன் உள்ள பெண் தொழில்முயற்சியாளர்களை இந்த விருதுகள் அங்கீகரிக்கின்றன. பெண்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் நிதி உள்ளடக்கம் ஆகியவற்றில் DFCC வங்கியின் அர்ப்பணிப்பு அதன் நிலைபேற்றியல் மூலோபாயம் மற்றும் வேலைத்திட்ட கட்டமைப்பில் உட்பொதிந்துள்ளது.

இது DFCC ஆலோக முன்மொழிவால் வழிநடத்தப்படுவதுடன், பெண்கள் தனிநபர்களாக, தொழில் வல்லுநர்களாக மற்றும் தொழில்முயற்சியாளராக வெற்றிபெறத் தேவையான அம்சங்களையும், நன்மைகளையும் அவர்களுக்கு வழங்குகிறது.




இடமிருந்து வலமாக ருவானி வீரசிங்க (சிரேஷ்ட உறவுமுறை முகாமையாளர் சில்லறை வங்கிச்சேவை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி DFCC வங்கி) ஷேரா ஹசன் (துணைத் தலைமை அதிகாரி/தலைமை அதிகாரி– Pinnacle/கிளை வங்கிச்சேவை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தல் செயல்பாடுகள்) ஆசிரி இத்தமல்கொட (சிரேஷ்ட துணைத் தலைமை அதிகாரி/ தலைமை அதிகாரி, சில்லறை வங்கிச்சேவை மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சி), இந்திராணி பெர்னாண்டோ (முன்னாள் தலைவர் WCIC), அனோஜி டி சில்வா (தலைவர் WCIC)

## வாகன விபத்தில்...

தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பில் டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் அலவ்வ பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## தெளிவத்தை ஜோசப்...

தெளிவத்தை ஜோசப், 1960 களில் எழுத ஆரம்பித்து, எழுபதுகளில் இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த படைப்பாளியாக திகழ்ந்தார். சந்தனசாமி ஜோசப், 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி (16) மலையகத்தில், பதுளை மாவட்டம், ஹாலிஎல நகருக்கருகிலுள்ள ஊவாக்கட்டவளை என்ற இடத்தில் பிறந்தார்.

தெளிவத்தை ஜோசப், தமிழ்நாட்டில் கும்பகோணத்தின் உயர்நிலைப் பள்ளியில் கற்றதன் பின்னர், இலங்கை திரும்பி பதுளை சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தார்.

இவர், ஆரம்பத்தில் தெளிவத்தை என்னும் தோட்டத்தில் ஆசிரியராக இருந்தார். இதன் காரணமாகவே தனது பெயருடன் தெளிவத்தையையும் இணைத்துக் கொண்டார். தமது படைப்புக்களுக்காக அவருக்கு சாகித்திய விருது, 'விஷ்ணுபுரம்' இலக்கிய விருது (2013) 'சாகித்திய ரத்னா' (2014) போன்ற விருதுகள் கிடைத்துள்ளன. காலங்கள் சாவதில்லை என்பது இவருடைய முக்கியமான நாவலாகும்.

'நாமிருக்கும் நாடே' சிறுகதைத் தொகுதிக்காக இலங்கைச் சாஹித்திய விருது அவருக்கு கிடைத்தது. இவரது 'குடை நிழல்' என்ற புதின நூல், 2010 ஆம் ஆண்டுக்கான யாழ்ப்பாணம் இலக்கிய வட்டம் இலங்கை இலக்கியப் பேரவையின் விருதைப் பெற்றுள்ளது.

## நிர்மாணத்துறையின்...

ஏற்பட்டுள்ள தாமதங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

ஒப்பந்ததாரர்கள், வங்கிகள் மற்றும் பிற நிதி நிறுவனங்கள் தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

நிர்மாணத் துறையை தொடர்ந்து செயற்படுத்தல் மற்றும் இத்துறையின் தொழில் பாதுகாப்புக்காக பின்பற்றப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் குறித்து அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி, இது தொடர்பில் மேலும் கலந்துரையாடி பரிந்துரைகளை வழங்குவதற்கு குழுவொன்றை நியமிப்பதற்கும் முன்மொழிந்தார்.

நிர்மாணத்துறையின் மேம்பாட்டுக்காக விசேட செயலணி ஸ்தாபிக்குமாறும் களப்பணியாளர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமைச்சர் பந்துல குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க மற்றும் நிர்மாணத்துறை சார்ந்த நிறுவனங்களின் தலைவர்கள் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

## பூரண அரச மரியாதையுடன்...

மகா சங்கத்தின் தலைவருமான வணக்கத்துக்குரிய பல்லேகம சிறிசுமண தம்மரக்கித ஸ்ரீநிவாச நாயக்க தேரரின் இறுதிக் கிரியைகள், இன்று (22) பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்று, தகனக் கிரியைகள் பூரண அரச மரியாதை, அரச அனுசரணையுடன் மகா விகாரைக்கருகிலுள்ள மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வணக்கத்துக்குரிய பல்லேகம சிறிசுமண தம்மரக்கித ஸ்ரீநிவாச நாயக்க தேரர், கடந்த (18 ) தனது 69 ஆவது வயதில் காலமானார். சுகயீனம் காரணமாக பல நாட்களாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலே,இவர் காலமானார்.

1968 அநுராதபுரம் ருவன்வெலி மகா சைத்தியராமைக்கு வந்து, பல்லேகம தம்மரக்கித நாஹிமி மற்றும் பல்லேகம ஞானரத்ன தேரர் ஆகியோரின் போதனையின் கீழ், பல்லேகம சிறிநிவாஸ என்ற பெயரில், இணைந்து, மகா விகாரையில் துறவுக் கல்வியைத் தொடங்கினார். 1971 ஆம் ஆண்டு மாளிகாகந்த வித்யோதய மகா பிரிவேனாவில் நுழைந்து அங்கு கல்வி கற்ற பின்னர் சண்தலங்கா சாஸ்த்ரோதய பிரிவேனாவிலும் சேர்ந்தார். இங்கு இடம் பெற்ற பொதுத் தேர்வில் சிறப்பாக தேர்ச்சி பெற்று 1975 ஆம் ஆண்டு உப சம்பதா நிலையை அடைந்தார். இதற்கிடையில், சிறினிவாச தேரர் ஹுனுப்பிட்டியவில் உள்ள கங்காராமவுக்குச் சென்று அங்கிருந்து உயர்தரம் பயின்றார். பின்னர் களனிப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டதத்தையும் பெற்றுக் கொண்டார்.

அப்போது அட்டமஸ்தானாதிபதியாக பதவி வகித்த இந்துருவா ஹல்மில்லேவைச் சேர்ந்த ரேவத நாயக்கரின் வேண்டுகோளுக்கு இணங்க, நாஹிமி ருவன்வெலி மஹா சேயவின் விஹாராதிகாரியாக மிகுந்த அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தார்.

## 22 க்கு அனைவரும்...

பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

குறிப்பாக தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் கிடைத்துள்ள வாய்ப்பை கோட்டை விட்டு விடாமல், அதற்கு ஆதரவு வழங்க வேண்டுமென கேட்டுக் கொண்ட அவர், அவ்வாறில்லாமல் போன பஸ்ஸுக்கு, கை காட்டுவது போல் தொடர்ந்தும் செயற்படக்கூடாது என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 22 ஆவது திருத்தம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் நல்லது எதுவும் நடந்துவிடக்கூடாதென்ற கைங்கரியத்துடன் செயல்பட்டு வருபவர்கள், அவ்வாறு செயற்படுவதை விட்டுவிட்டு நல்ல சிந்தனையுடன் எமது மக்களுக்காக தவறுகளை திருத்திக் கொண்டு செயல்பட வேண்டும்.

22 ஆவது போன்ற நல்லிணக்கம் தொடர்பான குழுவுக்கும் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மக்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதால், இந்த நெருக்கடி நிலைக்கு தீர்வு காண்பதற்கு அனைவரும் சிந்தித்து செயல்பட வேண்டும். அதேபோன்று அரசியலமைப்பு திருத்தங்கள் மக்களின் அபிலாசைகளை வெற்றி கொள்வதாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன்.

தமிழ் மக்களுக்கான அரிய வாய்ப்பே இலங்கை இந்திய ஒப்பந்தம். அதனையும் மீறி வன்முறை வழியை தொடர்ந்ததால்தான், எமது மக்கள் பேரழிவுகளை சந்திக்க நேர்ந்தது. பேரழிவுக்கு காரணமானவர்களே இப்போது ஐ.நா வுக்குச் சென்று முறையிடுவதாக கூறிக் கொண்டு வெளிநாடுகளில் சுற்றுலா செல்கின்றனர்.

13ஆவது திருத்தம் உளுத்துப்போனது என்றவர்கள், இப்போது இந்திய பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதிக் கொண்டிருப்பது விந்தையானது.

நேற்று என்பது உடைந்த பானை, நாளை என்பது மதில் மேல் பூனை. இன்று என்பது மட்டுமே கையில் உள்ள வீணை. நாளை இதை விட அதிக தடைகள் வரலாம்.தேர்தலுக்காக போலி தேசியம் பேசிக் கொண்டிருப்பதை விடுத்து, மக்கள் நலனுக்காக கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொண்டு அனைவரும் செயல்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நிலையான மின்கட்டணத்தை...

நிலவும் நேரத்திற்கும் இடையில் அமைகின்ற இடைவெளியை குறைக்க வேண்டுமென உப குழுவில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நாட்டில் எரிசக்தி தேவைகளை நிறைவு செய்வதற்கு மாற்று திட்டங்களை முன்வைத்து ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், போக்குவரத்து துறையை வலுப்படுத்த பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டதுடன், முச்சக்கர வண்டிகளில், 87 ஒக்டேன் ரக எரிபொருளை பயன்படுத்துவது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

## 22 ஆவது திருத்தம்...

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் எம்.பி.க்களான செல்வம் அடைக்கலநாதன் , சித்தார்த்தன்,ஸ்ரீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், கோவிந்தன் கருணாகரன், கலையரசன் ஆகியோர் வாக்களித்த நிலையில் சுமந்திரன் எம்.பி.வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. அத்துடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன், விநோ நோகராதலிங்கம் ஆகியோர் சுகவீமனமுற்ற நிலையிலும் சாணக்கியன் எம்.பி. வெளிநாடு சென்றுள்ளதாலும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. அதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எம்.பி.க்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கஜேந்திரன் ஆகியோர் நேற்று சபையில் சமூகமளித்திருந்த நிலையிலும் வாக்களிப்பின் போது சபையிலிருந்து வெளியேறி இருந்தனர்.

## 100 சிறார்களை பலியெடுத்த...

இருமலுக்காக பயன்படுத்தப்பட்ட பாணி மருந்து காரணமாக, கம்பியாவில் 70 சிறார்கள் உயிரிழந்தனர். இதனையடுத்து, பாணி மற்றும் திரவ மருந்துகளை அருந்திய இந்தோனேஷியாவைச் சேர்ந்த நூற்றுக்கும் அதிகமான சிறார்களும் உயிரிழந்தனர். சில, திரவ மருந்துகளில் சிறுநீரகத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற இராசயனப் பொருள் அடங்கியிருந்தமை இந்தோனேஷிய அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு...

குறைந்தே காணப்படும். இது கருதியே, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். எனினும் (25) விடுறை அவசியமில்லை என்று தீர்மானிக்கும் பாடசாலைகள், தொடர்ந்தும் நடத்தலாம் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## நிலக்கரி ஏற்றிய...

இக்கப்பல், நாட்டுக்கு வருகை தந்ததும், தரையிறக்கும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார். அத்துடன், நிலக்கரி கிடைக்கப்பெற்றதும் நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் செயல்பாடுகளை தடையின்றி முன்னெடுக்க முடியுமென, நிலக்கரி நிறுவனத்தின் பொது முகாமையாளர் நாமல் ஹேவகே தெரிவித்துள்ளார்.

## அரசியலில் ஈடுபட ...

பாராளுமன்ற உறுப்பினராக இருப்பதை அந்நாட்டு தேர்தல் ஆணையம் தகுதி இழப்புச் செய்துள்ளது. அரச பதவிகளை வகிக்க அவருக்கு ஐந்து ஆண்டுகள் தடையும் விதிக்கப்பட்டுள்ளது. இதனால், தேர்தலிலும் போட்டியிட முடியாத சூழல் இம்ரானுக்குஏற்பட்டுள்ளது. இந்தத்தீர்ப்பு நேற்று (21)அளிக்கப்பட்டது. விரைவில் இம்ரான் கானின் பாகிஸ்தான் தஹ்ரீக்கே இன்சாப் கட்சி இதை, நிராகரித்ததோடு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

ஆணையத்தின் இந்த முடிவுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் செல்லவிருப்பதாக இம்ரான் கானின் வழங்கறிஞர்கள் தெரிவித்துள்ளனர். இந்த குற்றச்சாட்டு அரசியல் நோக்கம் கொண்டது என்று இம்ரான்கான் முன்னர் குறிப்பிட்டிருந்தார். எனினும், தாம் பிரதமராக இருந்தபோது கிடைத்த குறைந்தது ஐந்து பரிசுகளை விற்றதை அவர் கடந்த மாதம் ஒப்புக் கொண்டிருந்தார்.அதுதமது வருமானவரிக் கணக்கில் சேர்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அந்தப் பரிசுகளில் ரொலெக் கைக்கடிகாரம், மோதிரம் ஒன்றும் அடங்குகின்றன.

இவ்வாறான பரிசுகள் தொடர்பில் அரச அதிகாரிகள் குறிப்பிட வேண்டும் என்ற போதும், குறிப்பிட்ட பெறுமதிக்கு கீழான பரிசுகளை தாம் வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறது.

## வங்கக் கடலில்...

திசை நோக்கி நகர்கிறது. அது இன்றும் நாளை (சனிக்கிழமை) ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறுகிறது.

## மகாவலி, களு, களனி...

பிரதேசம், கெஹல்கமு ஓயாவின் நோர்வூட் பகுதி, களு கங்க ஆற்றின் கலவெல்லவ பிரதேசம், பேராதனை மற்றும் மகாவலி ஆற்றின் நாவலப்பிட்டி பிரதேசங்களிலும் நீர் மட்டங்களே அதிகரித்து வருகின்றன. மேலும்,கித்துல்கல மற்றும் மகாவலி ஆறுகளின் நீர் மட்டங்களும் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டு கொத்மலை ஆற்றில் வினாடிக்கு 200 கன அடி வீதம் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மலையக பகுதியில் பெய்தும் வரும் அடை மழை காரணமாக, மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஐந்து வான்கதவுகளில் நான்கு வான்கதவுகள் நேற்று (21) அதிகாலை முதல் திறக்கப்பட்டன.வினாடிக்கு 200 கன அடி வீதம் இக்கதவுகளால், நீர் வெளியேற்றப்படுவதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார். இந்த பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்தால், நீர்த்தேக்கத்தின் எஞ்சிய வான் கதவுகளும் திறக்கப்படும். இதனால், மேல் கொத்மலை நீர்த்தேக்க அணைக்கட்டுக்கு கீழே கொத்மலை ஓயாவின் இருபுறங்களிலும் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## உயிரிழந்தோரின் காணிகளுக்கு...

இவ் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இது போன்ற மோசடிகளில்,இச் சந்தேக நபர் ஏற்கனவே ஈடுபட்டுள்ளமையும் தெரிய வந்துள்ளது.இவருக்கு எதிராக மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளன.காணிகளை, வேறு ஒருவருக்கு இவர்,உரிமை மாற்றம் செய்துள்ளார்.இதையடுத்து, விசாரணைகள் நிறைவடையாததால் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடுமாறும் பொலிஸார் சமர்ப்பணம் செய்தனர்.

சந்தேக நபர் சார்பில் மூத்த சட்டத்தரணி என்.சிறிகாந்தா ஆஜராகி பிணை விண்ணப்ப சமர்ப்பணத்தை முன்வைத்தார். " இந்த வழக்குடன் தொடர்புடைய சிலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் கைது செய்யப்படாமல் சுதந்திரமாக நடமாடுகின்றனர். முழு மோசடியையும் எனது கட்சிக்காரர் மீது சுமத்தி மற்றவர்களை பாதுகாக்கும் விதத்தில் விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

## நவ.10 முதல் டிசம்பர்...

இதன்படி நவம்பர் (09) ஜனாதிபதி வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தவுள்ளதுடன் நவம்பர் (10) முதல் டிசம்பர் (08) வரை வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் நடத்தப்பட்டு டிசம்பர் (08 ) மாலை வாக்கெடுப்பை நடத்துவது தொடர்பிலும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கூட்டத்தில் ஆராயப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முதலாம் வாசிப்பு கடந்த செவ்வாய்க்கிழமை சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவினால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## புதிய ஓய்வூதிய...

உற்பத்தியாளர்களுக்குரிய புதிய ஓய்வூதிய முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை, உரிய நேரத்தில் வரி செலுத்தும் பட்சத்தில்,தொழில்ரீதியிலான அபாயத்தின் அடிப்படையில் இந்த முறையை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## கோழி இறைச்சி...

காலத்தில் கோழி இறைச்சிக்கான கேள்வி அதிகரிப்பதை கருத்திற்கொண்டே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

அத்துடன், முட்டை விலையையும் குறைப்பது குறித்தும், கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். எரிபொருள் விலை படிப்படியாக குறைகின்றமையும், இந்த விலை குறைப்புக்கான காரணமென தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் சுஜீவ தம்மிக்க தெரிவிக்கின்றார்.

## சுற்றுலாத்துறையின்... 03ஆம் பக்கத் தொடர்

சுற்றுலா அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளதாக அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ இங்கு குறிப்பிட்டார்.

பல சுற்றுலா ஹோட்டல்கள் இரவு 10.00 மணிக்குள் மூடப்படுவது சுற்றுலாத் துறையின் முன்னேற்றத்திற்கு இடையூறாக இருப்பதனால், வர்த்தமானி அறிவித்தல் மூலம் சுற்றுலா வலயங்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறும் அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கையில் இந்தியத் திரைப்படங்களின் படப்பிடிப்புக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், சுற்றுலாத்துறைக்கு கிடைக்கும் நன்மைகள் தொடர்பிலும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

## பத்து வருட கால... 03ஆம் பக்கத் தொடர்

அதனால் இந்த முறையை மாற்றி 1முதல் 5வரை ஆரம்ப பிரிவு எனவும் 6முதல் 9வரை கனிஷ்ட பிரிவு எனவும் 10முதல் 13வரைசிரேஷ்ட பிரிவு எனவும் வகைப்படுத்த திட்டமிட்டுள்ளோம் .

இந்த நடைமுறையே வெளிநாடுகளிலும் காணப்படுகிறது. அதேபோன்று நாட்டில் 120 வலயக் கல்விக் காரியாலங்கள் செயல்படுகின்றன. இவை அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் காணப்படுகிறது. சில வலயக்கல்விகாரியாலயங்களுக்கு கீழ் நூற்றுக்கணக்கான பாடசாலைகள் உள்வாங்கப்படுவதால், சரியான முறையில் பாடசாலைகளை கண்காணிக்க முடியாத நிலை உள்ளது. கொழும்பு வலய கல்விக் காரியாலயத்தின் கீழ் 144 பாடசாலைகள் உள்ளன. இங்கு ஒரு இலட்சத்து 80ஆயிரம் மாணவர்கள் மற்றும் 11ஆயிரம் ஆசிரியர்களும் உள்ளனர்.

கல்விக் கட்டமைப்பைத் தயாரிக்கும் நடவடிக்கை அடுத்த வருடம் ஆரம்பிக்கப்பட உள்ளது.அதற்கு இணையாக பாடத்திட்ட மேம்பாட்டை தேசிய கல்வி ஆணைக்குழு தற்போது ஆரம்பித்திருக்கின்றது. எனவே கல்வி மறுசீரமைப்பு திட்டம் மற்றும் வேலைத்திட்டத்தை சட்ட மூலம் ஒன்றின் மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை பௌத்த நாடாக... 03ஆம் பக்கத் தொடர்

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், நாட்டு மக்களின் எதிர்பார்ப்புக்கமைய அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச்சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதில் நான் உடன்படப் போவதில்லை. நாட்டு மக்கள் அரசியலமைப்பு திருத்தத்தை கோரவில்லை.புதிய அரசியலமைப்பையே அவர்கள் கோருகின்றனர். புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதற்காகவே, நாட்டு மக்கள் முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவுக்கு ஆணை வழங்கினார்களே தவிர, அரசியலமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்வதற்காக அல்ல.

ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையிலான குழுவினர் புதிய அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான வரைபை சமர்ப்பித்துள்ளனர்.

அந்த வரைபு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் உள்ளது.

அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு எதிராகவே நான் வாக்களித்தேன்.2020ஆம் ஆண்டு 19ஆவது திருத்தத்தை இரத்துச் செய்வதற்காக 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தேன்.

தற்போது எனது கொள்கைக்கமைய 20ஆவது திருத்தத்தை இரத்து செய்வதற்காக நான் ஆதரவு வழங்க முடியாது, அதனால் 22ஆவது திருத்தத்துக்கு எதிராகவே வாக்களிப்பேன்.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் நடைமுறையில் இருக்கும் வரை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்த ஒத்துழைப்பு வழங்கமாட்டேன்.

இலங்கை இந்தியா ஒப்பந்தத்தின் ஊடாக பலவந்தமான முறையில் 13ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டது. 13ஆவது திருத்தத்தின் வியூகம் தொடர்பில் பாரதூரமான பிரச்னைகள் காணப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## மக்கள் எதிர்பார்க்கும்... 03ஆம் பக்கத் தொடர்

முரண்பாடானவை. இதனால் எமது பாராளுமன்றத்தின் மீது மக்களுக்குள்ள நம்பிக்கை தொடர்பில் நாம் வியப்படைவதற்கு ஒன்றும் இல்லை.

காலத்துக்குக் காலம் அரசியல் கட்சிகள் தமது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே, அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொள்கின்றனர். அவை மக்கள் எதிர்பார்ப்பல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வலு சக்தித் துறை... 03ஆம் பக்கத் தொடர்

அனுருத்த, டி.வி. சானக, பாராளுமன்ற உறுப்பினர்களான பவித்ரா வன்னிஆராச்சி, ஜோன்ஸ்டன் பர்னாந்து, சாகர காரியவசம், அசங்க நவரத்ன, ரிஷாட் பதியுதீன், எம், ராமேஸ்வரன் மற்றும் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## பெற்றோலிய உற்பத்தி... 03ஆம் பக்கத் தொடர்

ஆம் ஆண்டு 27 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமாக இந்தத் திருத்தச் சட்டமூலம் நேற்று (21) முதல் நடைமுறைக்கு வருகின்றது.

## பாராளுமன்ற தேர்தல்...

பாராளுமன்ற தேர்தல் முறையில் மாற்றம் மேற்கொள்ளப்படும் என்று ஏற்கனவே ஜனாதிபதி உறுதியளித்திருந்தார். இது தொடர்பான சட்டமூலத்தை விரைவில் கொண்டு வருவாகவும் ஜனாதிபதி அதன்போது தெரிவித்திருந்தார்.

ஆனால், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவில்லை. எவ்வாறாயினும் விரைவில் அந்த தேர்தல் திருத்தத்தை கொண்டு வர வேண்டும். அத்துடன் நிறைவேற்றுத் துறை பாராளுமன்ற முறை தொடர்பிலும் பேசப்பட்டிருந்தது.

225 பேரை கொண்ட பாராளுமன்றமே தற்போதுள்ளது. அதனை அதிகரிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

அதே வேளை 22 ஆவது திருத்தத்தை கொண்டு வருவதன் மூலம், பிரச்சினைகள் தீர்ந்துவிடப்போவதில்லை. அதற்கப்பால் ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் அவசியமாகும்.

கடந்த மே மாதம் இடம்பெற்ற வன்முறை சம்பவங்கள் தொடர்பில் குறிப்பிட்ட அவர்,

மே 09 வன்முறை சம்பவத்தில் உயிரிழந்த பாராளுமன்ற உறுப்பினருக்கான நஷ்ட ஈட்டை, பத்து மில்லியன் ரூபா வரையில் அதிகரிக்க அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உண்டு. இதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

மக்கள் நலனையும் நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக நாம் எந்தளவுக்கு பாடுபட்டுள்ளோம் என்பதனை சபாநாயகரும் நானும் அறிவோம்.

கொலைகளைச் செய்யும் போது சிரிக்கலாம். ஆனால் அது தொடர்பில் அழுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

கடந்த மே மாதம் 9 ஆம் திகதி நடைபெற்ற வன்முறை சம்பவங்களில், படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரளவுக்கு வழங்கும் நட்ட ஈட்டை 10 மில்லியன் ரூபா வரையில் அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். இதற்கு முன்னர் இருந்த 05 மில்லியன் ரூபா தொகையை 10 மில்லியனாக அதிகரித்துள்ளோம்.

கொலை தொடர்பில் கண்டனங்களை வெளியிட்டால் மட்டும் போதாது. அவரின் குடும்பத்தினருக்காக செய்ய வேண்டியவற்றை மேற்கொள்ள வேண்டியதும் அவசியம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பூரண ஒத்துழைப்பை...

அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.இதுபற்றி மேலும் குறிப்பிட்ட அவர்,

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வருட இறுதிக்குள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள முடியும்.

எதிர்வரும் மாதத்தின் முதல் வாரத்துக்குள் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் தீர்க்கமான தீர்மானத்தை எடுக்க வேண்டுமென, நாணய நிதியம் அறிவுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் இலங்கை தொடர்பில் இடம் பெற்றுள்ள பேச்சுவார்த்தைகள் தொடர்பில், பாராளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு தயாராக உள்ளோம். எமது நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு

இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் தயாராக உள்ளன.இந்த நாடுகளுடன் ஜனாதிபதி சுமுகமான பேச்சு வார்த்தைகளை நடத்தியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி எமது நாட்டுக்கு கிடைத்ததும் அந்த நாடுகள் உட்பட மேலும் சர்வதேச நாடுகளும் இலங்கைக்கு உதவும்.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் ஜெனிவா மனித உரிமை பேரவை தொடர்பான எந்த விடயங்களும் முன்வைக்கப்படவில்லை. மாறாக நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீளக் கட்டியெழுப்பவும், மீண்டும் இத்தகைய நிலை ஏற்படாதிருப்பதிலுமே கவனம் செலுத்தப்பட்டது.அமெரிக்காவில் நடைபெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில், மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்நலால் வீரசிங்க,நிதியமைச்சின் செயலாளர் உட்பட குழுவினராக கலந்து கொண்டோம்.

அந்த மாநாட்டில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் 2019ஆம் ஆண்டுக்கு பின்னர், பொருளாதார ரீதியில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதார பாதிப்பு,காலநிலை மாற்றம், நிலைபேறான கடன்,அடிப்படை நிவாரணம் வழங்கல் உள்ளிட்ட அத்தியாவசிய விடயங்கள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

பூகோள மற்றும் வலய பொருளாதார பாதிப்பு மற்றும் அவற்றுக்கான தீர்வு திட்டங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. பணவீக்கம்,உணவு பாதிப்பு உயர்வினால் நடுத்தர பொருளாதார நாடுகள் எதிர்கொண்டுள்ள சவால்கள் தொடர்பிலும் முக்கிய கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.

மாநாட்டில் கலந்து கொண்ட உலக நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள், நிதியமைச்சர்கள்,மற்றும் அமைச்சின் செயலாளர்கள் தங்களின் எதிர்கால திட்டங்களையும் முன்வைத்தனர்.


உணவு மற்றும் பண வீக்கத்தினால் நடுத்தர நாடுகள் எதிர்வரும் காலங்களில் மனிதாபிமான உதவிகளைக் கோரும் நிலைக்கு தள்ளப்படும் என்றும் இதன்போது சுட்டிக் காட்டப்பட்டது.

பணவீக்கமானது அடுத்த ஆண்டில் 6.5 சதவீதத்தாலும் 2024ஆம் ஆண்டு 4.1 சதவீதத்தாலும் குறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் சார்பில் கலந்து கொண்ட எமது குழுவினர் நாட்டில் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை அதிலிருந்து மீள்வதற்கான செயற் திட்டங்கள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளுடனும் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம்.

அண்மையில் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் வருடாந்த மாநாட்டில் கலந்துவிட்டு, நாடு திரும்பியுள்ள இராஜாங்க அமைச்சரே நேற்று இது தொடர்பில் சபையில் விசேட உரையாற்றினார்.

# கிழக்கின் குரல்



# அம்பாறை மாவட்டத்தில் வெற்றுக் காணிகளில் பயிர்ச் செய்கை

## அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர்

ஒலுவில் விசேட, திராய்க்கேனி நிருபர்கள்

அம்பாறை மாவட்டத்தில் வெற்றுக் காணிகள் காணப்படுமிடங்களில் உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ள வேண்டுமென, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் தெரிவித்தார்.

பாலமுனை விவசாய கல்லூரியில் உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு தொடர்பான கலந்துரையாடலும், அறுவடை விழாவும், வியாழக்கிழமை (20) கல்லூரியின் அதிபர் ஏ.எஸ்.எம். ஹரீஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.



மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸ் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்கள் ரீதியாக காணப்படுகின்ற வெற்றுக் காணிகளை அடையாளம் கண்டு உப உணவுப் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கு பிரதேச செயலாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உலகில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்கின்ற வேளையில் நமது நாட்டிலும் உணவு பற்றாக்குறையை நிவர்த்தி செய்து மக்களுக்குத் தேவையான போசாக்கான உணவை வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தேசிய ரீதியில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தினை வெற்றிபெற செய்வதற்கு தமக்கு தேவையான உணவை நாம் உற்பத்தி செய்வதற்கு எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

நாட்டில் ஆரோக்கியமான சிறந்த அறிவுத் திறனுடைய பிரஜைகளை உருவாக்குவதற்கு போசாக்கு நிறைந்த உணவுகளை பிள்ளைகளுக்கு வழங்க வேண்டும்.



அம்பாறை மாவட்டம் ஒரு தனியான விவசாய மாவட்டமாக காணப்படுவதால் நெல்லை மட்டும் உற்பத்தி செய்யாமல் ஏனைய உப உணவு பயிர்ச்செய்கைகளையும் செய்கை பண்ண வேண்டும்.

இவ் விவசாய பாடசாலை சகல வசதிகளுடன் கூடிய பாடசாலையாக எதிர்காலத்தில் விஸ்தரிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் நீங்கள் பெற்றுக் கொள்ளும் டிப்ளோமா சான்றிதழானது உங்களது வாழ்க்கையின் முதல் படியாகும். மேலும் உயர் தரமான கற்கை நெறிகளை மேற்கொண்டு முன்னேறி நாட்டின் விவசாயத் துறைக்கு பெரும் பங்காற்ற வேண்டுமென்றார்.

# வீடு கட்டும் வேலையில் இருந்தவர் மின்சாரம் தாக்கி படுகாயம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

காத்தான்குடியில் வீடு ஒன்றில் மேசன் வேலை செய்து கொண்டிருந்தவர் மீது (20) வியாழக்கிழமை மின்சாரம் தாக்கியதில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆ பள்ளிவாசல் (அல் அக்ஸா) முன்பாக வீட்டு நிர்மாண வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மேசன் தொழிலாளி மீது அந்த வீட்டுக்கு முன்னால் செல்லும் மின் கம்பியில் வீட்டுக்கு பொருத்தப்பட்டிருந்த கம்பி ஒன்று பட்டதில் அந்தக் கம்பியை மேசன் தொழிலாளி தூக்கும் போது மின்சாரம் தாக்கியுள்ளது. இதையடுத்து கீழே விழுந்த மேசன் தொழிலாளி படுகாயமடைந்த நிலையில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.காயமடைந்தவர் மணல்சேனையைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் என தெரியவருகிறது.

# றெகன் புறூட் பழ மரக்கன்றுகள் இலவசமாக வழங்கிவைப்பு

அக்கரைப்பற்று மத்திய நிருபர்



அக்கரைப்பற்று பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட றெகன் புறூட் பழக் கன்றுகள் இலவசமாக வழங்கும் நிகழ்வு அக்கரைப்பற்று சமுர்த்தி மகா சங்கத்தில் வங்கிச் சங்க முகாமையாளர் எம்.ஜே.எம்.நிஃமதுல்லாஹ் தலைமையில் நடைபெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட அக்கரைப்பற்று 04ஆம் பிரிவில் வசிக்கும் எம்.ஏ.சலாஹுத்தீன் என்பவர் றெகன் புறூட் பழச் செய்கை மேற்கொண்டு வருகிறார். அவரினால் உற்பத்தி செய்யப்பட்ட றெகன் புறூட் பழ மரக் கன்றுகளை ஏனையவர்களையும் ஊக்குவிக்கு முகமாக உத்தியோகத்தர்களுக்கும், ஏனையவர்களுக்கும் இலவசமாக வழங்கிவைத்தார். இதன் போது கருத்திட்ட முகாமையாளர் என்.ரி.மசூர், அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

### எதிர்கால சவால்களை சமாளிப்பதற்கு

# தபால் திணைக்களம் தனது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும்

கல்லாறு தினகரன் நிருபர்

இன்று நாடு மிகுந்த பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ளது. எனவே நட்டமடையும் அரச நிறுவனங்கள் குறித்து அரசு மறுபரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. இதில் 39 நிறுவனங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகின்றது. அதில் தபால் திணைக்களமும் உள்ளடக்கப்படாமல் இருப்பதற்கு எமது திணைக்கள உத்தியோகத்தர்கள் மிகக் கடுமையாக உழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இத்தகைய சவால்களில் இருந்து விடுபடுவதற்கு நாட்டினதும், திணைக்களத்தினதும் பொது மக்களினதும் எதிர்காலம் கருதி இன்னும் அர்ப்பணிப்புடன் செயற்பட நாம் திடசங்கற்பம் பூண வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட தபாற் திணைக்கள கணக்குப்பகுதி யைச் சேர்ந்த ஏ.சுகுமார் பெரியகல்லாற்றில் அமையப் பெற்றுள்ள கல்லாறு தபாலகத்தில் உலக தபால் தினத்தை கடந்த ஞாயிறன்று (16) தபாலகத்தின் பொறுப்பு தபாலதிபர் ஜே.சந்திரகாந்தன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார், தொடர்ந்துரையாற்றிய அவர்,..

அரசு தற்போது மூலதன செலவை மட்டுப்படுத்தியுள்ளது. மேலதிக நேரவேலை. ஏரிபொருள் பாவனை என்பவற்றையும் வரையறை செய்துள்ளது. இது நாட்டின் பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளாகும். எனவே நாம் இவற்றை அனுசரித்து ஒத்துழைத்து எமது திணைக்கள வருமானத்தை அதிகரிப்பதே ஒரே வழியாகும் என்று குறிப்பிட்டார்.

# சமுர்த்தி வங்கிகளை நாம் மேலும் பலப்படுத்த வேண்டும்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

முர்த்தி வங்கிகளை நாம் மேலும் பலப்படுத்த வேண்டுமென அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கித்சிறி கமகே தெரிவித்தார்.

அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் பிரதிநிதிகள் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பிரதேச செயலகங்களில் சந்தித்தனர்.

இச் சந்திப்பின் ஓர் அங்கமாக புதன்கிழமை பிற்பகல் (19) மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு



அகில இலங்கை சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாய ஆராய்ச்சி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கித்சிறி கமகே தலைமையில் வவுணதீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது நலன்புரி நன்மைகள் சபை ஊடாக வெளியிடப்பட்ட விண்ணப்பப்படிவம் தொடர்பிலும், வங்கி ஊடாக வழங்கப்படும் முதியோர் கொடுப்பளவு, விசேட தேவையுடையோர் கொடுப்பனவு தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் நடவடிக்கை எடுக்க தேசிய சங்கம் நடவடிக்கை எடுத்துவருவதாக இதன்போது தலைவர் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தபால் நிலையங்கள் பலவற்றில் தமது வசிப்பிடத்தின் அண்மையில் இருந்து முன்னர் வயோதிபர்கள் பணம் பெற்று வந்தனர். ஆனால் தற்போது தூர இடங்களிலிருந்து கூடிய பணம் செலவு செய்து வங்கிகளில் பணம் பெறவேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இதேவேளை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வெளிக்களத்தில் சென்று பணம் வழங்குவது போதிய பாதுகாப்பு இல்லை. இது அவ் உத்தியோகத்தர்களின் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தலாம். இது தொடர்பிலும் தாம் உரிய தரப்பினருடன் எழுத்துமூலம் அறிவித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. எமது சமுர்த்தி வங்கிகளை மேலும் பலப்படுத்த நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டிய தேவை உள்ளது.

# மாவட்ட செயலகத்தில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்




மட்டக்களப்பு குறூப் நிருபர்

பிரதேச செயலக ரீதியாக நிறுவப்பட்டுள்ள விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் கடந்த வருடம் சகல மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக 21 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளின் திறனை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் தனித்துவம் வாய்ந்த விளையாட்டு குழுவினை நிறுவுவதற்கான செயற்திட்டமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. அந்தவகையில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் விளையாட்டு குழுக்கள் நிறுவப்பட்டு அதற்கான பயிற்றுவிப்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (விளையாட்டு) திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

# கிழக்கு மாகாண மட்ட அழகியல் தின போட்டி





கல்லடி குறூப்நிருபர்

கிழக்கு மாகாண வரலாற்றில் முதல் தடவையாக இடம்பெற்ற மாகாண மட்ட அழகியல் தின போட்டியின் பிரதான ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு மகாஜன கல்லூரியின் பிரதான மண்டபத்தில் வியாழக்கிழமை இடம் பெற்றது. கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அழகியல் பாடங்களுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரனின் தலைமையில் இடம் பெற்ற நிகழ்விற்கு கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி.நகுலேஸ்வரி புள்ளநாயகம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்துள்ளார். இந்நிகழ்விற்கு சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு கல்வி வலயத்தின் கல்விப்பணிப்பாளர் திருமதி.குலேந்திரகுமார் சுஜாதா, மாகாண பிரதிக்க ல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்)

ஆர்.நிர்மலரஞ்சன், மாகாண கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், வலயக் கல்விப் பிரதிப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், மகாஜன கல்லூரியின் அதிபர் அருமைராஜா, ஆசிரிய ஆலோசகர்கள், நடுவர்கள் மற்றும் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதியதிபர்கள், ஆசிரியர்கள் என பெருமளவிலானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



'எமது நிலம் எமது பலம்' எனும் தொனிப்பொருளில் 'உதலு சவிய' உணவுப் பாதுகாப்பு ஊக்குவிப்பு செயற்றிட்டத்தின் கீழ் மரக்கறிப் பயிர் விதைகள் மற்றும் உள்ளீடுகள் வழங்கும் நிகழ்வு நேற்று (21) மண்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போது,...

படம்;மட்டக்களப்பு விஷேட நிருபர்

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் தோப்பூர் இக்பால் நகர் 7ம் வட்டாரத்தை சேர்ந்த அப்துல் பரிது முகம்மது நிசாத் மூதூர் நீதிமன்ற நீதவான் ஜனாபா எச்.எம். தஸ்னீம் பௌசான் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் கலைமாணி பட்டதாரியும் தோப்பூர் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவராகவும் மூதூர் மத்தியஸ்த சபை உறுப்பினராகவும் ஏனைய சமூக அமைப்புக்களின் பல்வேறு பதவிகளையும் பொறுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத்திட்டம் தென்பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதா?

## மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் சந்தேகம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு உலக வங்கியினால் குடிநீர் திட்டத்துக்கென ஒதுக்கப்பட்ட 1000 மில்லியன் ரூபா நிதி கொழும்பிலுள்ள உயர் அதிகாரிகளால் தென்பகுதிக்கு தன்னிச்சையாகவும் இரகசியமாகவும் மாற்றப்பட்டுள்ளதாக மாந்தை கிழக்கு பிரதேச சபை தவிசாளர் மகாலிங்கம் தயானந்தன் குற்றம்சாட்டியுள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 வீதமான மக்கள் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு குடிநீர் பிரச்சினை முக்கிய காரணமாகவுள்ளது. இதனை கருத்திற் கொண்டே கள ஆய்வுகளை மேற்கொண்டு உலக வங்கி இந்நிதியை ஒதுக்கியுள்ளதாக அவர் தெரிவிக்கின்றார்.

கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத் திட்டத்தை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு பொதுமக்களால் அவரிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை தொடர்ந்து அவர் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

கரும்புள்ளியான் குடிநீர் விநியோகத் திட்டம் ஆரம்பிப்பதற்கு 12.01.2022 ஆம் திகதி பத்திரிகையில் கேள்வி கோரல் விளம்பரம் செய்யப்பட்டு 11.02.2022 வரை விண்ணப்ப முடிவு திகதியும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்காக ஆயிரம் மில்லியன் ரூபா நிதியை உலக வங்கி ஒதுக்கீடு செய்ததாக தெரியவருகின்றது.

ஆனால் இன்றுவரை இத்திட்டத்திற்கான எவ்வித பணிகளும் ஆரம்பிக்கப்படவில்லை. இப்பிரதேச மக்கள் வறட்சிக் காலங்களில் குடிநீரை கூட பெற்றுக் கொள்ள முடியாத அளவில் கடும் நெருக்கடிகளை வருடந்தோறும் எதிர்கொண்டு வருகின்றனர். சிறுநீரக நோயாளிகளின் எண்ணிக்கையும் வருடந்தோறும் அதிகரித்துச் செல்கிறது. எனவே தான் உலக வங்கியின் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் நிலைமைகளை ஆராய்ந்து இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டனர்.



ஆனால் அந்த நிதிக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. இவ்விடயம் தொடர்பில் எமக்கு பலத்த சந்தேகம் உண்டு. இந்நிதியானது கொழும்பு மட்ட உயர் அதிகாரிகளால் தென்னிலங்கைக்கு மாற்றப்பட்டுவிட்டதாக நாம் அறிகின்றோம். எனவே இவ்விடயம் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர், பொறுப்பான அமைச்சர், வடக்கு ஆளுநர் உள்ளிட்ட பலருக்கு எழுத்துமூலம்

அறிவித்துள்ளோம் எனவும் மாந்தை கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் மா. தயானந்தன் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் போதைப்பொருட்களுடன் மூவர் கைது; ஒருவர் தப்பியோட்டம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை போதைப்பொருட்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மற்றுமொரு நபர் பொலிஸாரின் கைது நடவடிக்கையிலிருந்து தப்பி சென்றுள்ளார். சிறுப்பிட்டி கலையொளி பகுதியில் 99 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 1500 மில்லிகிராம் கஞ்சா ஆகிய போதைப்பொருட்களுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். அதேவேளை யாழ்.நகரிலிருந்து தீவக பகுதிக்கு போதைப்பொருட்களை கடத்துபவர்கள் குறித்து ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம் , மண்கும்பான் பகுதியில் 20 வயதான இளைஞனை கைது செய்த பொலிஸார் அவரிடமிருந்து 36 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டனர்.

இதன்போது இவருடன் வருகை தந்திருந்த மற்றுமொரு இளைஞன் பொலிஸாரின் பிடியிலிருந்து தப்பி ஓடியுள்ளார். தப்பியோடிய நபரை கைது செய்வதற்குரிய நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து உள்ளதுடன் , கைது செய்யப்பட்டுள்ள நபரே யாழ்.நகர் பகுதியிலிருந்து தீவக பகுதிகளுக்கு போதைப்பொருளை கடத்தி வந்து விற்பனை செய்பவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

# பல்வேறு திருட்டுகளில் ஈடுபட்ட ஒருவர் கைது

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**

யாழ்.மாவட்டத்திலுள்ள சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞர் ஒருவர் நெல்லியடி பொலிஸாரால் நேற்றுமுன் தினம் வெள்ளிக்கிழமை(21) கையும் மெய்யுமாக இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடிச் சந்தையில் வெள்ளிக்கிழமை (21) காலை அங்கு வைக்கப்பட்டிருந்த உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயத்தை திருடிச் செல்ல முற்பட்ட போது நெல்லியடி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் நெல்லியடியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், மின்னியல் வர்த்தக நிலையத்தில் திருடப்பட்ட வயர் ரோல் மற்றும் பருத்தித்துறை நகரில் வாகன உதிரிப்பாக விற்பனை நிலையத்தில் திருடப்பட்ட ஓயில் மற்றும் தேங்காய் எண்ணெய் பரல்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

# சமையலறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டவர் கைது



**யாழ்.விசேட நிருபர்**

யாழ்.செல்வபுரம் பகுதியில் வீட்டின் சமையலறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதுடன் 15 லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில் வீடொன்றில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், வீட்டினை சோதனையிட்ட வேளை வீட்டின் சமையலறையில் ஒருவர் கசிப்பு காய்ச்சிய வண்ணம் இருந்துள்ளார்.

அதனையடுத்து அவரை கைது செய்த பொலிஸார் அங்கிருந்த 15 லீற்றர் கசிப்பையும் மீட்டிருந்தனர். அத்துடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய பொருட்களையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் பொருட்கள் என்பவற்றை சான்று பொருட்களாக பொலிஸ் நிலையத்திற்கு எடுத்து வந்த பொலிஸார் , கைது செய்யப்பட்ட சந்தேகநபரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அரிசி இறக்குமதியால் நெல்ஆலை உரிமையாளர்கள் பாதிப்பு

**ஓமந்தை விஷேட நிருபர்**

வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதால் உள்ளூர் விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்த நெல் ஆலை உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவிக்கையில்,

கடந்த அறுவடையின் போது விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்த ஆலை உரிமையாளர்கள் அதனை அரிசியாக்கி விற்பனை செய்ய முற்படும் போது வெளிநாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்வதால் ஆலை உரிமையாளர்கள் மாத்திரமின்றி விவசாயிகளும் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.

விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட நெல்லை தற்போது அரிசி ஆலை உரிமையார்கள் குறித்த விலைக்கு விற்பனை செய்யமுடியாமையால் , ஆலைகளில் அரிசி தேங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் காலபோக செய்கை எதிர்வரும் காலங்களில் இடம்பெறும் போது நெல் ஆலை உரிமையாளர்கள் நெல்லை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படும். இது விவசாயிகளுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே அரசாங்கம் உள்ளூர் விவசாயத்தினை மேம்படுத்தவும் உள்ளூர் வர்த்தகர்களை நஷ்டமடையாது பாதுகாக்கவும் வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதனை தடை செய்யவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளனர்.

# இந்திய இராணுவத்தினரின் யாழ்.போதனா வைத்தியசாலை படுகொலை நினைவுதினம்





**பருத்தித்துறை விசேட நிருபர்**

இந்திய இராணுவத்தினரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் படுகொலை செய்யப்பட்டோரின் 35ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவத்தினரால் யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையிலிருந்த 21 பேர் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டனர்.

அக்கொடூர சம்பவத்தின் 35ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களின் ஏற்பாட்டில் நேற்று காலை 10 மணியளவில் இடம்பெற்றது.

இந்திய இராணுவத்தினரால் சுட்டு படுகொலை செய்யப்பட்டோரின் நினைவாக உயிரிழந்தோரின் உறவுகளால் பொது சுடர் ஏற்றப்பட்டு படுகொலை செய்யப்பட்டோரின் திருவுருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்கள், நிர்வாக உத்தியோகஸ்தர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், உயிர்நீத்தவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் காட்டு யானைகள் தொல்லை

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா குடாகச்சக்கொடியவில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் காட்டு யானைகள் கிராமங்களில் பயிர்ச்செய்கை மட்டுமல்ல மக்களையும் தாக்க ஆரம்பித்துள்ளதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.



தற்போது பெரும் போக பயிர்ச்செய்கை ஆரம்பித்துள்ளமையால் அக்கிராமத்தில் விவசாயிகளின் வாழைத் தோட்டங்கள், தென்னந்தோப்புகள் உள்ளிட்ட பல பயிர்களை காட்டு யானைகள் துவம்சம் செய்துவருகின்றன.

கடந்த வாரம் காட்டு யானையொன்று ஒருவரை தாக்கியதில் முதுகில் பலத்த சேதத்தை ஏற்பட்டுள்ளது. அந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிராமங்களை சுற்றி யானை வேலி அமைத்து தருமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தும் அதிகாரிகள் இதுவரை தீர்வை வழங்கவில்லை. ஒவ்வொரு வருடமும் காட்டு யானைகள் பயிர்களை சேதப்படுத்துவதாக கிராம மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.







யாழ்.மாவட்ட பண்பாட்டு பேரவையும் , யாழ்.மாவட்ட செயலகமும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் இணைந்து நடாத்திய யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு விழா நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை யாழிலுள்ள தனியார் மண்டபமொன்றில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் தலைமையில் இடப்பெற்ற இவ்விழாவில், பிரதமவிருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்,எம்.சமன் பந்துலசேனவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் , விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இவ்விழாவில், "யாழ்ப்பாணம்" எனும் நூல் வெளியீடும், "இளங்கலைஞர்" விருது மற்றும் "யாழ் முத்து" விருது ஆகிய விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்: யாழ்.விசேட நிருபர்)




### தீபாவளி முற்பணத்தில் ஏமாற்றம்

# அக்கரப்பத்தனை பெருந்தோட்ட மக்கள் கவனயீர்ப்பு போராட்டம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

தீபாவளி முற்பணமாக ரூபா 15,000 ஆயிரம் தருவதாக பெருந்தோட்ட கம்பனிகள் அறிவித்திருந்த போதிலும் அதனை குறைத்து வழங்குவதாக அறிவித்துள்ளதாக அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட தோட்டமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்குட்பட்ட அக்கரப்பத்தனை, வேவர்லி, மோனிங்டன், போட்மோர், ஆடலி உள்ளிட்ட தோட்டங்களைச் சேர்ந்த 150 ற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சாலைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தீபாவளி முற்பணமாக ரூபா 15,000 ஆயிரம் தருவதாக பெருந்தோட்ட கம்பனிகள் அறிவித்திருந்த போதிலும் அதனை குறைத்து 5000 ரூபாய் அல்லது பத்தாயிரம் ரூபாய் என்ற அடிப்படையில் முற்பணம் தருவதாக நேற்று அறிவித்திருப்பதாக தோட்டமக்கள் தெரிவிக்கின்றனர்.



சுமார் இரண்டு மணி நேரம் போராட்டத்தில் ஈடுபட்டதோடு, மீண்டும் தொழிலுக்கு செல்லாமல் தொழிலாளர்கள் வீடுகளுக்கு திரும்பினர்.

தாம் முறையாக வேலை செய்ததாகவும், தற்போது எமக்கு வழங்கப்படும் முற்பணம் மாத சம்பளத்தில் அறவிடப்படும். அதேவேளை பெருந்தோட்ட கம்பனி 15 ஆயிரம் ரூபாய் தருவதாக கூறியிருந்த போதிலும் இதனை தோட்ட நிர்வாகம் வழங்க முடியாது என கூறுவது எவ்விதத்தில் ஏற்றுக்கொள்ள முடியும். இதனாலேயே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் தொழிலாளர்களால் முன்னெடுக்கப்பட்டதாக போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

விலைவாசி அதிகரிப்பு பொருளாதார பிரச்சினைகள் இருக்கும் போது எவ்வாறு தீபாவளியை கொண்டாட முடியும். எனவே தோட்ட நிர்வாகம் உடனடியாக தீபாவளி முற்பணத்தை முறையாக வழங்க வேண்டும். இல்லாவிட்டால் தாம் ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்போம் என தொழிலாளர்கள் நிர்வாகத்திற்கு எச்சரித்துள்ளனர்.

### தீபாவளி தினத்தன்று

# மதுபானசாலைகளை மூடுமாறு இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கோரிக்கை



தீபாவளி தினத்தன்று மதுபானசாலைகளை மூடுமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி தமிழர் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் பகுதிகளில் மதுபானசாலைகளை மூடிவிடுமாறே கல்வி இராஜாங்க அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக கலால் திணைக்கள ஆணையாளர் நாயகத்துக்கு, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் அவசரக் கடிதமொன்றையும் அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'பதுளை, நுவரெலியா, கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை ஆகிய பகுதிகளில் பெரும்பான்மையாக இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஆகையால், இப்பிரதேசங்கள் மற்றும் தமிழர்கள் பெரும்பாலும் வசிக்கும் பகுதிகளில் தீபாவளி தினத்தன்று மதுபானசாலைகளை மூடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்வதாக அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பண்டாரவளை – தியத்தலாவை

# வீதியில் விபத்து; இளைஞன் பலி



( ஊவா சுழிற்சி நிருபர்)

பண்டாரவளை தியத்தலாவை வீதியில் கஹகொல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (20) மாலை இடம்பெற்ற வீதி விபத்தில் இளைஞன் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் பண்டாரவளை அம்பரராவையை சேர்ந்த 25 வயதுடையவர் என தெரியவருகின்றது.

தியத்தலாவை மதார் வத்தையிலிருந்து சிறிய ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் அமைந்துள்ள வேலியிலுள்ள கொங்கிறீட் தூணில் முட்டி மோதி வீதியில் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை தியத்தலாவை போக்குவரத்து பொலிஸ் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# நானுஓயாவில் மண்சரிவு; போக்குவரத்து பாதிப்பு



தொடர் மழை காரணமாக நேற்று காலை நுவரெலியா தலவாக்கலை பகுதியில் 105ஆவது கிலோமீற்றர் தூரத்திலுள்ள கிலாரண்டன் பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதில் இவ்வீதியூடான போக்குவரத்துக்கு தடைப்பட்டுள்ளது. மண்சரிவு காரணமாக நுவரெலியா, தலவாக்கலை மற்றும் மெராயா வழியூடாக டயகமைக்கான போக்குவரத்து முற்றாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மாற்று வீதியாக சாரதிகள் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியினை பயன்படுத்தி வருகின்றனர். எனினும் டெஸ்போட் பகுதியில் போக்குவரத்து சேவையின்றி பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதியில் பல இடங்களில் மண்சரிவு வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதால் அப்பாதையில் பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சங்கர் ராஜி நினைவு அறக்கட்டளையின் ஊடாக தலவாக்கலை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 ஆசிரியர்கள் அண்மையில் நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வு தலவாக்கலை பாமஸ்டன் பாடசாலையில் இடம்பெற்றது. (படம்: தலவாக்கலை குறூப் நிருபர்)

# ஆதிவாசிகளை விட மோசமான நிலையில் தோட்டப்பகுதி மக்கள்

-வே.இராதாகிருஷ்ணன் எம்பி

லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் ஆதிவாசிகளை விட மிக மோசமான நிலையில் வாழும் மலையக மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு தனியான செயலணி ஒன்றை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மலையக மக்களின் மனநிலையையும் அவர்களது கஷ்டங்களையும் ஜனாதிபதி ரணில் நன்குணர்ந்தவர். ஒவ்வொரு தடவையும் அவர்களின் பெரும்பாலான வாக்குகள் அவருக்கு கிடைத்துள்ளன.

அந்த வகையில் அவர்களின் நலன்கள் தொடர்பில் ஜனாதிபதி முக்கிய கவனம் செலுத்த வேண்டுமென்றும் அதற்காக ஒரு ஜனாதிபதி செயலணியை உருவாக்கி செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.



பாராளுமன்றத்தில் நேற்று மலையக மக்கள் தொடர்பில் மனோ கணேசன் எம்பி கொண்டு வந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இராதாகிருஷ்ணன் எம்பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஒரு குடும்பத்தில் ஐந்து பிள்ளைகள் இருந்தால் அதில் ஒருவர் மட்டும் நலிவடைந்து இருப்பதை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? அவ்வாறு தான் இலங்கையில் மலையக மக்களும் உள்ளனர். நாட்டில் ஆதிவாசிகள் கூட சிறப்பாக வாழ்கின்றனர். அதைவிட மோசமான நிலையிலேயே மலையக மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச நாடுகளின் உதவிகளைப் பெற்று மலையக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான திட்டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் காலத்தில் மலையக மக்கள் நலன்களை கவனிப்பதற்காக தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு இருந்தது. கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியது போல அது தற்போது இல்லாமலே போய்விட்டது.


அரசாங்கத்தின் சார்பில் ஒரு நிறுவனம் அங்கு இயங்கினாலும் அது கம்பனிகளின் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கே பணி செய்கின்றது என்றும் அவர் சபையில் மேலும் தெரிவித்தார்.

# ஹற்றனில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடு பாரிய சேதம்

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

ஹற்றன் குடாகம பகுதியில் வீடொன்றின் மீது நேற்று (21) காலை மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீடு பாரிய அளவில் சேதமடைந்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹற்றன் பகுதியில் பெய்துவரும் கடும் மழையினால் வீட்டின் பின்புறமுள்ள மண்மேடு சரிந்து வீட்டின் மீது விழுந்துள்ளது. மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் வீட்டின் ஒரு பகுதி முழுமையாக சேதமடைந்துள்ளதாகவும், எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை என தெரிவிக்கின்றனர். வீட்டில் வசிப்பவர்கள் தற்காலிகமாக பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதாகவும் ஹற்றன் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.





# தெளிவத்தை ஜோசப்பின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்

பதுளை தினகரன் விசேடநிருபர்

மலையகத்தின் மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பின் மறைவு ஈடு செய்யமுடியாததோர் பேரிழப்பாகும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் குறிப்பிட்டுள்ளார்.

1934ஆம் ஆண்டில் ஊவாக் கட்டவள என்ற தோட்டத்தில் பிறந்தவர். அதைத் தொடர்ந்து கும்பகோணம் சென்று அங்குள்ள உயர்நிலை கல்வி நிறுவனமொன்றில் கல்வி கற்றார். பின்னர் இலங்கை திரும்பி பதுளை.சென் பீட்டர்ஸ் கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்திருந்தார்.

தெளிவத்தை தோட்டத்தில் ஆசிரியராக பணியாற்றியதோடு தான் வாழ்ந்து வந்த தனது தோட்டத்தின் பெயரையும் தனது பெயருடன் இணைத்துக்கொண்டு செயற்பட்டார்.

1960 இல் தமிழ் இலக்கியத்துறையில் தடம்பதித்து மலையகம் மட்டுமின்றி நாட்டின் முக்கிய படைப்பாளியாகவும் திகழ்ந்தார். பல்வேறு பத்திரிகைகளிலும் நூல்களிலும் இவரது ஆக்கங்கள் பிரசுரமாகின.

இவர் வாழ் நாள் சாதனையாளர் விருது, சாகித்திய ரத்னா விருது உள்ளிட்ட பல உயர் விருதுகளையும் பெற்றுள்ளார். இவர் மலைநாட்டின் எழுத்தாளர் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றி வந்தவராவார்.

இலக்கிய உலகில் தனித்துவம் மிகுந்த எழுத்தாளர் என்ற உயரிய அந்தஸ்தையும் பெற்றிருந்த இவரது இழப்பு எவ்வகையிலும் ஈடு செய்யமுடியாத ஒன்றாகும் என தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

கண்டி பூஜாபிட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சட்டவிரோதமான முறையில் பன்றிகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்டிருந்த மின்கம்பி ஒன்றில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

52 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 19ஆம் திகதி இரவு வெளியே சென்று இவர் வீடு திரும்பாத நிலையில், நேற்றுமுன்தினம் காலை வீட்டுக்கு அண்மித்த பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பூஜாபிட்டிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடமை தவறும் அரசாங்க அதிகாரிகள் மீது நடவடிக்கை

(அக்குறனை நிருபர்)

அரச ஊழியர்கள் தமது கடமைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் அதுதொடர்பாக அறிவித்தல் விடுக்கும் வகையில் தொலைப்பேசி இலக்கங்கள் அரச காரியாலயங்களில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தெரிவித்தார்.

வத்துகாமம், பாத்தும்பறை பிரதேச செயலக காரியாலயத்தால் ஒழுங்குசெய்யப்பட்ட பிரதேச சாகித்திய விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், சில அரச அதிகாரிகளுக்கு அரசினால் இலவச தொலைப்பேசி வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள போதும் அவர்களில் அதிகமானோருடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளமுடியாமல் உள்ளது. அதிலும் அநேகமானோர் தமது தொலைபேசிகளை நிறுத்திவைத்துள்ளனர்.

அரச ஊழியர்கள் எப்போதும் தம்மை நாடி வரும் பொதுமக்களை இனிய முகம் கொடுத்து வரவேற்று அவர்களுக்கான சேவைகளை உரிய முறையில் நிறைவேற்றி வைக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் திறப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)



மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் நான்கு வான் கதவுகள் திறக்கப்பட்டு கொத்மலை ஆற்றில் வினாடிக்கு 200 கன அடிவீதம் வெளியேற்றப்பட்டு வருகிறது.

மலையக பகுதியில் பெய்து வரும் அடை மழை காரணமாக மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் ஐந்து வான்கதவுகளில் நான்கு வான்கதவுகள் நேற்று (21) அதிகாலை முதல் திறக்கப்பட்டதுடன், வினாடிக்கு 200 கன அடி வீதம் நீர் வெளியேற்றப்பட்டு வருவதாக நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரஞ்சித் அழககோன் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் தொடர்ந்தும் மழை பெய்வதால் நீர்த்தேக்கத்தின் எஞ்சிய வான் கதவுகளும் திறக்கப்படும் என்பதால், மேல் கொத்மலை நீர்த்தேக்க அணைக்கட்டுக்கு கீழே கொத்மலை ஓயாவின் இருபுறங்களிலும் வசிக்கும் மக்கள் அவதானமாக இருக்குமாறு உதவிப்பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, தொடரும் மழை காரணமாக ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதால், ஒருவழி போக்குவரத்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இவ்வீதியில் வாகனங்களை செலுத்தும் போது அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் சாரதிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மேல் கொத்மலை நீர்த்தேக்க பகுதிகளில் பெய்து வரும் கனமழையால், சென்கிளயார் மற்றும் டெவோன் நீர்வீழ்ச்சிகளில் இருந்து வெளியேறும் நீரும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கொழும்பு- 10 மருதானை அல்ஹிதாயா பாடசாலையின் 92வது ஆண்டு விழாவும் ஸ்மாட் வகுப்பறை ஒன்றின் திறப்பு விழாவும் நேற்று அல்ஹிதாயா பாடசாலையின் புர்ஹார்தீன் மண்டபத்தில் நடைபெற்றது. இவ் விழாவுக்கு பிரதம அதிதியாக வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்றி கலந்து கொண்டார்.

(அஷ்ரப் ஏ சமத்)

# தமிழ் சங்க நூல் வெளியீட்டில் தெளிவத்தை ஜோசப்புக்கு அஞ்சலி!

மலையகத்தின் இளம் எழுத்தாளர் சதீஸ் செல்வராஜ் எழுதியுள்ள 'குளிரும் தேசத்து கம்பளிகள்' நூலின் வெளியீட்டு நிகழ்வு ஏற்கனவே திட்டமிட்டபடி இன்று (சனிக்கிழமை) மாலை 4.30 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் முதற்கட்டமாக மறைந்த மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா தெளிவத்தை ஜோசப் அவர்களுக்கு மரியாதை செலுத்துமுகமாக அன்னாரது திருவுருவ படத்திற்கு தமிழ் எழுத்தாளர்கள், கலைஞர்களால் மலரஞ்சலி செலுத்தப்படும்.

தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமாகும் நூல் வெளியீட்டு நிகழ்வில் கொழும்பு விஜித ஹேரத் எம்பி, மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம், சிரேஷ்ட சட்டத்தரணி இரா. சடகோபன், தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர் .

புரவலர் புத்தகப் பூங்கா நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதற் பிரதியை பெறுவதோடு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மல்லியப்புச்சந்தி திலகரின் மதிப்புரை இடம்பெறும். தொழிற்சங்கப் பிரமுகர் கி.செல்வராஜ், தினேஸ்குமார் கார்மேகம், க.திலிப்குமார் (பெரியார் வாசகர் வட்டம் மட்டக்களப்பு) , முபஸ்ஸிரா அஸ்வர் (கொழும்பு பல்கலைக் கழகம்) ஆகியோரதும் உரைகள் இடம்பெறுவதோடு கெபிட்டல் எப்எம் வானொலியின் ஹம்சி மார்லன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கவுள்ளார்.



பேருவளை பிரதேச சபையின் புதிய உறுப்பினராக ஐ.தே .க சார்பில் நியமனம் பெற்றுள்ள திருமதி நூர்நஸிமா களுத்துறை மாவட்ட ஐ.தே.க.இணைப்பாளர் ஜனித சில்வா முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்ட போது எடுக்கப்பட்ட படம். பிரதேச சபை உறுப்பினராக இருந்த செல்வி லலிதா மிகொடவின் மரணத்தை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கே தர்காநகரைச் சேர்ந்த நுர்நஸிமா நியமனம் பெற்றார். பேருவளை பிரதேச சபைக்கு நியமனம் பெற்ற முதல் முஸ்லிம் பெண்மணி இவராவார்.

# காலங்கள் சாவதில்லை என்றவருக்கு கண்ணீர் அஞ்சலி

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப் ஈழத்து தமிழ் இலக்கியத்தையும் குறிப்பாக மலையக இலக்கியத்தையும் செழுமைப்படுத்தி வந்தவர். இவர் இலங்கையின் மூத்த எழுத்தாளர். தனது பெயருடன் பிறந்த இடமான தெளிவத்தையையும் சேர்த்து தெளிவத்தை ஜோசப் என்ற பெயருடன் தமிழ் இலக்கிய உலகில் வலம் வந்தவர். முதன்மை தமிழிலக்கிய இதழ்களின் அட்டைப்பட அதிதியான தெளிவத்தை ஜோசப் அறுபதுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார். இதுவரை ஆறு நாவல்களையும், மூன்று சிறுகதை தொகுதிகளையும் வெளியிட்டுள்ள தெளிவத்தை ஜோசப், இலங்கையில் தயாரிக்கப்பட்ட புதிய காற்று திரைப் படத்திற்கும் தொலைக்காட்சி நாடகமொன்றுக்கும் திரைக்கதை, வசனம் எழுதியுள்ளார். தமிழ்ச் சங்கத்தின் கௌரவ உறுப்பினரான இவர் தனது பொக்கிஷமாக சேகரித்த நூல் தொகுதிகள் அனைத்தையும் சங்க நூலகத்திற்கு வழங்கியவர். இவரது இழப்பு தமிழ் இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிராத்திக்கின்றோம்.

# ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்து கௌரவிப்பு

சென்னையில் உள்ள முகாம் அலுவலகத்தில் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை வியாழக்கிழமை இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் கே. நவாஸ் கனி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச்செயலாளர் மற்றும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஏ.எம். முகமது அபூபக்கர், திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் சந்தித்து இரண்டாவது முறையாக தி.மு.க. தலைவராக தேர்வு செய்யப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்து பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். தி.மு.க. பொதுச்செயலாளர் மற்றும் அமைச்சர் துரைமுருகன், பொருளாளரும், பாராளுமன்ற குழுத் தலைவர் டிஆர்.பாலு, துணைப் பொதுச் செயலாளரும், அமைச்சருமான க. பொன்முடி, அமைச்சர்கள் எ.வ வேலு, சேகர்பாபு ஆகியோர் அருகில் இருந்தார்கள்.



(படம்: திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது)



மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெ. சுந்தரலிங்கத்துக்கு இந்தியாவின் 'ருத்ராக்ஷ பவுண்டேஷன்' வழங்கிய 'ராஜ ராஜ சோழன்' சர்வதேச விருது கடந்த 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இந்தியாவின் சென்னை நகரில் வழங்கப்பட்டது. குறித்த விருதை ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பெ. சுந்தரலிங்கம் சார்பாக ஆலய அறங்காவலர் சபை உறுப்பினரும் அவரது மகளுமான திருமதி சுதர்சினி கிலர்பதி பெற்றுக் கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்ற இருவருக்கு கௌரவம்

கனடா ஸ்காபுறோ நகரில் நடைபெற்ற ''உதயன் சர்வதேச விருது விழா 2022 'ல் வாழ் நாள் சாதனையாளர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இருவருக்கு மொன்றியால் மாநகரில் அளிக்கப்பெற்ற வரவேற்புபசாரம் மற்றும் நூல் வெளியீட்டு வைபவம் ஆகியன சிறப்பாக நடைபெற்றன. மொன்றியால் திருமுருகன் ஆலய கலாச்சார மண்டபத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் ஆர்வத்துடன் அனைவரும் கலந்து சிறப்பித்தனர்.

தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் மற்றும் இலங்கைக்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஸ் தியாகராஜா ஆகியோருக்கே இந்த வரவேற்புபசாரம் வைபவம் நடத்தப்பட்டது. மொன்றியால் வாழ் அன்பர்கள் இணைந்து ஏற்பாடு செய்த இந்த வைபவத்திற்கான ஏற்பாடுகளை திருவாளர் வாகீசன். உதயகுமார். வீணைமைந்தன் சண்முகராஜா. சிவஸ்ரீ ஸ்ரீ ஐயா ஏம்எம்ஆர். ராஜ்கோபால் ஆகியோர் செய்திருந்தனர்.



தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் மற்றும் இலங்கைக்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தலைவர் நிரோஸ் தியாகராஜா ஆகியோர் நன்றி தெரிவித்து தங்கள் உரைகளை வழங்கினர். கனடா உதயன் பிரதம ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கமும் அங்கு உரையாற்றினார். அத்துடன் தமிழ்நாட்டிற்கான வாழ் நாள் சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற பேராசிரியர் வேலாயுதம் சங்கரநாராயணன் உதயன் வார இதழில் எழுதிய 'பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்' என்னும் நூலின் பிரதிகளும் மொன்றியால் வாழ் அன்பர்களுக்கு வழங்கப்பட்டன.



# 'சுப்பர் 12' சுற்று இன்று ஆரம்பம்: போட்டிகளுக்கு மழை அச்சுறுத்தல்

டி20 உலகக் கிண்ணத்தின் சுப்பர் 12 சுற்றுப் போட்டிகள் இன்று (22) ஆரம்பமாகின்றன. இன்று போட்டியை நடத்தும் அவுஸ்திரேலிய அணி நியூசிலாந்தை சிட்னி நகரில் எதிர்கொள்ளவிருப்பதோடு பேர்த்தில் இங்கிலாந்து அணி ஆப்கான் அணியை எதிர்கொள்ளவுள்ளது.

ஆரம்ப சுற்று போட்டி முடிவில் இலங்கை, நெதர்லாந்து, அயர்லாந்து மற்றும் சிம்பாப்வே அணிகள் சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேறியுள்ளன. இதில் இலங்கை அணி சுப்பர் 12 சுற்றில் குழு 1இல் இடம் பெற்றுள்ளது. இந்தக் குழுவில் அவுஸ்தரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய நேரடி தகுதிபெற்ற அணிகளுடன் அயர்லாந்தும் ஆரம்ப சுற்றில் இருந்து முன்னேற்றம் கண்டுள்ளது.

இதன்படி இலங்கை அணி நாளை (22) தனது முதல் சுப்பர் 12 சுற்றுப் போட்டியில் அயர்லாந்துடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. ஹோபார்ட்டில் நடைபெறும் இந்தப் போட்டி இலங்கை நேரப்படி காலை 9.30க்கு ஆரம்பமாகவுள்ளது.

அதேபோன்று நாளை பெரிதும் எதிர்பார்க்கப்படும் குழு 2க்கான இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியும் இடம்பெறவுள்ளது. மெல்போர்ன் எம்.சி.ஜி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டி பிற்பகல் 1.30க்கு ஆரம்பமாகும்.

எனினும் பிரதான போட்டிகளில் மழை குறுக்கிடும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போட்டி அதேபோன்று இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான வார இறுதிப் போட்டிகளில் மழை பெய்ய அதிக வாய்ப்பு இருப்பதாக காலநிலை அவதானிப்பு நிலையம் குறிப்பிடுகிறது.

சுப்பர் 12 போட்டிகளுக்கு மேலதிக நேரம் ஒதுக்கப்படாத நிலையில் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வாய்ப்பு உள்ளது.

குறிப்பாக இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையிலான போட்டிக்கு 100,000 ரசிகர்கள் வரை அரங்கில் திரள்வார்கள் என்று எதிர்பார்ப்பதோடு மேலும் மில்லியன் கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் போட்டியை காண்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த போட்டிக்கு மழை குறுக்கிட அதிக வாய்ப்பு இருப்பதாக கலநிலை அவதானிப்பு நிலையம் எதிர்வுகூறியுள்ளது.

இங்கு இடியுடன் கூடிய மழை பெய்ய 80 வீத வாய்ப்பு இருப்பதாக காலநிலை அவதானிப்பு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அணி ஆடும் ஹோர்பார்ட்டிலும் ஞாயிற்றுக்கிழமை மழை பெய்வதற்கான வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் இங்கிலாந்து இன்று தனது முதல் போட்டியில் ஆப்கானை சந்திக்கும் பேர்த்தில் மழை பொழிவதற்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

டி20 போட்டி ஒன்றின் முடிவு காணப்பட குறைந்தது 5 ஓவர்கள் வீசப்பட வேண்டும். இந்நிலையில் மழை குறுக்கிட்டால் போட்டி முழுமையாக கைவிடப்படும் சூழல் உள்ளது. இது அரையிறுதிக்கு முன்னேறும் அணிகளில் தாக்கம் செலுத்துவதாகவும் உள்ளது.




## இலங்கை வீரர்களின் காயங்கள் குறித்து மைதானம் மீது குறைகூறுகிறார் தீக்ஷன

இலங்கை குழாத்தில் பல வீரர்களும் காயமடைவதற்கு குளிர் காலநிலை மாத்திரமன்றி மைதானத்தில் மண்ணின் உறுதியற்ற தன்மையும் ஒரு காரணம் என்று இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற நெதர்லாந்துக்கு எதிரான போட்டிக்குப் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த தீக்ஷன, கீலொங்கில் உள்ள கார்டினியா பார்ன் மைதானத்தில் மண் ஸ்திரமற்று இருப்பது உபாதைகளுக்குக் காரணம் என்றார். இலங்கை டி20 உலகக் கிண்ணத்தில் தனது ஆரம்ப சுற்றின் முதல் மூன்று போட்டிகளையும் இந்த மைதானத்திலேயே ஆடியது.

கீலொங்கில் தட்பவெப்பநிலை 14 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருப்பதோடு அது சில நேரம் இரவு வேளைகளில் 6 டிகிரி செல்சியஸ் வரை குறைகிறது. கார்டினியா பார்க் மைதானத்தில் பந்தை அடித்தால் அது சில நேரம் நகராமல் இருக்கும். ஸ்திரமற்ற மண் இதற்குக் காரணம் என்று தீக்ஷன குறிப்பிட்டார்.



தற்போது இலங்கை அணியில் நான்கு வீரர்கள் உபாதைக்கு உள்ளாகியுள்ளனர். இதில் தனுஷ்க குணதிலக்க, துஷ்மன்த சமீர, டில்ஷான் மதுஷ்க ஆகியோர் காயம் காரணமாக அணியில் இருந்து விலகி இருப்பதோடு பத்தும் நிசங்க மற்றும் பிரமோத் மதுஷானுக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளது.

இதில் நிசங்கவின் காயம் தீவிரம் இல்லை என்றபோதும் அவர் ஒரு சில நாட்கள் ஒய்வு பெற அறிவுறுத்தப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் நாளை நடைபெறவுள்ள இலங்கை அணியின் சுப்பர் 12 சுற்றின் முதல் போட்டியில் அவர் பங்கேற்பது உறுதி செய்யப்படவில்லை.

நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் நிசங்க களத்தடுப்பில் ஈடுபடாத நிலையில் முன்னெச்சரிக்கையாக அவர் ஸ்கேன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டார்.

## டி20 உலகக் கிண்ணத்தில் இருந்து மேற்கிந்திய அணி வெளியேற்றம்

### அடுத்த சுற்றுக்கு அயர்லாந்து தகுதி

டி20 உலகக் கிண்ணத்தில் இரு முறை சம்பியனான மேற்கிந்திய தீவுகள் அயர்லாந்துக்கு எதிராக 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்து ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறியது. ஹோபார்ட்டில் நேற்று நடந்த இந்தப் போட்டியில் வெற்றியீட்டிய அயர்லாந்து அணி சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.



இதில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 146 ஓட்டங்களை பெற்றது. மத்திய வரிசையில் பிரண்டன் கிங் 48 பந்துகளில் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களை விளாசினார்.

எனினும் பதிலெடுத்தாடிய அயர்லாந்து அணி எந்த நெருக்கடியும் இன்றி 17.3 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 150 ஓட்டங்களை பெற்று இலகு வெற்றியீட்டியது. ஆரம்ப வீரர் போல் ஸ்டேர்லிங் 48 பந்துகளில் ஆட்டமிழக்காது 66 ஓட்டங்களை பெற்றார்.

2012 மற்றும் 2016 டி20 உலக சம்பியனான மேற்கிந்திய தீவுகள் அணி தனது ஆரம்ப சுற்றின் முதல் போட்டியில் ஸ்கொட்லாந்திடம் தோல்வி அடைந்து சிம்பாப்வேயுடனான போட்டியில் வென்ற நிலையில் அடுத்த சுற்றுக்கு முன்னேற நேற்றைய போட்டியில் கட்டாயம் வெல்ல வேண்டிய நெருக்கடியுடனேயே களமிறங்கியது.

மறுபுறம் அடுத்த சுற்றுக்கு முன்னேறி இருக்கும் அயர்லாந்து சுப்பர் 12இல் இலங்கை, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகள் இடம்பெற்றிருக்கும் குழு 1இல் இடம்பிடித்துள்ளது.

## ஊவா வெல்லச பல்கலை வெற்றி



**சாய்ந்தமருது விசேட, கல்முனை மத்திய தினகரன் நிருபர்கள்**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தினால் நடாத்தப்பட்ட உபவேந்தர் பூப்பந்து வெற்றிக் கிண்ண சுற்று போட்டியின் இறுதிப் போட்டியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக உத்தியோகத்தர் பூப்பந்து அணியினை தோற்கடித்து, ஊவா வெல்லச பல்கலைக் கழக அணி சம்பியனாக தெரிவானது.

இந்தப் போட்டி பல்கலைக்கழக உள்ளக பூப்பந்து மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

## விளையாட்டு உபகரணம் வழங்கல்

**வெல்லா வெளி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 14 பிரதேச செயலகங்களிலும் நிறுவப்பட்டுள்ள விளையாட்டு குழுக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (20) மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் கடந்த வருடம் சகல மாவட்டங்களிலும் உள்ள பிரதேச செயலக பிரிவுகள் ரீதியாக 21 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீர, வீராங்கனைகளின் திறமையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் தனித்துவம் வாய்ந்த விளையாட்டு குழுவினை நிறுவுவதற்கான செயற்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் வி. ஈஸ்வரனின் ஒழுங்கமைப்பில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

## பதக்கம் வென்ற வீரர்கள் வரவேற்பு



**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

மாகாண மட்ட மெய்வல்லுனர் போட்டியில் 100 மீற்றர் குறுந்தூர ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்ற பொத்துவில் அல்கலாம் மகா வித்தியாலய மாணவன் ஜுனைதீன் ஆபித் ஹுசைன் மற்றும் 110 மீற்றர் தடை தாண்டி ஓடும் போட்டியில் வெள்ளி பதக்கம், 400 மீற்றர் ஓட்டப் போட்டியில்வெண்கலபதக்கத்தைகைப் பற்றிய அப்துல் கரீம் அமான் ஐசான் இருவரையும் பொத்துவில் பிரதேச சபை மற்றும் அல்கலாம் பாடசாலை இணைந்து ஏற்பாடு செய்த வரவேற்பு நிகழ்வும் ஊர்வலமும் அண்மையில் பொத்துவிலில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச். அப்துல் ரஹீம், கௌரவ அதிதியாக அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக்கல்வி பணிப்பாளர் எம்.எம்.எஸ். ஹக்கீம், பாடசாலை அதிபர் எம்.எல். பிர்தௌஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சிம்பாப்வே சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேற்றம்



ஸ்கொட்லாந்துக்கு எதிரான டி20 உலகக் கிண்ண ஆரம்ப சுற்றுப் போட்டியில் 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய சிம்பாப்வே அணி சுப்பர் 12 சுற்றுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது. இதன்படி ஸ்கொட்லாந்து அணி ஆரம்ப சுற்றுடனேயே வெளியேறியது.

ஹோபார்ட்டில் ஆரம்ப சுற்றின் கடைசிப் போட்டியாக நேற்று (21) நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கொட்லாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களையே பெற்றது. ஆரம்ப வீரர் ஜோர்ஜ் முன்சி 51 பந்துகளில் 54 ஓட்டங்களை பெற்றார்.

பதிலெடுத்தாட களமிறங்கிய சிம்பாப்வே அணி 7 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை பறிகொடுத்தபோதும் அணித் தலைவர் கிரேக் எர்வின் ஒருமுனையில் சிறப்பாக ஆடி 54 பந்துகளில் 58 ஓட்டங்களை பெற்றதோடு சிகந்தர் ராசா 23 பந்துகளில் 40 ஓட்டங்களை விளாசினார்.

இதன்மூலம் சிம்பாப்வே அணி 18.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 133 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இந்த வெற்றியுடன் பி குழுவில் முதல் இடத்தைப் பெற்ற சிம்பாப்வே அணி சுப்பர் 12 சுற்றில் குழு 2க்கு முன்னேற்றம் கண்டது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்க அணிகள் உள்ளன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 22ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# 22ஆம் திருத்தத்தில் ஏதேனும் சிக்கல் இருப்பின் நீதி அமைச்சருடன் கலந்துரையாடுங்கள்

## ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி ஆலோசனை

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூல வரைபில் ஏதேனும் சிக்கல் காணப்படுமாயின் அது தொடர்பில் நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷவிடம் கலந்துரையாடுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

22ஆவது திருத்தச் சட்டமூல வரைபு தொடர்பில் ஜனாதிபதிக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குமிடையிலான சந்திப்பு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

22ஆவது திருத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் மேலும் பலப்படுத்தப்பட வேண்டும் என இதன் போது எஸ்.பி.திஸாநாயக்க எம்.பி தெரிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தான் ஏற்கனவே தெரிவித்திருந்ததன்படி அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூல வரைபுக்கு எதிராகவே வாக்களிப்பதாக குறிப்பிட்டார். இதன்போது கருத்து தெரிவித்த பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் 22ஆவது திருத்த வரைபுக்கு அவர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு இணங்க எதிராகவே வாக்களிப்பார்கள் என்றும் தெரிவித்தார்.

# நொத்தாரிசுகள் இழைக்கும் குற்றங்கள்: அறவிடப்படும் ரூ.2,500 தண்டப்பணம் 10,000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நொத்தாரிசுகள் குற்றங்களை இழைக்கப்படும் பட்சத்தில் அறவிடப்படும் 2,500 ரூபா தண்டப்பணத்தை 10,000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக நீதியமைச்சர் விஜேயதாச ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பழமையான சட்டங்களை காலத்தின் தேவைக்கேற்ப திருத்தம் செய்யும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உள்ளது என்பதை சுட்டிக்காட்டிய அமைச்சர் பெரும்பாலான சட்டங்களை திருத்தம் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று முன்தினம் ஐந்து திருத்தச் சட்டமூலங்களை சபையில் முன்வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

இறுதி விருப்பு பத்திரம் (உயில்), அற்றோணித் தத்துவ சட்டமூலம், நொத்தாரிசு திருத்தச் சட்டமூலம், ஆவணங்களை பதிவு செய்தல் சட்டமூலம், ஊழல் ஒழிப்பு சட்டமூலம் ஆகிய சட்டமூலங்கள் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.



இந்த சட்டமூலங்கள் ஐந்தும் மிக முக்கியமானவை.100 வருடகால வழமை வாய்ந்ததுடன், கட்டளைச் சட்டத்தின் ஊடாக இச்சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்த சட்டங்கள் ஊடாக அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றன. விருப்பாவணங்கள் சட்டம் அசையும் மற்றும் அசையா சொத்துக்களுடன் அது தொடர்புபடும்.இந்த சட்டங்கள் 100 வருடகால பழமை வாய்ந்ததுடன், காலத்தின் தேவைக்கமைய திருத்தம் செய்யப்படவில்லை.இந்த விடயம் தொடர்பில் பல்வேறு தரப்புடன் விரிவான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டன.சட்ட வல்லுநர்களை ஒன்றிணைத்த குழுவின் பரிந்துரைக்கமைய திருத்தங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. விசேடமாக இந்த திருத்தங்கள் ஊடாக பல மாற்றங்களை எதிர்பார்க்கிறோம்.

# 22 ஆவது திருத்தத்தை விட மக்களின் பிரச்சினைக்கான தீர்வே அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம்

திருத்தங்களைக் கொண்டு வருவதை விடுத்து மக்களின் மனங்களை வெல்லக்கூடிய செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எஸ்.ஸ்ரீதரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் இனவாதம், மதவாதம் களையப்பட்டு புதிய சிந்தனைகள் உருவாக்கப்பட வேண்டும் என்று சபையில் தெரிவித்த அவர், திருத்தங்கள் ஒருபோதும் பயனளிக்கப் போவதில்லை என்றும் புதிய அரசியலமைப்பை கொண்டு வருவதே சிறந்தது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதை வேளை, அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் 22 வது அரசியலமைப்பு திருத்தம் பல்லாண்டு காலமாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு நலிவடைந்துள்ள வடக்கு



கிழக்கு மக்களுக்கோ நாட்டுக்காக பாடுபட்டு உழைக்கும் மலையக மக்களுக்கோ எந்த நன்மையையும் வழங்கப் போவதில்லை என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் 22 ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாறி மாறி வரும் ஆட்சியாளர்கள் தமது நன்மைக்காக அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றார்கள் அதே போன்று இம்முறையும் சிலரின் இருப்புக்களுக்காகவும் சிலரை வெளியே அனுப்புவதற்காகவும் இந்த 22 ஆவது திருத்தம் கொண்டு வரப்படுகின்றது. இதனால் மக்களே ஏமாற்றப்படுகிறார்கள்.

தொடர்ந்து இந்த நாட்டை ஆட்சி செய்த தலைவர்கள் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவில்லை. அதுவே எமது தலைவர்களின் மனநிலை. தொடர்ந்தும் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளார்கள். தற்போது அரசியலமைப்பு திருத்தம் அல்ல. நாட்டில் உள்ள முக்கியமான பிரச்சினைகள் என்ன என்பதை சிந்தித்துப் பாருங்கள். அதற்கு தீர்வு காண நடவடிக்கை எடுங்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அரசியலமைப்பின் திருத்தம் போன்று கட்சிகளின் யாப்பும் திருத்த வேண்டும்

லோரன்ஸ் செல்வநாயகம்

கட்சியின் தீர்மானம் எவ்வாறு அமைந்தாலும் சுயாதீனமாக தீர்மானம் எடுக்கும் உரிமையை கட்சிகளின் யாப்புக்கள் கொண்டிருக்க வேண்டும் அவ்வாறான திருத்தங்கள் கட்சிகளின் யாப்பில் மேற்கொள்ளப்பட வேண்டுமென

அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்வது போன்று அரசியல் கட்சிகளின் யாப்புகளிலும் திருத்தம் கொண்டு வரப்படுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்:

இரட்டைப் பிரஜா உரிமையை கொண்டிருப்பவர்கள் பாராளுமன்றத்துக்கு வருவது, ஜனாதிபதி பதவி வகிப்பது மற்றும் நாட்டில் உயர் பதவிகளுக்கு நியமிப்பதற்கு முடியாது என்ற நிலைப்பாட்டிலேயே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆரம்பத்திலிருந்தே இருந்து வந்துள்ளது.



அந்த வகையிலேயே மத்திய வங்கியின் ஆளுநராக அர்ஜுன் மஹேந்திரனை நியமிப்பதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவித்தோம். எனினும் தற்போது 22ஆவது திருத்தத்தில் அது தொடர்பான திருத்தங்கள் உள்வாங்கப் பட்டுள்ளன. அதேபோன்று தேர்தல் மறுசீரமைப்பும் அவசியம் என்பதுடன் விருப்புவாக்கு முறையும் இல்லாதொழிக்கப்பட வேண்டும். என்னை பொறுத்தவரை நான் இந்த தேர்தல் முறையில் அடிப்படையிலேயே ஆறு தடவைகள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளேன். எனினும் எனது சுயநலத்தை கைவிட்டு பொறுப்புக்கூறக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யும் முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பதை நிலைப்பாடாகக் கொண்டுள்ளேன். மேலும் அரசியலமைப்பு மூலம் மக்களின் உரிமை பாதுகாக்கப் படவேண்டும். மாற்றத்தை ஏற்படுத்தவே மக்கள் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இறுதியில் அரசியல் பயங்கரவாதம் தலைதூக்கி நாட்டில் பாரிய அழிவை ஏற்படுத்தியது. 20ஆவது திருத்தத்தில் அரசியல் கட்சிகளின் கொள்கைக்கு ஏற்றவாறு செயற்பட முடியாத நிலைமை இருந்தது. அதனால் கட்சியை பாதுகாத்துக்கொண்டே செயற்படவேண்டியிருந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 22 ஆவது திருத்தம் மூலம் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றம் ஏற்படாது

## சபையில் சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்திருக்கும் இவ்வேளையில் மறுசீரமைப்பு என்ற பெயரில் 22ஆவது திருத்தத்தைக் காட்டி மக்களை ஏமாற்றுவதற்கு ஆட்சியாளர்கள் முயற்சிப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்பி எம்.ஏ.சுமந்திரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

17, 18, 19, 20 என அந்த திருத்தங்களுக்கு வாக்களித்தவர்களே இப்போது 22 ஆவது திருத்தத்துக்கும் ஆதரவளிப்பதற்கு தயாராகின்றனர்.இதன் மூலம் என்ன நடக்க போகின்றது என்றும் அவர் சபையில் கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 22 ஆவது திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே சுமந்திரன் எம்.பி இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

22 ஆவது திருத்தச் சட்டமூலம் முக்கியமான மறுசீரமைப்பாக கருதப்படுகின்ற போதும் உண்மையில் அது அவ்வாறில்லை.

இந்த திருத்தம் ஊடாக என்ன நடக்கப் போகின்றது.


பாராளுமன்றத்தில் 17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு வாக்களித்தவர்களே 18 ஆவது திருத்தத்துக்கும் வாக்களித்தனர். அதே போன்று 19 ஆவது திருத்தம் பின்னர் 20 ஆவது திருத்தத்துக்கும் அவர்கள் வாக்களித்துவிட்டு இப்போது 22 ஆவது திருத்தத்துக்கும் வாக்களிக்கவும் தயாராகின்றனர்.

இத்தகைய சூழ்நிலையில் நான் சரத் வீரசேக்கரவை மதிக்கின்றேன். சரியோ தவறோ எதிலும் அவர் குழம்பாமல் ஒரே கொள்கையோடு செயற்படுகின்றார். நாட்டு மக்கள் மாற்றமொன்றையே கோருகின்றனர். ஆனால் 22 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் அது மோசடியாகவே அமையும். எவ்வாறெனினும் அது முழுமையான மாற்றமாக அமையாது.

# பொருளாதார நெருக்கடியிலிருந்து நாடு மீள்வதற்கு 22 முதல் படியாக அமையும்

## சி.வி. விக்னேஸ்வரன் எம் பி

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பாரிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு 22ஆவது திருத்தச் சட்ட நிறைவேற்றம் முதல் படியாக அமையுமென தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஷ்வரன் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடிக்கு தீர்வு காணும் முதல் படியாக 22ஆவது திருத்தச் சட்டமூலத்தை கருதுவதாகவும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி 22ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 22ஆவது திருத்தச் சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

22ஆவது திருத்தச் சட்டமூல வரைபு முற்போக்கான விடயங்களை கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. 19ஆவது திருத்தம் ஜனநாயக இலட்சணங்களைக் கொண்டிருந்தது.

22ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்படவில்லை. அமைச்சரவை நியமனம்,அமைச்சின் செயலாளர் நியமனம் உள்ளிட்ட முக்கிய பல நியமனங்கள் ஜனாதிபதிக்கு பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

ஒருசிலரின் அபிலாசைகளையும் கோரிக்கைகளையும் நிறைவேற்றும் வகையில் 22ஆவது திருத்த வரைபு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

# போதைப் பொருட்கள் குற்றங்கள் சட்ட திருத்தத்துக்கு பூரண ஆதரவு

## தலதா அதுகோரள எம்.பி

லோரன்ஸ் செல்வநாயகம்



போதைப் பொருள் தொடர்பான குற்றவாளிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான விசேட செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றும் அது தொடர்பான சட்ட மூலங்களுக்கு பூரண ஆதரவை வழங்க முடியுமென்றும் முன்னாள் நீதியமைச்சர் தலதா அதுகோரள எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பான சட்டத்திருத்தம் காலத்திற்கு பொருத்தமானது என குறிப்பிட்ட அவர் அதற்குப் பூரண ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் நபர்களுக்கு தண்டனை வழங்குவதால் மாத்திரம் சமூக மட்டத்தில் அது தொடர்பான குற்றங்கள் குறைந்து விடாது என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்: நடைமுறைக்கு சாத்தியமான சட்டத்திருத்தங்களை நீதியமைச்சர் சபையில் முன்வைத்துள்ளார்.

சட்ட வல்லுநர்களை உள்ளடக்கிய வகையில் பல குழுக்களை நியமித்து இந்த சட்ட திருத்த நடவடிக்கையை நீதி அமைச்சர் மேற்கொண்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

சிறைக் கைதிகளும் மனிதர்கள் என்ற கொள்கைக்கமைய சிறைச்சாலை அலுவல்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

# வட,கிழக்கிலுள்ள ஐந்து வருடங்களுக்கு மேல் அரச திணைக்களங்களில் பணிபுரியும் அதிகாரிகளை இடமாற்றம் செய்ய கோரிக்கை



வடகிழக்கில் ஐந்து வருடங்களுக்கு மேல் அரச திணைக்களங்களில் பணிபுரியும் அதிகாரிகளை உடனடியாக இடமாற்ற வேண்டும் என்று ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தலைவர் சித்தீக் முஹம்மத் சதீக் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். .

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எமது நாட்டில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஐந்து வருடத்துக்கு மேலாக அரசதுறையில் பணிபுரியும் அரச அதிகாரிகளும் உத்தியோகத்தர்களும் உள்ளனர். அதேபோன்று பொதுமக்களின் முறைப்பாட்டுக்கு உட்பட்ட பணியாளர்களும் கணிசமான அளவில் இன்றும் காணப்படுகின்றனர். இத்தகையவர்களால் பல்துறைசார் அரச நிருவாகங்கள் வினைத்திறன் அற்று செயற்படுகின்றது என்று ஸ்ரீலங்கா ஐக்கிய முன்னணி கட்சியின் தேசியத் தலைவர் சித்தீக் முஹம்மத் சதீக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றால் மக்களுக்கான பொது பணியாற்றும் அரச நிறுவனங்கள் தொடர்பில் நம்பிக்கையீனம் ஏற்படலாம்.

எனவே இவ்வாறானவர்களை இனங்கண்டு உரியமுறையில் இடமாற்றம் செய்வதற்கு ஆவன செய்யுமாறும் நேர்மையும் தகுதியும் உடையவர்களை உரிய பதவிகளுக்கு நியமிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# பாராளுமன்றுக்கு சமமான மக்கள் சபையா? ஊடகங்களின் தகவல்களை நிராகரித்தார் சபை முதல்வர்

லோரன்ஸ் செல்வநாயகம்

பாராளுமன்றத்துக்கு சமமான மக்கள் சபை ஒன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக ஊடகங்கள் மூலம் தெரிவிக்கப்படும் கூற்றுக்களை சபை முதல்வரும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த முற்றாக நிராகரித்தார்.

அது தொடர்பான தகவல்கள் ஊடகங்கள் மூலம் அறியக்கிடைத்ததாக சபையில் தெரிவித்த அமைச்சர், பாராளுமன்றத்திற்கு சமமான அவ்வாறான சபைகளை அமைப்பது சட்ட விரோதமாகுமென்றும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றிய அமைச்சர் அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்:

பாராளுமன்றத்துக்கு சமமான மக்கள் சபை ஒன்றை அமைப்பதற்கு தயாராகி வருவதாக ஊடகங்கள் மூலம் அறியக் கிடைக்கின்றது. அரசியலமைப்பின் 70ஆவது பிரிவின்படி அரசியலமைப்பு மூலமான அதிகாரம் பாராளுமன்றத்துக்கே உள்ளது.

அதேபோன்று 71ஆவது பிரிவின்படி பாராளுமன்றத்தினால் அதன் அதிகாரத்தை வேறு எந்த நிறுவனத்திற்கும் வழங்கக்கூடாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று அரியலமைப்பு மூலமான அதிகாரங்களைக் கொண்ட எந்த சபையும் பாராளுமன்றத்துக்கு வெளியில் அமைக்கப்படக்கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தேர்தல் முறை ஒன்று நடைமுறையில் உள்ளது.பாராளுமன்ற ஆட்சிக்காலம் தொடர்பில் அரசியலமைப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. ஆட்சிக்காலத்துக்கு முன்னர் பதவிக்காலம் மாற்றமடைவதாக இருந்தால் அது எவ்வாறு அமையவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரமே சட்ட ரீதியில் தேர்தல் ஊடாக தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம் இருக்கின்றது. அதனால் மக்களின் பிரச்சினைகள் மற்றும் சட்டம் இயற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரம் இருப்பது மக்கள் பிரதிநிதிகள் உள்ள பாராளுமன்றத்திற்கு மட்டுமேயாகும்.





சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு மரைன் கிராண்ட் பேங்க்வெட் அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் உப தலைவர் திருமதி பெரோசா முஸம்மில் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் மற்றும் ஊழியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.படம் இக்பால் அலி

புதுப்புனல்
ஷம்ஸ் பாஹிம்

# மீலாத் துயரில் மீலாத் விழா!




மீலாத் துயரில்
மீலாத் விழா
நாலா பக்கமும்
நகர்ந்து சென்றது

அன்று_
பாதைகளெங்கும்
தோரணங்கள்
எழுந்து நின்றன

அவை_
சமூகத்தைப் பார்த்து,
சன்மார்க்கத்தை
கேவலப்படுத்திவிட்ட தென
ஏளனம் செய்தன

மருந்து இருந்து,
அதை அருந்தினாலும்
சுகம் பெற முடியாதென்று
அழுத்தமாக நின்று
கருத்தொன்றை
அவதரிக்கச் செய்தது

நோய் நிவாரணம்
நிமிர்ந்து நிற்கிறது;
இருப்பினும்,
பிடிவாதம்
ஏற்க விடாமல் தடுக்கிறது

இவ்வாறு,
'றபிஉல் அவ்வல்'
பிறை பன்னிரண்டு
கறைபடிந்து விட்டதென்று
பறைசாற்றிப் பாடிவிட்டு
பறந்து போனது

பிறந்த தினத்துக்கு
பிரேரனை வழங்க
பிறப்புச் சான்றிதழுக்கு
உறுதி இல்லை;
இறந்த தினமே உலகிலெங்கும்
உண்மைப்படுத்தப் படுகிறது;
அதனால்,

இறந்ததினத்தையே
பிறந்த தினமாக
மதமாற்றிவிட்டு
கொண்டாட்டத்துக்கு
மலர் மாலை
அணிவிக்கிறார்கள்

இதுவே,
பிரச்சினைகளுக்கு
பிரசவம் பார்க்கிறதென
பிரேரணைகள் பிரகாசம் கொடுத்தன

மௌலிதுகளிலிருக்கும்
கருத்துப் பிழைகள்
இன்னும் 'மௌத்தாக
வில்லையென
சத்தியத்துக்காக சத்தங்களை
உயர்த்தினார்கள்

ஆனாலும்,
அசத்தியங்கள்
'குப்ரியத்' திடம்
அடிமைகளாகிவிட்டன

இவ்வாறு
வருடத்தில் மூன்று
துடுப்பாட்டம் நடத்திட
மௌலவி மார்கள்
கற்றவர்களும்
மார்க்கத்தை விற்பவர்களும்
களத்தில் குதிப்பது
பழக்கத்தில் வந்துவிட்டது

இரண்டு பக்கங்களில்
இடம் பெறும்
பந்து வீச்சுகளும்
ஓட்டமெடுக்க முயல்வதும்
ஏட்டில் எழுதப்படுவது
போட்டியில் நின்றது

இருந்தும்,
சத்தியத்தின்
பந்து வீச்சு களுக்கு
ஆட முடியாமல்
அசத்தியம்
நொந்து போனது

இதனால்,
ஓட்டமேதும் எடுக்காது ஆட்டமிழப்பதே
ஒவ்வொரு வருடமும்
அரங்கேற்றப்படுகிறது

தகராறுகளை
அவதாரம்
எடுக்க விடாது
இருசாராரும்
சத்தியத்தையும்
அசத்தியத்தை யும்
அலசுவதே
அவசியமாகிறது

இதனால்,
அறிவிலிகள்
மக்களை
அழிவுப்பாதைக்கு
அழைப்பு விடுப்பது
களைந்து போக
கருணை காட்டு 'றஹ்மானே!

**தர்ஹா நகர் ஸுஹம்ஸா**

# நீங்காத நினைவுகள்

சிலர் கெஞ்சி பேசும் உண்மையிலும்
சிலர் கொஞ்சி கொல்லும் பொய்களிலும்
பேதைகளானவர்களின்
பட்டியலில் அடிவிழுந்த நோயாளியாக
நானும் ஒருவனாய்...

வலிகள் பல இருந்தும்
விடியாதோ என்ற ஏக்கத்தில்
நாள் முழுதும் நலம் தேடி
ஓடிக்கொண்டுதான் இருக்கின்றேன்....
முடிந்த பாடில்லை.

முந்நூறு நாட்களாய்
வலிகளினால்
இதய விழிகளுக்கு
இரவு தூக்கமும் இல்லை
என் ஆத்ம நிழலுக்கு
விடியலுமில்லை.....

சொல்லிப்புரியாது
சில நோய்கள் எதுவாயினும்
காயங்கள் கண்டு
பட்டுப்போன மரத்திற்குதானே தெரியும்
உளியின் வலி என்னவென்று...

இருந்தும் சில நிஜங்களால்
தொலைந்து போகும்
மௌனங்கள் கூட மனங்களிலும்
மரணிக்கும் வரை
நம்மீது ஏதோ ஒரு பக்கத்தில்
கறைபடிந்த பாசிகளாய்
தங்கிக்கொண்டுதான் இருக்கிறது....
இன்று வரை
நீங்காத சில தேன்
நிறைந்த நினைவுகள்...

**கனா காதலன்**
பாலமுனை ஆஷிக்.

# வாழ்த்துகிறோம் அன்பின் இனாயதுள்ளாஹ் ஸேரை



நற்பணி நிறைவு நாளில்
நினைவுத்தேர் நின்று பின்னிழுக்கின்றது
ஐயாறு ஆண்டுகளுக்கும் மேலாய்
நீர் ஆற்றிய சேவைதனை
ஐந்தே நிமிடங்களில்
சொல்லில் வடித்திடவியலாது

ஸாஹிரா கண்ட நல்லாசான் நீர்
ஸாஹிரா கண்ட நல்லதிபரும் நீரே..
கற்பித்தலோடு நிர்வாகமும் பாங்குடனே
கைவந்த கலையாய் மிளிரக் கண்டோம்

உடையில் எளிமை கண்ணியம் காட்ட
கடமையில் நேர்மை மிளிர
உதட்டில் வாய்மை புரள
நடையில் நிதானம் நிற்க..
கற்பித்தலில் வாண்மை மின்னிட
பேச்சில் கரிசனை கரைபுரண்டோடிட
என்று வாழும் நும் குணாதிசயங்களால்
என்றென்றும் நம் உள்ளங்களில்
சம்மணமிட்டு அமர்ந்திருப்பீர்

இறைபணியில் ஒன்றிணைந்தோம்
தஃவாவின் மணிமுடியாய் நீர் நின்று
வழிகாட்டிட பல பயன் கண்டோம்

பொன்னே போல் நீர் பகரும் அறிவுரைகள்
எம் வாழ்வின் பக்கங்களை அர்த்தப்படுத்தின.

தளை நீங்கிப் பறக்கும்
சிறு பறவையென
ஓய்வு நாடிப் போகின்றீர்
நீடித்த ஆயுளுடன்
நோய்நொடியின்றி
நிறைவாய் வாழ்வாங்கு வாழ
இருகரமேந்துகின்றோம்
வாழ்க பல்லாண்டு....

உங்கள் மாணவன்
**அஷ்கர் அமீன்**

# காய்த்தோய்ந்த மரங்கள்



வான்வெளியை நோக்கி
வளர்ந்து
சுட்டெரிக்கும் சூரியனின்
வெப்பத்தில் நாளும்
யுகங்கள் கடந்து
பெரு விருட்சமான சில
மரங்கள் இன்னும்
ஆயுள் முடிந்தும்
ஆங்காங்கே
பட்டமரங்களாகி நிற்கின்றன

பச்சைத் தோரணமாய்
பூக்களோடு புன்னகைத்து
கனிமரமெனக்
பூத்தது, காய்த்தது,
நன்றாக வளர்ந்தது
நகர்விலாத
நிழலைத் தந்தெமக்கு
ஒரு புதிரான நண்பர்களாகவுமானது

குளிர்காற்றும்
குடிசைக் காவலரணும்,
பட்சிகள் பாசறையும்,
பசியாற்றும் உணவுக்கூடங்களும் கூட
நாளைய சந்ததிகளை

பிறக்கச் செய்த வித்துக்களும்
பருவங்களோடு சண்டையிட்டு
கிளையசைத்து நம் துயிலுக்கு
வளியைத் தந்தவர்களும் தான்

ஒருநாள்
வளியைத்தர மறந்தது,
கனிகளையெல்லாம் சொரிந்தது,
பூத்த பூக்களையெல்லாம்
உதிர்த்தது,
இலைகளையெல்லாம் பழுத்துக் கொட்டியது,
இரைக்காக இடமமைத்த
பட்சிகள்
குடிப்பெயர்வும் செய்தது,

முதுமையான சுருக்கங்கள்
விரிந்து கொண்டது,
வேரிலிருந்து கட்டைகளும்
உருக்குலைந்து போனது,
கிளைவிட்ட கொப்புகள்
நரைத்தது
காரணமே தெரியவில்லை

அவைகள்அதுவதுவாகத் தமக்குள்
உரையாடுகின்றன

ஆரம்பத்தில் எங்களிலிருந்து
அத்தனையையும்
அனுபவித்துவிட்டார்கள்
ஆனால் ஏனோ
எங்களை இன்னும்
இருந்த இடமுமிலாது
அழிக்கவில்லை?

நாங்கள்தான் இனி
நபுன்சகிகள் நிலையை
அடைந்துவிட்டோம்
இனி நம்மை
அவர்கள்
விறகுகளாக்கிக் கொள்ளலாம்
தானே?

**"ஏரூர் தாஸன்"**

# உத்தம நபியின் உதயம்



அன்புடன் கருணையும்
அளவாற பெற்றவர்
அதிசயம் புரிந்திடும்
அதிதூதக அற்புதர்
பொங்கும் இனிமைதனை
பூமிக்கு தந்தவர்
எங்கும் இன்பமுர
இன்னுயிர் ஈத்தவர்
இப்புவி பிறந்தவர்

எல்லையில்லா அன்பாகி
எங்கும் கலந்தவர்
ஏந்தல் நபியாகி
நம்மை நேசித்தவர்
விண்மீன்கள் மலரந்;திட
பொன்னான வேளையில்
தொல்லைகள் தீர்ந்திட
தூய நபி தோன்றினார்

அருஷின் மீது ஜோதியாக
முன்பு மிலிர்ந்தார்
ஆமினாவின் மணிவயிற்றுள்
பின்பு வளர்ந்தார்
சிறப்பு மேவும் மக்கா நகரில்
கண்மணியாய் பிறந்தார்
ரஹ்மத்துல் ஆலமீனாய்
அகிலத்தில் அவதரித்தார்

உம்மி நபியவர்கள் உலகம்
போற்றும் உத்தமராய்
உலக வரலாற்று நாயகராக
திகழ்ந்தார்
தாஹா நபியவர்களது
தார்மீக சிந்தனைகள்
தாரணி எங்கும் தாரகையால்
திகழ்ந்ததுவே

உண்மை அன்பு கருணையினை
உலகறிந்திடச் சொன்ன நபி
பெண்மையின் மென்மை பேணிடவே

பெருமை சேர்த்த ஏந்தல் நபி
ஐவேளை தினம் தொழுது காட்டிய
அருமை நபி
இறைவேதம் எமக்களித்த
பயகம்பர் நபி
அறியாமை அகற்றிய
அண்ணல் நபி

சுவனத்து பேரெழிலே சுந்தர மாநபியே
வதனத்தில் நூரொளியே
மங்காத மாணிக்கமே
பொற்குணத்தின் பொக்கிஷமே
நற்குணத்தின் நானிலமே
தூயோன் தோழர் நாயகமே
தூயோர் நெஞ்சில் தாயகமே

வானவரும் யாவரும் வியந்து போற்றும்
பேரழகே காண ஏங்கும் நம் உள்ளம்
வீற்றிருக்கும் பேரரசே
திருமறையின் தாயகமே
தீன் மணக்கும் நாயகமே
திரும்பிய திசையெல்லாம் உம்புகழே
மக்காவில் உதித்த நீங்கள்
மங்காத ஒளியே தாங்கள்

மலையையே தங்கமாக்கித்தர நாயன்
தயாராக இருந்த போதும் இருப்பதே
போதும் என்ற குணம் காட்டி அரைகுறை
உணவுண்டு தியாக செம்மலாக
வாழ்ந்தீர்களே

மனித குலம் வாழ மனிதராய் பிறந்த
மனிதரில் புனிதரே
மண்ணில் மடமை இருளகற்றி
மார்க்க ஒளியேற்றி வாழ்ந்த நபிநாதரே
வறுமையிலும் வாரித் தந்த வள்ளலே
உங்கள் மணிமொழிகள் தேன்
சொட்டும் கனிகளே
உங்கள் நல்வழி அறிவுச்
சோலையின் பொக்கிஷமே
உங்கள் பொன் மேனி மின்னி
வந்த வான் நிலவே
மீலாத் தரும் படிப்பினையை
மறக்காது நெஞ்சேற்று
குறையில்லா வாழ்வதற்கு குண நபி
தியாகத்தின் வழியில் நடக்க
வல்ல நாயன் அருள்புரிவானாக

சல்லி அலா முஹம்மதுவே
என்று ஸலாம் சொல்வோம்
உங்கள் மீதிலே

**தேசகீர்த்தி எம் நிஸாம்தீன்**

# சிறுவர் தினம்



பள்ளிப் பாலர்களாய்
துள்ளித் திரியும் வயது இது
செல்லச் சிரிப்போடும்
கள்ளங் கபடமற்ற
உன்னதமிக்க பருவமிது

பொருளாதாரத்தால் நழிவுற்ற
இலங்கையிதை
வாழ்வாதார
மேம்பாடடையச் செய்யும்
நாளைய தலைவர்களாய்
நாமம் கொண்டு
நடை போடவிருக்கும்
வைரச் சிற்பிகள் இவரகள்

கல்விதனை முதலீடாய்க் கொண்டு
கேளி செய்யும் நாடுகளுக்குள்
இலங்கையர்கள் உயர்ந்தவர்கள்
நாமிருக்கு மட்டும்
நாளைய இலங்கைத் திருநாட்டை
நானிலம் போற்ற வாழ வைப்போம்

வளர்க கல்விச்சிறார்கள்
போசனையே பலம்
வேண்டாம் போர்க்களம்
வாழட்டும் சிறுவர் உலகக் கல்விக் களம்.

வாழ்க

கவிஞர், ஆசிரியர்
**அ. ல. மு. றினாஸ்**
தி /கிண்ணியா மத்திய கல்லூரி

# நோயாளிகளுக்கு இலவச போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்தும்

# நவலோக்க மருத்துவமனை குழுமம்

NAWALOKA HOSPITALS

முன்னோடி சுகாதார சேவைகள் வழங்குநரான நவலோகா மருத்துவமனைக் குழுமம், நோயாளர்களின் நலனையும் மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் கருத்தில் கொண்டு அதற்கு நிவாரணம் அளிக்கும் ஒரு முயற்சியாக, வெளி நோயாளர் பிரிவு (OPD), கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் நோயாளிகளை வீட்டிலிருந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கும் வீட்டிற்கு கொண்டு சென்று விடுவதற்கும் இலவச போக்குவரத்து சேவையை அறிமுகப்படுத்துவதாக அண்மையில் அறிவித்துள்ளது.

தற்போது, போக்குவரத்தை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் நாட்டில் COVID நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், பல நோயாளிகள் தங்கள் சுகாதாரத் தேவைகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையில், இந்த முயற்சி மிகவும் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாடளாவிய ரீதியில் சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நோயாளர்களுக்கு இலவச ஆம்புலன்ஸ் சேவையை வழங்கவும் நவலோக வைத்தியசாலை குழுமம் செயற்பட்டு வருகின்றது.

“நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால், நோயாளிகள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த சூழ்நிலையால், பலர் மருத்துவரிடம் செல்லவோ, மருத்துவமனைக்கு செல்லவோ விரும்புவதில்லை. ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நோயாளிகள் தங்களுக்குத் தேவையான சிகிச்சையை சரியான நேரத்தில் பெறுவதை உறுதிசெய்யும் வகையில் இந்தச் சேவை செயல்படுத்தப்பட்டு வருகிறது.”

"நோயாளிகளுக்கு எப்போதும் முதலிடம் கொடுக்கும் பொறுப்பான தனியார் சுகாதார சேவை வழங்குநராக, நவலோக மருத்துவமனைகள் குழு இந்த சவாலான சூழ்நிலையை வலிமையுடன் எதிர்கொண்டு நோயாளிகளின் நல்வாழ்வை உறுதிப்படுத்த பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஆன்லைன் மருத்துவ ஆலோசனைகள் முதல் மருத்துவப் பதிவுகள் விநியோகம் வரை, நாங்கள் எங்கள் பொறுப்பை சரியாக நிறைவேற்றுகிறோம். இந்த இக்கட்டான காலக்கட்டத்தில், எமது மக்களின் உடல்நிலையை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஆறுதல் கூறி, அவர்களுடன் சேர்ந்து எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம்.” என நவலோக மருத்துவமனை குழுமத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் ரசிக திலகரத்ன தெரிவித்தார்.

## தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்



# Coca-Cola Sri Lanka நுகர்வோருக்கு

## பெரிய திருப்பியளிக்கக்கூடிய கண்ணாடி போத்தல்களை அறிமுகப்படுத்துகிறது

CocaCola Sri Lanka அனுபவத்தை மேம்படுத்துவதற்கும் மலிவு விலையில் விருப்பத் தெரிவுகளை வழங்குவதற்கும் புதிய வடிவமைப்பு மற்றும் புத்துணர்ச்சியூட்டிடும் தோற்றத்துடன் Returnable Glass Bottles (LRGB) என பெயரிடப்பட்ட திருப்பியளிக்கக்கூடிய கண்ணாடி போத்தல்களை அறிமுகப்படுத்துகிறது. இது பாக்கெட்டுக்கும்; இந்த பூமிக்கும் நல்லது என்ற இடத்தில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

CocaCola கண்ணாடி போத்தல்களில அமைந்துள்ள் உலகில் தனித்துவமான வடிவங்களில் ஒன்றாகும். போத்தலின் வரிவரியாக அமைந்துள்ள தனித்துமான வடிவமைப்புச் சின்னமானது கிளசிக் வடிவமைப்பு என உலகளவில் பாராட்டு பெற்றுள்ளதுடன் பல தசாப்தங்களாக கலை, இசை மற்றும் விளம்பரங்களில் கொண்டாடப்பட்டும் வருகிறது. இவ்வடிவத்தைக் கொண்ட போத்தல் எப்பொழுதும் ஊழ உயஊழடய உடன் தொடர்புடையதாகவே இருக்கும். ஆனால் நிறுவனமானது எப்போதும் அதன் நுகர்வோர் தேவைகளை பூர்த்தி செய்திடும் பொருட்டு தொடர்ந்தும் புத்தாக்கங்களை செய்து கொண்டே இருக்கும்.




# OCL Sewa Abhiman 2022' Loyalty விருதுகள் விழாவில் நீண்ட கால சேவை கொண்ட 145 ஊழியர்களை கௌரவித்த Ocean Lanka

Ocean Lanka தனியார் நிறுவனம், இலங்கையின் மிகப் பெரும் பின்னல் துணி உற்பத்தி நிறுவனமாகும். அது தனது நீண்டகால சேவை ஊழியர்களின் அசைக்க முடியாத விசுவாசத்தை கௌரவிக்கும் வகையில் ‘OCL Sewa Abhiman 2022’ Loyalty Awards (விசுவாச விருதுகள்) நிகழ்வை அண்மையில் நடாத்தியிருந்தது.

இந்நிகழ்வில் Ocean Lanka நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி Austin Au தனது கருத்துகளைப் பகிர்ந்துகொண்டபோது, “பல வருட அர்ப்பணிப்பு மற்றும் கடமையுணர்வு கொண்ட ஊழியர்களை கொண்டிருப்பது, Ocean Lanka வின் அதிர்ஷ்டமாகும். அவ்வாறான ஊழியர்களின் விசுவாசம், நிறுவனம் இன்று அடைந்துள்ள மரியாதைக்கு சான்றாகும். தற்போது வரை, 10 வருடங்களுக்கும் மேலான சேவையை நிறைவு செய்துள்ள 788 ஊழியர்கள் Ocean Lanka வில் கடமையாற்றி வருகின்றனர். இது மொத்த பணியாளர்களில் சுமார் 41% ஆகும். மேலும் 190 பேர் 20 ஆண்டுகளுக்கும் மேலான சேவையை பூர்த்தி செய்துள்ளனர். இது மொத்த ஊழியர்களில் 10% ஆகும். குறிப்பாக தற்போதைய பொருளாதார நிச்சயமற்ற நிலைக்கு மத்தியில் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சகிப்புத்தன்மையை நிறுவனம் மனதார பாராட்டுகிறது." என்றார்.

‘OCL Sewa Abhiman 2022’ Loyalty விருதுகளானவை, Ocean Lanka நிறுவனத்தின் மிக முக்கியமான பணியாளர் அங்கீகார நிகழ்வாகும். Ocean Lanka நிறுவனம், அதன் ஊழியர்கள் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் விசுவாசத்திற்கு மதிப்பளிக்கிறது. தமது நீண்ட சேவைக்காக கௌரவமளிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து அதிகரித்து வருவது ஊக்கத்தை அளிக்கிறது.

ஊக்கத்தொகைகளை ஒதுக்கீடு செய்தல், ஊழியர்கள் தங்களால் முடிந்த உச்சபட்ச திறனை வெளிக்காட்டுவதற்காக அவர்களை ஆர்வமூட்டுதல் தொடர்பான நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக, தனது ஊழியர்களின் தொழில் சார் மேம்பாடு மற்றும் விசுவாசத்திற்காக, Ocean Lanka பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.

# LMD 100 தர வரிசையில் மீண்டும் உயர்வான இடத்தில் கொமர்ஷல் வங்கி

கொண்ட கூட்டாண்மைகளுக்கு மத்தியில் கடந்த மூன்று தசாப்த காலமாக அது தனக்கென பிரத்தியேகமானதோர் இடத்தை தக்க வைத்து வருகின்றது.

COMMERCIAL BANK

LMD 100ன் மிக அண்மிய பதிப்பில் கொமர்ஷல் வங்கி மீண்டும் அதி உயர் தர வரிசையில் இடம் பிடித்துள்ளது. இந்த உயர் தர வரிசையில் மிகச் சிறந்த பத்து கம்பனிகள் வரிசையில் இடம்பிடித்துள்ள ஒரேயொரு வங்கியாகவும் கொமர்ஷல் வங்கி காணப்படுகின்றது. இந்த தர வரிசையானது உலகளாவிய குழசவரநெ 500 இன் இலங்கை பதிப்பு என மிகவும் பெருமையோடு நோக்கப்படுவதாகும்.

29 வருடங்களுக்கு முன் இந்த தர வரிசை அறிமுகமானது முதல் ஒவ்வொரு வருடமும் வங்கி உயர் தரமான கூட்டாண்மை நிறுவனங்கள் வரிசையில் முதல் பத்து இடங்களில் ஒன்றை தொடர்ந்து தனக்கென தக்கவைத்து வருகின்றது. 2021 – 22 காலப்பகுதியில் வங்கி ஈட்டிய அதிக வருமானம் மற்றும் இலாபம் என்பன காரணமாக மீணடும் இந்த இடம் கிடைத்துள்ளது.

LMD 100 தர வரிசையில் இலங்கையின் மிகப் பெரிய தனியார் வங்கியான கொமர்ஷல் வங்கி ஒட்டுமொத்த வருவாயில் 7வது இடத்திலும், நாட்டிலுள்ள பெரிய வர்த்தகக் குழுமங்களுக்கு இடையிலான இலாபங்களுக்கு மத்தியில் 6வது இடத்திலும் உள்ளது. இலங்கையில் பட்டியலிடப்பட்டுள்ள கம்பனிகளுக்கு திருப்புமுனையான உள்ள ஒரு காலகட்டத்தில் வங்கியின் உறுதியான பண்பை வெளிப்படுத்தும் வகையில் இந்தத் தெரிவு அமைந்துள்ளதாக இந்த சஞ்சிகை வர்ணித்துள்ளது.

LMD 100ல் அதி உயர் மட்டத்தில் தொடர்ந்து இடம்பிடித்து வருகின்றமை பற்றி கருத்து வெளியிட்ட வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க “அசைக்க முடியாத ஒரு உறுதியான தன்மையை ஒரு வங்கியின் வாடிக்கையாளர்களும் பங்காளர்களும் எதிர்ப்பார்க்கின்றனர். குறிப்பாக சவால்களும் மாற்றங்களும்; மிக்க ஒரு காலப்பகுதியில். இந்த விடயத்தில் கொமர்ஷல் வங்கியின் சாதனைகள் மகத்தானவை. நாட்டில் பெரிய பன்முகத்தன்மை அத்தோடு டுஆனு 100 தெரிவில், அது ஆரம்பிக்கப்பட்டது முதல் வங்கிப் பிரிவில் அது தலைமை தாங்கியும் நிற்கின்றது” என்று கூறினார்

LMD 100 தரப்படுத்தலுக்குள் நாட்டில் உள்ள தொலைத்தொடர்பு, சில்லறை விற்பனை, காப்புறுதி என்பனவற்றோடு இன்னும் பல பிரிவுகளும் பட்டியலிடப்பட்டுள்ள வங்கிகளும் அடங்கி உள்ளன.

இலங்கையின் முதல் 100 கார்பன் பாவனையினை குறைத்த வங்கி, உலகின் தலைசிறந்த 1000 வங்கிகளில் தொடர்ந்தும் 12 வருடங்களாக பட்டியலிடப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கியாகும்.

இலங்கையின் மிகப் பெரிய நிதித் தீர்வுகள் வழங்குநரான HNB PLC, பல்வேறு சலுகைகள் உட்பட பிரத்தியேக தவணைப் பெக்கேஜ்களை வழங்க Micro Cars Limited உடன் கைகோர்த்துள்ளதோடு SAIC Almaz 7சீட்டர் SUV மற்றும்




# மைக்ரோ கார்ஸ் (பிரைவேட்) லிமிடெட் உடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளும் HNB

Proton Saga Sedan காரை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களையும் வழங்குகின்றது.

இந்த கூட்டாண்மையானது தங்களது கனவு வாகனத்தை வாங்க விரும்புவோருக்கு மதிப்பு மிக்க வாடிக்கையாளர் சேவையை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது, அதே நேரத்தில் இரு நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதன் மூலம் அவர்களின் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த தவணை Packகளை வழங்குகிறது.

HNB AGM PFS காஞ்சனா கருணாகம, HNB லீசிங் பிரிவின் தலைவர் சுசித் பெரேரா, Micro Cars தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதி லோரன்ஸ் பெரேரா, Micro Cars குழுமத்தின் பணிப்பாளர் அசேல லிஹினிகடுவ, Micro Cars விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் ரவிந்து டி சில்வா மற்றும் வாடிக்கையாளர் உறவுகள் மேம்பாடுகள் தலைவர் ஜேக்கப் நிஷாந்தன் ஆகியோரின் பங்கேற்பில் Micro Cars தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் இரு நிறுவனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

"நாங்கள் Micro Cars மற்றும் எங்கள் பரஸ்பர வாடிக்கையாளர் தளத்துடனான எங்கள் உறவை பல ஆண்டுகளாக பலப்படுத்தியுள்ளோம், அவர்களின் கனவு வாகனத்திற்கு முதலீடு செய்வதற்கான தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட தீர்வுகளை வழங்குகிறோம். எனவே, அவர்களுடன் மீண்டும் இந்த பயணத்தை மேற்கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இந்த தனித்துவமான வாய்ப்பை எங்கள் வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவார்கள் என்று நம்புகிறோம்," என HNB AGM PFS காஞ்சன கருணாகம தெரிவித்தார்.




# SLT–MOBITEL தேசிய வியாபார தொலைபேசிக் கோவையினால் மேம்படுத்தப்பட்ட eDirectory மற்றும் இணையத்தளம் வெளியீடு

தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநரான SLTMOBITEL இன் முழு உரிமையாண்மையின் கீழ் இயங்கும், SLT டிஜிட்டல் சேர்விசஸ் (Pvt) லிமிடெட் (SLTDIGITAL), பிந்திய மெருகேற்றம் செய்யப்பட்ட தேசிய வியாபார கோவையான eDirectory மற்றும் இணையத்தளத்தை அண்மையில் அறிமுகம் செய்திருந்தது.

மேம்படுத்தப்பட்ட eDirectory மற்றும் இணையத்தளத்தினூடாக வாடிக்கையாளர்களுக்கு மற்றும் விற்பனையாளர்களுக்கு, இலங்கையின் அதிகளவு மெருகேற்றம் செய்யப்பட்ட வியாபார தொலைபேசி விவரக் கோவை ஆதாரம் என அதிகளவு பெறுமதி சேர்ப்பு வழங்கப்படுகின்றது. புதிய வெளியீட்டினூடாக ‘Power of True Local Search’ என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேம்படுத்திய www.rainbowpages.lk ஒன்லைன் கட்டமைப்பினூடாக, தினசரி 10,000 ஒன்லைன் பார்வையாளர்கள் கவரப்படுவதுடன், இலங்கையின் அதிகளவு செம்மையாக்கம் செய்யப்பட்ட தேடல் தளமாக (optimised search engine) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

நுண், சிறு மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களின் பிரசன்னத்தை மேம்படுத்தும் வகையில், மேம்படுத்தப்பட்ட தேசிய வியாபார தொலைபேசி விவரக் கோவையினால், உறுதி செய்யப்பட்ட தொடர்பாடல் தகவல்கள் வழங்கப்படுவதுடன், இந்த நிறுவனங்களுக்கு பெருமளவு தோற்றப்பாட்டையும் இலகுவான வாடிக்கையாளர் அணுகலையும் வழங்குகின்றது. Business to Business (B2B) அடங்கலான விற்பனையாளர்களுக்கு Search Engine Optimization (SEO) மற்றும் Search Engine Marketing (SEM) போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய வசதிகள் காணப்படுவதால், விற்பனை அதிகரித்துக் கொள்வது மற்றும் அதிகளவு வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.